# 3

## நியாயாதிபதிகள், ரூத், 1 சாமுவேல் மற்றும் 2 சாமுவேல்

**தேவனுடைய ராஜ்ஜியம்**

**Judges through Samuel**
Booklet - 3
Tamil

# நியாயாதிபதிகள், ரூத், 1 சாமுவேல் மற்றும் 2 சாமுவேல்

புத்தகம் - 3

© IBL
2003

Cover Credit : Cynthia Kingston
Printed by : Creative Enterprises

For additional booklets write to :

**India Bible Literature**
67, Beracah Road, Kilpauk
Chennai - 600 010.

Ph : 26425166 Fax : 26428298
E-mail : ibl.maa@iblchennai.org

**வேத பாடசாலை**
*67, பராக்கா ரோடு,*
*கீழ்ப்பாக்கம்*
*சென்னை - 600 010.*

அத்தியாயம் - 1

# நியாயாதிபதிகளின் புத்தகம்

## மதத்தைவிட்டு விலகிச் செல்லுவதின் பொறுக்க முடியாதத் துன்பம்

நியாயாதிபதிகளின் புத்தகம் எபிரெய வரலாற்றின் நானூறு ஆண்டுகளை முதலிலிருந்து கடைசிவரை கூறுகிறது. நியாயாதி பதிகளின் புத்தகத்தில் முதலில் யோசுவாவின் மரணத்தைப் பற்றியும், பின்பு அவன் மரணத்தைத் தொடர்ந்து தலைமைத்துவம் குறைவுபடு வதையும் காண்கிறோம். யோசுவா தனக்குப் பின்னால் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி யாரையும் பயிற்றுவிக்கவில்லை. ஒரு வகையில், நியாதிபதிகளின் புத்தகம், யோசுவா இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து பயிற்றுவிக்காததால் அவர்கள் எவ்வளவு தூரம் நம்பிக்கையிழந்து காணப்பட்டனர் என்பதை விவரிக்கிறது. நியாயாதிபதிகளின் புத்தகம் முழுவதிலும் தேவனுடைய மக்களை வழிநடத்தும் நல்ல நியாயாதிபதிகளும் எவ்வாறு தலைவர் களை உருவாக்கி அவர்கள் தரிசனத்தைத் தொடர்வதற்கு உதவுவதில் தவறிவிட்டனர் என்று நாம் காண்கிறோம்.

நியாயாதிபதிகளின் புத்தகத்தில் முக்கிய வசனம், வரலாற்றின் இந்தக் காலத்தில் இஸ்ரவேலரின் ராஜா யாருமில்லை எனக் கூறுகிறது. ‘‘அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தான்’’ (நியாயாதிபதிகள் 17:5-7) என்று வாசிக்கிறோம். அநேகக் கல்வி மான்கள் நியாயாதிபதிகளின் புத்தகத்தை எழுதியவர் சாமுவேல் என்று நம்புகின்றனர். நியாயாதிபதிகளின் காலத்தில் ராஜா இல்லாமலி ருந்ததால், அரசர்கள் ஆண்ட காலத்திலிருந்து பின்னோக்கிப் பார்த்து, இதன் ஆசிரியர் இந்தப் புத்தகத்தை எழுதினார் என்று கருதலாம். இஸ்ர வேலரை நியாயாதிபதிகள் அரசாண்ட காலம் எபிரெய வரலாற்றின் இருண்ட காலம் எனலாம்.

நியாயாதிபதிகளின் தியான செய்தி ‘‘விசுவாசத்தை விட்டு விலகிச் செல்லுதல்’’ (apostasy) என்ற அடிப்படைப் பிரச்சினையோடு இடைபடுகிறது. ‘‘விசுவாசத்தை விட்டு விலகிச் செல்லுதல்’’ என்ற சொற்தொகுதி, ‘‘விலகி நிற்பது’’ என்ற அர்த்தமுடையது. சிலவேளை

களில், இந்தச் சொற்தொகுதி விசுவாசத்தின் அர்ப்பணிப்பிலிருந்து ''தூரமாய் சென்று விழுந்துவிடுவது'' என்ற அர்த்தமுடையது. யோசுவா புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து ஒரு பயபக்தியோடு கூடிய உடன் படிக்கையில் தங்கள் விசுவாசத்தை உறுதிபடுத்தினர். யோசுவா, நீங்களும் உங்கள் வீட்டாரும் சரியானதைத் தெரிந்துகொள்ள வேண்டும், ''நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்'' என்றான். அவர்கள் தேவனுக்கும் யோசுவாவுக்கும், ''நாங்கள் தேவனுக்கு முதலிடம் கொடுப்போம். தேவனுக்கு ஊழியஞ் செய்து அவருக்குக் கீழ்ப்படிவதையே தெரிந்து கொள்ளுவோம்'' என்று முக்கியமாக உறுதியளித்தனர்.

அவர்கள் கர்த்தருக்கு ஊழியஞ்செய்வதைத் தெரிந்து கொண் டார்கள், தங்களுக்காகவும் தங்கள் குடும்பங்களுக்காவும் இந்த நிலை யைத் தெரிந்தெடுத்தனர். விசுவாசத்தை விட்டு விலகிச் செல்லுவது என்பது: (இஸ்ரவேல் புத்திரர் செய்ததைப்போல்) கர்த்தரைப் பின்பற்றும் படி ஒரு முடிவெடுப்பது, அதன்பின் தேவனிட மிருந்தும், தேவனோடு உங்களுக்கிருந்த உடன்படிக்கையிலிருந்தும் விலகி விடுவது அல்லது மீறுவது வாக்குறுதியை மீறுகிறீர்கள் என்பதாகும்.

**தேவனை விட்டு விலகிச் செல்லும் சுற்று**

நியாயாதிபதிகளின் புத்தகத்தில், நானூறு ஆண்டுகளுக்கும் கொஞ்சம் கூடுதலான காலங்களில் ஏழுமுறை இஸ்ரவேல் புத்திரர் தேவனை விட்டு விலகிச் செல்வதையும், திரும்பவும் அவரிடம் வருவதையும் காண்கிறோம். ஒரு கடிகாரத்தின் முகத்தை எடுத்துக் கொள்வீர்களானால் மணியைக்காட்டும் முள்ளும் நிமிடமுள்ளும் பன்னிரெண்டு மணியைக் காட்டும்போது அது தேவனும் இஸ்ரவேலரும் ஒன்றாயிருப்பதைக் காட்டுகிறது. விலகிச் செல்லும் சுற்று துவங்குகிறது. கடிகார முள் ஒரு மணியைக் காட்டும்போது, இஸ்ரவேலர் தேவனுக்குக் கொடுத்த வாக்குறுதியிலிருந்து சிறிது அப்பாற் செல்கின்றனர். இரண்டு மணியைக் காட்டும்போது சன்மார்க்க சீர்கேடும், இதைத் தொடர்ந்து மூன்று மணியில் அரசியல் சீர்கேடும் ஏற்படுகின்றன. நான்கு மணியைக் காட்டும்போது, மூர்க்கமான எதிரி



ஒருவன் தலைகாட்டுகிறான். ஐந்து மணியை முட்கள் காட்டும்போது, அந்த எதிரி இஸ்ரவேலரை மேற்கொள்ளுகிறான். கீழே ஆறு மணியைக் காட்டும்போது, இஸ்ரவேல் புத்திரர், வெற்றியடைந்தவர்களுக்கு அடிமைகளாகின்றனர்.

மணியைக் காட்டும் முள் அடுத்த பக்கம் நகர்ந்து செல்லும்போது, ஏழு மணியளவில் ஆவிக்குரிய எழுப்புதல் ஆரம்பிக்கிறது. தேவனுடைய மக்கள் தேவனிடம் இரக்கத்திற்காகக் கூக்குரலிடு கின்றனர். எட்டு மணியில் தேவன் ஒரு தலைவனை எழுப்புகிறார்; அவர் அவனை அழைத்து, அந்தக் கொடூரமான தலைவனை வீழ்த்தும்படி அவனுக்கு ஆயுதங்களைக் கொடுத்து ஊக்கமளிக்கிறார். அந்தத் தலைவன் ''நியாயாதிபதி'' என்றழைக்கப்பட்டான். ஒன்பது மணிக்கு நியாயாதிபதி, எதிரியைத் தோற்கடிக்கும்படி வழிகளையும் தளவாடங் களையும் ஒன்றாகத் திரட்டுகிறான். பத்துமணியில் ஒரு கலகம் துவங்கி பதினொரு மணியில் வெற்றியடைகின்றனர். வெற்றி பெற்றதும், எதிரியை வீழ்த்தி இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் பன்னிரெண்டு மணியை அடைந்து, மறுபடியும் தேவனுக்கு ஊழியஞ்செய்து அவரில் அன்பு கூருகின்றனர்.

மாறிமாறி வரும் காலங்களில், இந்த அச்சமுறுத்தும் வார்த்தை களை மறுபடியும் வாசிக்கும்வரை எல்லாம் நன்றாயிருந்தன: ''இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து...'' இப்பொழுது நாம் திரும்பத் திரும்ப கர்த்தரை விட்டு விலகிச் செல்லும் சுற்று நடைபெறுகிறது என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சிலவேளைகளில் இஸ்ரவேல் புத்திரருக்கு எண்பது வருட காலம் வரையில் கூட சமாதானம் இருந்தது, அவர்கள் மறுபடியும் கர்த்தரைவிட்டு விலகிச் செல்லும் நிலை ஏற்பட்டது, இது இப்படியாக ஏழுமுறை நடைபெற்றது.

நியாயாதிபதிகளின் புத்தகத்தை நாம் வாசிக்கும் பொழுது குறைந்தபட்சம் இரண்டு தியானங்களும் நடைமுறையில் செயல் படுத்துவதற்குமான காரியங்களிருக்கின்றன. முதலாவதாக அது நம்மைப் பற்றியது. நாம் விசுவாசிப்பவைகளிலிருந்து கீழே விழுந்து விடுவோமா? நாம் கர்த்தரை விட்டு விலகிச் செல்ல முடியுமா? நியாயாதிபதிகளின் புத்தகம், ஆம், அப்படி முடியும் என்று சொல்லுகிறது.

உபாகமப் புத்தகத்திலும், அப்போஸ்தலர் பவுலின் எழுத்துகளிலும் நமக்கு எச்சரிக்கைக் கொடுக்கப்பட்டிருக்கிறது: நிற்கிறவன் தான் விழுந்துவிடாதபடி எச்சரிக்கையாயிருக்கக் கடவன். நாம் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்தினுள் ''நுழைந்து அதைக் கைப்பற்றி விட்டோம் என்பதால் நாம் விசுவாசிப்பதிலிருந்து வீழ்ந்து போகமாட்டோம் என்று கூறிவிட முடியாது. நியாயாதிபதிகளின் புத்தகம் இஸ்ரவேல் புத்திரர் திரும்பத் திரும்ப தேவனை விட்டு விலகி, வீழ்ச்சியடைந்ததைக் காட்டுகிறது. அவர்களைப் போலவே, நாமும் தேவனுக்கு நம்மை ஒப்படைத்து விட்டு, பின்னர் அவருடன் செய்த உடன்படிக்கைகளினின்று வீழ்ந்துவிட்ட நேரங்கள் இருக்கின்றன. நாம் அப்படிச் செய்யும்போது, கொஞ்சம் கொஞ்சமாகத் தேவனைவிட்டு விலகிச் செல்லுவதற்கான உயர்ந்த கிரயத்தை செலுத்த வேண்டும்.

நியாயாதிபதிகளின் இரண்டாவது தியானப் பயிற்சி என்பதை, தேசீய அளவில் தேவனை விட்டு விலகுதல் என்று நாம் அழைக்கலாம். நியாயாதிபதிகளின் புத்தகப்படி அநேக முறை இஸ்ரவேலர் இந்தச் சுற்றைக் கடந்து சென்றதைப்போல, இன்று வேறு தேசங்களும் இந்தச் சுற்றின் வழி போவது சாத்தியமாகும்.

பரிசுத்த பூமி ''தேவனுடைய தலைமைச் செயலகம்'' என்றும், எருசலேம் நகர் உலகத்தின் ஆவிக்குரிய தலைநகரம் என்றும் இருந்த ஒரு காலமுண்டு. ஆனால் ஆவிக்குரியத் தலைவர்கள் தேவனைவிட்டு அப்பால் திரும்பி, இயேசு கிறிஸ்து தாம் மேசியா என்று சொன்னதைப் புறக்கணித்தார்கள். முதல் குருத்தோலை ஞாயிறன்று இயேசு எருசலேமுக்குள் வந்தபொழுது, அவர் மதத் தலைவர்களிடம், ''தேவனுடைய ராஜ்ஜியம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்,'' அதாவது, ஒரு தேசம் தேவனுடைய ராஜ்ஜியத்தின் கனிகளைக் கொடாவிட்டால் தேவன் ''தம்முடையத் தலைமை செயலகத்தை'' மாற்றுவதாகக் கூறினார்.

இயேசு ராஜ்ஜியத்தை இஸ்ரவேல் மதத் தலைவர்களிடமிருந்து எடுத்தபொழுது, அவர் அதைத் தம்முடைய சபைக்குக் கொடுத்தார். அப்படியானால் தேவனைப் பற்றி விலகிச் செல்வதைப் பற்றிய விளக்கமும், எச்சரிப்பும் சபை சார்ந்த கல்லூரிகள், கலாசாலைகள்,



தேவனுடைய வசனங்களைப் போதிப்பதற்காக நிறுவப்பட்ட சமய கல்லூரிகள் ஆகிய எல்லா நிறுவனங்களுக்கும் பொருந்துவதாயிருக்கிறது.

நியாயாதிபதிகளின் புத்தகத்தில் விலகிப்போதலின் விளைவுகள் பற்றிய எச்சரிக்கை தனிமனிதனுக்கும், ஸ்தாபனத்துக்கும், தேசத்துக்கும் போய்ச் சேர வேண்டும். இந்தப் புத்தகத்தின் உட்கருத்து, நாம் எப்பொழுதுமே ''பன்னிரெண்டு மணியில்'' இருந்து கொண்டு தேவன் மீது அன்பு செலுத்தி, அவரை ஆராதித்து, அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பதே.

அத்தியாயம் - 2

## சாதாரண மக்கள் மூலமாக அசாதாரன காரியங்கள்

நியாயாதிபதிகளின் புத்தகத்தில் தேவனைவிட்டு விலகிச் செல்லுவதைப்பற்றிய எச்சரிக்கைகளோடுகூட, நியாயாதிபதிகளின் தனிப்பட்ட வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய அநேக தியான சத்தியங்கள் இருக்கின்றன. இந்த நியாயாதிபதிகள் புத்தகத்தில் சிலரது உயர்ந்த குண இயல்புகளைப் பற்றி ஆராயலாம்.

ஒத்னியேல் முதலாவது நியாயாதிபதி. வேத வசனங்களின்படி, அவன் காலேபின் இளைய சகோதரனின் மகன் என்பது மட்டுமே அவன் அந்த ஸ்தானத்துக்கு வர உதவியது போல் தோன்றுகிறது. ஏகூத் என்ற இரண்டாவது நியாயாதிபதியின் ஒரே நற்சாட்சி அவன் ஒரு இடதுகைப் பழக்கமுடையவன் என்பதே. இஸ்ரவேலின் ஒரு தாயாகிய தெபொராள் என்பவள் மற்றொரு தீர்க்கதரிசி என்று சொல்லப்பட்டிருக்கிறது. தன்னோடுகூட போர்முனைக்குப் போவதற்கு வேண்டிய தைரியத்தை பாராக் என்ற இராணுவ வீரனுக்குக் கொடுத்து அவனைக் கூட்டிச் செல்லுவதற்கு அவள் அதிகச் சிரத்தை எடுத்துக் கொண்டாள். கிதியோன் தேவனால் அழைக்கப்பட்டபொழுது அவன், ''ஆ, என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது, என் தகப்பன் வீட்டில் நான்

எல்லாரிலும் சிறியவன்'' (நியாயாதிபதிகள் 6:15) என்றான். இந்த எல்லா நியாயாதிபதிகளையும் எடுத்துக் கொண்டால் அவர்கள் மிகவும் சாதாரண மனிதர்களே என்பதைக் காண்கிறோம்.

உன்னை நீ ஒரு சாதாரண மனிதன் தான் என்று கருதுகிறாயா? நீ பெரிய தாலந்து உடையவனாகவோ அல்லது சாதனையாளனாகவோ இல்லாததால் தேவன் உன்னைப் பயன்படுத்தமாட்டார், பயன்படுத்த முடியாது என்று யோசிக்கிறாயா? உங்களையும் என்னையும் போன்ற சாதாரண மக்கள் மூலமாக அசாதாரண காரியங்களைச் செய்வதில் தேவன் மகிழ்ச்சியடைகிறார் என்று இந்த நியாயாதிபதிகளின் புத்தகம் காட்டும்.

ஒத்னியேல், காலேபின் இளைய சகோதரனின் மகன். அவனைப் பற்றி வேதாகமம், ''அவன்மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால், அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, யுத்தம்பண்ணப் புறப்பட்டான்; கர்த்தர் மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார்; ஆகையால் அவன் கை கூசான்ரிஷதாயீமின் மேல் பலங்கொண்டது'' (நியாயாதிபதிகள் 3:10) என்று சொல்லுகிறது.

சாதாரண மக்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் மூலமாக அசாதாரண காரியங்களைச் செய்வதில் தேவன் களிகூருகிறார், ஏனென்றால் அவருடைய ஆவி அவர்களை கட்டுப்படுத்துகிறது. இது தான் புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஏகூத் என்ற நியாயாதிபதியின் வாழ்க்கையில் இதைப் பார்க்கிறோம். அவனுடைய ஒரே நற்சாட்சி அவன் இடதுகைப் பழக்கமுடையவன் என்பது மட்டுமே. இஸ்ரவேலர் மோவாபியரால் தோற்கடிக்கப்பட்டனர். எக்லான் என்ற மோவாபின் ராஜா அவர்களைத் தோற்கடித்தான். அந்த நாட்களில் ஒரு தேசம் மற்றொரு தேசத்தைக் கைப்பற்றினால், எப்பொழுதும் அந்த மக்கள் மீது அவர்கள் சுமக்கமுடியாத வரிச்சுமையை சுமத்துவர். இஸ்ரவேலருக்காக வரி கட்டும்படி ஏகூத் மோவாபின் தலைநகரத்துக்கு ஒரு கூட்ட மக்களை நடத்திச் சென்றான். ஏகூத் எக்ளோனின் அரண்மனைக்குள் போய்



தங்கள் வரிகளைக் கட்டினான். இந்தத் தூது கோஷ்டி, போவதற்கு முன்பாகவே, பதினெட்டு அங்குல நீளமுள்ள ஒரு கத்தியை உண்டு பண்ணினான்.

மிகவும் பருமனான எக்லோனுக்கு முன்பாக அவன் நின்றபோது ''ராஜாவே, தேவனிடத்திலிருந்து வந்த ஒரு செய்தியை நான் உமக்குக் கூற வேண்டும்'' என்றான். அதன் பின் அவன் தன் பலமான இடது கையினால் கத்தியை உருவி ராஜாவைக் கொன்றான் என்று வாசிக்கிறோம். அதன்பின் ஏகூத் ஒரு கலகத்தை உண்டுபண்ணி மோவாபியர்களை மேற்கொண்டான். ஏகூத்தைப்பற்றி சொல்லப்பட்ட ஒரே காரியம், அவன் இடதுகைப் பழக்கமுடையவன் என்பதே. அவனுடைய இடது கை மட்டுமே கர்த்தருக்கு அளிக்கக் கூடிய ஒரே காரியமாக இருந்திருக்கக் கூடும். தேவன் அவனை வல்லமையாகப் பயன்படுத்தினார். உங்களுடைய சிறிய பெரிய தாலந்துகளை, தேவனுக்கு அளிக்கிறீர்களா? உங்களுடைய அற்பமான வரங்களையும் தாலந்துகளையும் தேவனுடைய கைகளில் வைப்பீர்களானால், அவர் ஏகூத்தின் இடது கையை பயன்படுத்தியபோல, உங்களையும் பயன்படுத்துவார்.

இந்த விடுதலை பெற்றுக் கொடுத்தவர்கள் பற்றிய கதைகளில் எனக்குப்பிடித்த ஒரு கதை தெபொரா என்ற ஒரு இஸ்ரவேலின் தாயைப் பற்றிய கதை. தெபொராளுக்கு சிறந்த ஆவிக்குரிய வரம் ஒன்றிருந்தது. அவள் ஒரு தீர்க்கதரிசினி. அவள் ஒரு பேரீச்ச மரத்தினடியிலிருந்து தீர்க்கதரிசனம் சொன்னாள்; இஸ்ரவேல் தேசம் முழுவதிலுமுள்ள மக்கள் அவள் தேவனைப்பற்றிச் சொல்லும் செய்திகளைக் கேட்க வருவார்கள்.

ஒரு நாள் அவள் முக்கியமாக பாராக் என்ற பெயருடைய மனிதனிடம், ''நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு, தாபூர் மலைக்குப் போகக் கடவாய் என்றும், நான் யாபீனின் சேனாதிபதியாகிய சிசெராவையும், அவன் ரதங்களையும், அவன் சேனையையும், கிசோன் பள்ளத்தாக்கிலே உன்னிடத்தில் வர இழுத்து, அவனை உன் கையிலே ஒப்புக்கொடுப்பேன் என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவில்லையா என்றாள்'' (நியாயாதிபதிகள் 4:6,7).

பாராக், ''நீ என்னோடேகூட வந்தால் போவேன்; என்னோடேகூட வராவிட்டால் போகமாட்டேன்'' (நியாயாதிபதிகள் 4:7-9) என்றான். அவள் மூலமாக தேவன் உண்மையாகவே இப்படிச் சொல்லியிருந்தால் தேவன் தனக்கு வெற்றியளிப்பார் என்று பாராக்குக்குத் தெரியும். ஒருவேளை தெபொராளைச் சோதிக்க, அவள் உண்மையாகவே தேவனிடமிருந்து கிடைத்த செய்தி என்று விசுவாசிக்கிறாளா என்று காண்பதற்கு அவன், ''என்னோடே வராவிட்டால் போகமாட்டேன்,'' என்று சொல்லியிருக்கலாம். தெபொராள் சம்மதித்தாள், எனினும், ''நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது; கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரீயின் கையில் ஒப்புக் கொடுப்பார்'' (நியாயாதிபதிகள் 4: 8-10) என்று சொல்லி அவனை எச்சரித்தாள். இஸ்ரவேல் மனிதர்களிடம் போருக்குச் செல்லும்படி பாராக் கேட்ட பொழுது, பதினாயிரம் பேர் முன் வந்தார்கள். தெபொராள் சரியாக இப்படி நடக்கும் என்று அவனிடம் சொன்னாள்.

தாபோர் மலையில் போர் நடந்தது. சிசெராவின் தொண்ணூறு ரதவீரர்களையும் தேவன் கலங்கடித்தார். கானானியப் படை பீதிய டைந்தனர். பாராக்கின் படையினர் அவர்களைக் கைப்பற்றினர், சிசெரா ஓட முயற்சித்தான். யாகேல் என்ற பெண் தன் கூடாரத்தில் தங்க இடங்கொடுத்தாள். சீக்கிரமாக அவன் அயர்ந்து தூங்கினான், அவன் தூங்கும்போது யாகேல் ஒரு சுத்தியலையும் கூடார ஆணியையும் கொண்டுவந்து, அவனுடைய தலையைத் தரையோடு ஆணியடித் தாள்.

நியாயாதிபதிகளின் முக்கியமான செய்தி, தேவனுடைய மக்கள் அவரை விட்டு விலகிப்போவதும் அதனால் ஏற்பட்ட பயங்கர விளைவுகளும் என்பதை மறவாதீர்கள். எனினும், நியாயாதிபதிகளின் வாழ்க்கையிலிருந்து தேவன் அற்பமான மக்களைப் பயன்படுத்துகிறார் என்றும் கற்றுக்கொள்ளுகிறோம். உன்னையும் என்னையும் போன்ற சாதாரண மக்களைக் கொண்டு அசாதாரண காரியங்களைச் செய்ய வைப்பதில் தேவன் பிரியமாயிருக்கிறார். ஆவியானவரால் ஆட் கொள்ளப்பட்ட சாதாரண மக்களைக் கொண்டு நம்ப முடியாத ஆச்சரிய மான காரியங்களைத் தேவன் செய்கிறார்.



அத்தியாயம் - 3

## ஒவ்வொரு மனிதனும் தனது இடத்தில்

இந்த எல்லா நியாயாதிபதிகளையும் விட கிதியோன் மிகச் சிறந்தவன். அவனுடைய வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்கள் அநேகம் இருப்பதால், நாம் அவனுடைய வாழ்க்கையைக் கூர்ந்து கவனிப்போம். எடுத்துக்காட்டாக, உங்களுக் குச் சுயமதிப்பு குறைவாயிருந்தால், கிதியோன் தன்னைப்பற்றி என்ன சொல்லுகிறான் என்று பார்ப்போம்: ''இதோ மனோசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்.'' மீதியானியர்கள் இஸ்ரவேலரை மிருகத்தனமாய் கொடூரமாய் தோற்கடித்த வேளையில் அவன் வாழ்ந்து கொண்டிருந்தான். மீதியானியர்களோடு நடந்த யுத்தத்தில் அநேக இஸ்ரவேலர்கள் கொல்லப்பட்டனர், அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் நிலத்தின் விளைச்சலை அழித்து உண்பதற்கு ஒன்றுமில்லாமலாக்கி விட்டார்கள்.

ஏழு ஆண்டுகள், வறுமைக்கும் கொடுமைக்கும் ஆளான அவர்கள் தங்களுக்கு உதவி செய்யும்படிக் கர்த்தரை நோக்கிக் கதறினார்கள். கர்த்தர் அவர்களுக்கு விடுதலை கொண்டுவரும் ஒரு மனிதனை அழைத்தார். அந்த மனிதன் தான் கிதியோன். கர்த்தருடைய தூதனானவர் வந்து ஒப்ராவிலிருக்கும் யோவாசுக்குச் சொந்தமான ஒரு கர்வாலி மரத்தின்கீழ் உட்கார்ந்தார் என்று வாசிக்கிறோம். யோவாசின் மகனாகிய கிதியோன் கோதுமையை மீதியானரின் கையிலிருந்து தப்புவிப்பதற்காக ஆலைக்குச் சமீபமாய் போரடித்தான். கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: ''பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்'' என்றார். கிதியோன் அதற்கு, ''ஆ, என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்?... எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித் துச் சொன்ன அவருடைய அற்புதங்கள் எல்லாம் எங்கே?'' (நியாயாதி பதிகள் 6:12-14) என்பதாயிருந்தது.

செங்கடலைக் கடந்து அநேக ஆண்டுகள் கடந்துவிட்டன; மோசேயின் காலத்தில் தேவன் செய்ததுபோன்ற அற்புதங்களை தேவன்

இப்பொழுது தம் மக்களுக்குச் செய்வாரா என்று தெரிந்துகொள்ள கிதியோன் விரும்பினான். கர்த்தருடைய தூதன் அதைத் தெரிந்து கொள்ள விரும்பினார். அவன் ஒரு கண்ணாடியில் பார்க்க வேண்டும் என்று சொன்னார். மறுபடியும் இந்தப் புத்தகத்தின் மூலக்கருத்து அழுத்த மாகச் சொல்லப்படுவதை நாம் காண்கிறோம். பெலவீனத்திலும், பெலவீனமான கோத்திரத்திலிருந்து எளியவனான ஒரு சாதாரண மனிதனைப் பயன்படுத்தி அசாதாரண இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதத்தை இந்த விடுதலைக்காக செயல்பட அவர் திட்டமிட்டிருக் கிறார், அதைப்பார்த்து அவர் மகிழ்ச்சியடையப் போகிறார்.

தேவன் உங்களைத் தமக்காக ஒரு வேலை செய்யும்படி அழைக்கும்போது, தேவனே உங்களை அனுப்பினாரென்றும், அவர் உங்களோடிருப்பார் என்றும் உணர்ந்து கொண்டு அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்பது முக்கியம். இந்த நியாயாதிபதிகளும் மோசேயைப் போன்ற மிகப்பெரிய விடுதலை வீரரும் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது போல நீங்களும் சிறிது ஆவிக்குரிய இரகசியங் களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்த ஆவிக்குரிய இரகசியங்கள்: நீங்கள் யார், எப்படிப்பட்டவர் என்பது முக்கியமல்ல, தேவன் யார், எப்படிப்பட்டவர் என்பதே முக்கியம். அது நீ என்ன செய்ய முடியும் என்பதைப் பொறுத்தல்ல; தேவன் என்ன செய்வார் என்பதைப் பொறுத்ததே. உனக்கு என்ன வேண்டும் என்பதைப் பற்றியதல்ல, தேவன் எதை விரும்புகிறார் என்பதைப் பற்றியது. அற்புதங்கள் நடைபெறும்போது, திரும்பிப் பார்த்து, ''அது நான் செய்ததல்ல, தேவன் செய்தது ஏனென்றால் தேவன் என்னை அனுப்பினார், தேவன் என்னோடிருந்தார்'' என்று சொல்லுவீர்கள்.

தேவன் உயர்ந்த பரிசுத்தவான்களை தேடிக் கொண்டிருக்க வில்லை. அவர் மிகவும் பலவீனர்களை கடைநிலையிலுள்ளவர் களிலேயே பெரும்பாலும் தேடுகிறார், ஏனெனில் அப்படிப்பட்டவர்கள் மோசேயும் மற்ற தேவனுடைய மக்களின் தலைவர்களும் கற்றுக் கொண்ட ஆவிக்குரிய இரகசியங்களை கற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள். மக்கள் பெரிய பரிசுத்தவான்களாக இருந்தால் எப்படி அவர்கள் ஆவிக்குரிய இரகசியங்களை மக்கள் கற்றுக்கொள்ள முடியும்? அவர்கள் தேவனில் நம்பிக்கை வைப்பதற்குப்



பதிலாக தங்கள் மீதே நம்பிக்கை வைப்பார்கள். ஆனால் அவர்கள் பெலவீனரில் கடை நிலையிலிருப்பவர்களாயிருந்தால் தேவன் மீது நம்பிக்கை வைக்கும் படி அவர்களை மாற்ற முடியும். தேவன் நியாயாதிபதிகளின் புத்தகத்தில் மறுபடியும் மறுபடியுமாக எழுப்பிய தலைவர் இந்த வகையைச் சேர்ந்தவர்களே.

மீதியானியர்களை வீழ்த்தும்படி தேவன் கிதியோனைக் கூப்பிட்ட பொழுது, அங்கே லட்சக்கணக்கான மீதியானியர்கள் இருந்தனர். அவர்கள் திரள், வெட்டுக்கிளிகளின் வாதையைப் போன்றிருந்தன. தேவன் கிதியோனின் விசுவாசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். ஒரு மனிதனுக்கு விசுவாச வரம் அளிக்க முயற்சிக்கும் போது தேவன் இரண்டு காரியங்களை நிரூபிக்க விரும்புகிறார். முதலாவதாக மனிதனுடைய விசுவாசத்தைச் சோதித்து நிரூபிக்க விரும்புகிறார். இதன்பின் தேவன் தம்மை மனிதனுக்கு நிரூபிக்க விரும்புகிறார். மிகப்பெரிய அளவில் விசுவாசம் தேவைப்படும் ஒரு காரியத்தைச் செய்யும்படி அழைக்க தேவன் முயற்சிக்கும்பொழுது தேவன் எப்படி மக்களின் விசுவாசத்தை உறுதி செய்கிறார் என்பதைக் கவனியுங்கள். சங்கீதம் 37:23-இல், ''நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்'' என்று வாசிக்கிறோம்.

நம்மில் அநேகருக்கு கிதியோனின் மயிருள்ள தோலின் கதை தெரியும். மீதியானியர்களிடமிருந்து இஸ்ரவேலரை விடுவிக்க தேவன் கிதியோனை அழைத்தார். தேவன் தன்னை அழைக்கிறார் என்று கிதியோனுக்கு நிச்சயமாகத் தெரிவதற்கு, அவனுடைய அடிகளை உறுதிப்படுத்தும்படி தேவனிடம் கேட்டான். இரவில் அவன் உலர்ந்த மயிருள்ள தோலை வெளியே வைத்து, அவன் கர்த்தரிடம் அடுத்த நாள் காலையில் பூமி உலர்ந்ததாகவும் தோலின்மேல் மாத்திரம் ஈரமாயிருந் தால், தேவன் உண்மையிலேயே அவனை விடுவிப்பவனாக அழைக்கிறார் என்று தெரிந்து கொள்ளுவான் என்று சொன்னான். அடுத்த நாள் காலையில் கிதியோன் எழுந்தபொழுது பூமி உலர்ந் திருந்தது, எனினும் மயிருள்ளத் தோலிலிருந்து ஒரு கிண்ணம் நிறைய தண்ணீரைப் பிழிந்தான். இன்னும் நிச்சயமில்லாதவனாக, அடுத்த இரவில், பூமி ஈரமாகவும் மயிருள்ளத் தோல் உலர்ந்ததாகவும் இருக்கும்படிச் செய்ய அவன் தேவனைக் கேட்டுக் கொண்டான்.

அடுத்த நாள் காலையில் பூமியெங்கும் தண்ணீராயிருந்தது, மயிருள்ளத் தோல் மாத்திரம் காய்ந்திருந்தது.

ஒரு மிகப்பெரிய வேலைக்காகத் தேவன் கிதியோனை அழைத்ததால், கிதியோன் கேட்டுக் கொண்டபடியே அவர் செய்தார். எனினும், தேவனிடம் எதையாவது நிரூபிக்கும்படிக் கேட்கும்போது கவனமாயிருக்க வேண்டும். கிதியோன் செய்ததைப்போல ஒரு தோலை போடுவதற்கும், கர்த்தருக்கு அந்த தேர்வைக் கொடுப்பதற்கும் இடையில் ஒரு மெல்லிய திரை இருக்கிறது. இயேசுவானவர் வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டபோது, கோபுரத்தின் உச்சியிலிருந்து குதிக்கும்படி அவருக்கு சவாலிடப்பட்டது. தேவ தூதர்கள் அவரைக் காப்பாற்றினால், அவர் தேவனுடைய குமாரன் என்று ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளுவார்கள். ஆனால் இயேசு, ''உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறது'' என்றார். நாம் விசுவாசத்தினால் தேவனிடம் வருகிறோம். தேவன் நம்மை பரீட்சிக்கும் நேரங்கள் வரும். எனினும், தேவனை பரீட்சிப்பதற்கு நமக்கு உரிமை இல்லை.

ஆவிக்குரிய பயணத்தை நீங்கள் ஆரம்பிக்கும்போது, அது நீங்கள் தேவனுடைய ''விசுவாசத்தின் கலாசாலை ''யினுள் நுழைவதைப் போலுள்ளது. தேவனை சோதிக்க உங்களுக்கு உரிமையில்லை. ஆனால் தேவனுக்கு உங்களைச் சோதிக்க உரிமை இருக்கிறது. ஒழுங்கான இடைவெளிகளில் அவர் உங்களுக்கு ''திடீர் சோதனை''களையும் கடினமான பரீட்சைகளையும் கொடுக்க முடியும், எனினும், ஒரு போதும் அவருக்குப் பரீட்சை கொடுக்க உங்களுக்கு உரிமையில்லை. உண்மை யாகவே உங்களுக்கு விசுவாசமிருக்கும் நேரங்கள் எவை என்று தெரிந்தாலும், அவர் இன்னும் அதை உறுதி செய்துகொள்ள வேண்டும். ஆனால் நீங்கள் அவரை நம்பாமல் தேவனை நிரூபிக்கக் கேட்பது இதைப் போன்ற செயல் அல்ல.

கிதியோனுடைய விசுவாசத்தை இன்னும் வேறொரு வழியில் தேவன் நிரூபித்தார். மீதியானர்களை அவர்கள் தாக்குவதற்கு சற்று முன்பாக, அவர்கள் மோரே மேட்டிற்குப் பின்னான பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கியிருந்தார்கள்; தேவன் கிதியோனிடம் மீதியானியரின்



பாளயத்திற்குள் ஒளிந்து போகச் சொன்னார். அவர்கள் இரண்டு மீதியானியர்கள் இருந்த ஒரு கூடாரத்தை அடுத்துப்போய் நின்றனர். மீதியானியர்களில் ஒருவன் தான் கண்ட சொப்பனத்தைப்பற்றிப் பேசினான். அவன் ஒரு தீயகனவிலிருந்து அப்பொழுது தான் எழுப்பப் பட்டான். அவன், ''சுட்டிருந்த ஒரு வாற் கோதுமை அப்பம் மீதியானி யரின் பாளயத்திற்கு உருண்டு வந்தது, அது கூடாரமட்டும் வந்தபோது, அதை விழத்தள்ளிக் கவிழ்த்துப் போட்டது, கூடாரம் விழுந்து கிடந்தது'' என்றான். இதன் அர்த்தம் என்னவாயிருக்கும் என்று அவன் கேட்டான். அடுத்த படைவீரன், ''இது யோவாசின் குமாரனாகிய கிதியோன் என்னும் இஸ்ரவேலனுடைய பட்டயமே அல்லாமல் வேறல்ல;தேவன் மீதியானி யரையும், இந்தச் சேனை அனைத்தையும் அவன் கையிலே ஒப்புக் கொடுத்தார் என்றான்'' (நியாயாதிபதிகள் 7:12-14).

கிதியோன் இதைக் கேட்டபொழுது, இருளிலே நின்று தேவனைப் பணிந்து ஆராதித்தான். அவன் தன் மக்களிடம் திரும்பிச் சென்று, ''எழுந்திருங்கள், கர்த்தர் மீதியானியரின் பாளயத்தை உங்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தார்'' என்று சொன்னான். தேவன் உங்களை ஒரு விசுவாசத்தின் கிரியைக்காகப் பயன்படுத்துகிறாரா? தேவன் உங்கள் மூலமாக மிகப்பெரிய ஒரு செயலை நடத்த விரும்புவதாக இருந்த போதிலும் நீங்கள் அதைத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு நெருக்கமாக இல்லாமலிருக்கிறீர்களா?

மீதியானியர்களை மேற்கொள்ளத் தேவன் கிதியோனைப் பயன் படுத்துமுன், கிதியோனுக்கு அற்புதமான வழிகளில் தேவன் தம்மை நிரூபிப்பதையும் கிதியோனின் விசுவாசத்தை நிரூபிப்பதையும் நாம் காண்கிறோம். கிதியோனுடைய விசுவாசத்திற்கு மிகப்பெரிய சவால், தேவன் கிதியோனிடம் அவனுடைய தகப்பனின் இரண்டாம் காளை யைப் பலியிடச் சொன்னதாகும். கிதியோனின் தகப்பன் தேவனை விட்டு விலகிச் சென்றவர். அவர் பாகால் என்ற புறமத தெய்வத்துக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டியிருந்தார். தேவன் கிதியோனிடம் அவன் தகப்பனாரின் மிகச் சிறந்த காளையைக் கொண்டு வந்து பலிபீடத்தில் கட்டி அதை உடைத்துப் போடச் சொன்னார். அதற்குப்பின் அவன் தகப்பனாரின் விக்கிரகத்தை அதை வெட்டிப்போட்டு அவைகளை

எரியச்செய்து அதில் அந்தக் காளையை சர்வாங்க தகன பலியாக பலியிட கிதியோனிடம் சொன்னார்.

இது மிகப்பெரிய ஒரு சவாலாகும். சுவிசேஷங்களில் அநேக முறை இயேசு, ''உன்னுடைய தகப்பனுக்கு முன் எனக்கு முதலிடம் கொடுக்க உனக்கு விருப்பமில்லையென்றால், நீ எனக்குத் தகுதியானவனல்ல'' என்று சொல்லுவார். உங்கள் தகப்பனுக்கும் தாய்க்கும் முன்னால் இயேசுவுக்கு முதலிடம் கொடுக்க அவர் நமக்கு சவால் விடுகிறார். தேவன் கிதியோனிடம் அவன் தகப்பனாரின் விக்கிரகத்தை அழிக்கும் படிக் கட்டளையிட்டபோது, அதையே (தமக்கு முதலிடம் கொடுப் பதை) அவர் கிதியோனிடம் கேட்டார்.

கிதியோன் முற்றிலுமாக தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான். அடுத்த நாள் காலையில், அந்தப் பட்டணத்து மக்கள் தங்கள் பலிபீடத்துக்கும் விக்கிரகத்துக்கும் என்ன நேரிட்டது என்று கண்டபொழுது, ''யார் இதைச் செய்தது?'' என்று கேட்டார்கள். ''கிதியோன் இதைச் செய்தான்'' என்று பதில் வந்தது. கிதியோன் பாகால் என்ற தெய்வத்துக்கு பாதகம் விளைவித்ததால் அவனுக்கு மரண தண்டனையளிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர். கிதியோனின் தகப்பன் தம் மகனை நேசித்ததால், அவர் நகர மக்களிடம், ''அதற்காக வழக்காடுகிறவன் இன்று காலையிலேதானே சாகக்கடவன்; அது தேவனானால் தன் பலிபீடத்தைத் தகர்த்ததினிமித்தம், அது தானே தனக்காக வழக்காடட்டும்'' என்றான். அந்த நாள் கிதியோனுக்கு யெருபாகால் என்று பெயர் கொடுக்கப்பட்டது; இதன் அர்த்தம், ''பாகால் தனக்காக வழக்காடட்டும்'' என்பதாகும்.

கிதியோனின் இராணுவத்தின் எண்ணிக்கையை குறைக்கச் சொன்னபொழுது தேவன் மறுபடியும் அவனுக்கு நிரூபித்தார். மீதியானியர்களைத் தாக்க கிதியோன் முப்பத்தி இரண்டாயிரம் மனிதர்களுக்குத் தலைமை தாங்கினான். அவர்கள் போகும்போது வழியில் தேவன், ''ஜனங்கள் இன்னும் அதிகம்'' என்றார். கிதியோனு டைய சேனையில் மக்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்ததால் அவன் வெற்றி பெற்றான் என்று நினைக்கக்கூடாது என்று தேவன் விரும்பினார். பயப்படுகிறவர்களை வீட்டுக்கு அனுப்பும்படி தேவன் கட்டளையிட்டார்.



உபாகமத்தில் இஸ்ரவேலர்களின் இராணுவம் ஒரு பெரிய போருக்கு அணிவகுத்துப் போகும்போது, இத்தகைய சவாலைச் சந்திக்க கட்டளையிட்ட பிரமாணத்தை மோசே எழுதியது ஞாபகமிருக் கிறதா? பயந்த சுபாவமுடையவர்கள் ஒரு பெண்ணை நிச்சயம் செய்தவன் அல்லது ஒரு திராட்சத் தோட்டத்தை நாட்டி அதை அனுபவிக்காமலிருக்கிறவன் ஆகியோர் வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர் (உபாகமம் 20:1-8). பயமுடையவர்கள் திரும்பப் போகும்படி அறிவிக்கப்பட்டபொழுது இருபத்திரெண்டாயிரம் மக்கள் திரும்பிப் போய்விட்டார்கள்.

அவன் பத்தாயிரம் வீரர்களோடு முன்னேறினான், தேவன், ''ஜனங்கள் இன்னும் அதிகம்'' என்றார். தனக்கு வெற்றி அதிக எண்ணிக்கையான மக்கள் தன்னோடிருப்பதால் கிடைக்கும் என்று கிதியோன் நம்புவான் என்று அவருக்குத் தெரியும். தேவன் கிதியோ னிடம் அவனுடைய மனிதர்களை ஒரு ஆற்றில் தண்ணீர் குடிக்கும் படிச் சொன்னார். அவர்கள் ஆற்றைக் கடந்து போகும்போது, கீழே குனிந்து நக்கிக் குடித்தவர்களைத் தனியாகப் பிரிக்கும்படிச் சொன்னார். ஒன்பதாயிரத்து எழுநூறு பேர் அப்படிக் குடித்தனர், தேவன் ''நக்கிக் குடித்த அந்த முந்நூறு பேராலே நான் உங்களை இரட்சித்து, மீதியானி யரை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன், மற்ற ஜனங்களெல்லாரும் தங்கள் தங்கள் இடத்திற்கு போகக்கடவர்கள்'' (நியாயாதிபதிகள் 7:5-7) என்று சொன்னார்.

இது கிதியோன் புறப்பட்டபோது இருந்த எண்ணிக்கையில் ஒரு சதவீதத்தை விடக் குறைவானதாகும். அர்ப்பணிப்பில்லாத ஆயிரக் கணக்கானோர் பின் தொடருவதை தேவன் விரும்பவில்லை. தங்களை முற்றிலும் ஒப்படைத்த ஒரு சிறிய கூட்ட வேலையாட்களே அவருக்குத் தேவை.

மீதியானியர்களைத் தோற்கடித்த போர்த்திட்டத்தின் மூலமாக மறுபடியும் தேவன் கிதியோனுடைய விசுவாசத்தை நிரூபித்தார். கிதியோனுடைய வெற்றிக்கு மிகப்பெரிய விசுவாசமும், அளவுக் கதிகமான தைரியமும், ஒரு அழகிய திட்டமும் அவசியப்பட்டது. மீதியானியர்கள் இருட்டான ஒரு பள்ளத்தாக்கில் பாளயம் இறங்கியிருந்

தார்கள். தேவன் கிதியோனிடம் முந்நூறு மக்களை, நூறு பேர் கொண்ட மூன்று குழுக்களாகப் பிரித்து, மீதியானியர்களின் சேனைக்கு வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய மூன்று இடங்களில் அவர்களை அமர்த்தும்படிச் சொன்னார். கிதியோனுக்கு தெளிவான கட்டளைகள் கொடுக்கப் பட்டிருந்தது, அவன் தன் மனிதருக்குக் கட்டளைகளைக் கொடுத்தான்.

''நான் செய்வதைப் பார்த்து, அப்படியே நீங்களும் செய்யுங்கள்'' (7:17) என்று கிதியோன் இப்படிச் சொல்லுவது தலைமைத்துவத்துக்கு மிகப்பெரிய ஒரு படிப்பினையாயிருக்கிறது: அதுதான் உண்மையான தலைமைத்துவத்தின் சாராம்சம். இந்த மனிதர் எல்லாரும் தங்களைத் தேவனுக்கும் கிதியோனுக்கும் முற்றிலும் ஒப்புக்கொடுத்தவர் களாயிருக்க வேண்டும். அவர்களது இடது கைகளில் ஒரு பானையும் பானைக்குள் ஒரு தீவட்டியும் இருந்தன. அவர்களின் வலது கைகளில் ஒரு எக்காளம் இருந்தது. கிதியோன் அடையாளம் காட்டியதும், தீவட்டிகளை மூடியிருந்த பானைகளை உடைத்து, நூறு தீவட்டிகளை வெளிக்காட்டினர். பின்னர் தங்கள் நூறு எக்காளங்களையும் ஊதினார் கள். அவர்கள், ''கர்த்தருடைய பட்டயம், கிதியோனுடைய பட்டம்'' என்று சத்தமிட்டனர். மூன்று வித்தியாசமான இடங்களில் இவ்வாறு சத்தமிட்டனர்.

நீங்கள் ஒரு மீதியானியனாயிருந்தால், கும்மிருட்டில் தரையில் தூங்கிக் கொண்டிருக்கும்போது திடீரென்று உங்கள் பாளயத்தின் வடக்குப் பக்கத்தில் நூறு பானைகள் உடைக்கப்பட்டச் சத்தத்தைக் கேட்டு, நூறு தீவட்டிகளைப் பார்த்து, நூறு எக்காளங்களின் பேரொலியையும் நூறு மனிதர்கள் சத்தமிடுவதையும் கேட்டால் என்ன நினைப்பாய்? இதேபோல உங்கள் பாளயத்துக் கிழக்கேயும் மேற்கேயும் அதே காரியம் நடைபெறுவதைக் கண்டால் என்ன நினைப்பாய்? கிதியோனின் பெரிய படை உங்களைச் சூழ்ந்திருக்கிறது என்று ஒருவேளை நினைப்பாயல்லவா?

மீதியானியர்கள் தாங்கள் முற்றிலும் சூழப்பட்டதாக நினைத் தார்கள். அவர்கள் திகிலடைந்து ஒருவரையொருவர் கொலை செய்யத் துவங்கினர். கிதியோனுடைய மனிதர்கள் ஆடுமாடுகளைப் போல அவர்களைப் பள்ளத்தாக்கிலிருந்து விரட்டினர். அதன்பின் வீட்டுக்குச்



சென்றவர்கள் திரும்பி வந்து அவர்களோடு சேர்ந்து மீதியானியர்களை முற்றிலும் முறியடித்தனர்.

இந்த வெற்றியை விவரிக்கும் வசனம் முன்னூறு பேரைப்பற்றி இந்த விபரத்தைக் கொடுக்கிறது,''பாளயத்தைச் சுற்றிலும் அவரவர் தங்கள் நிலையிலே நின்றார்கள்; அப்பொழுது பாளயத்தில் இருந்தவர் கள் எல்லாரும் சிதறிக் கூக்குரலிட்டு, ஓடிப்போனார்கள்'' (7:21). இந்த முன்னூறு மனிதர்களில் சில மனிதர்கள் தங்கள் தீவட்டிகளை வெளியே காட்டாமல், எக்காளம் ஊதாமல், அடையாளம் கிடைத்தும் சத்த மிடாமலுமிருந்திருந்தால், போர்த் திட்டம் முழுவதும் தோல்வியடைந்து அவர்கள் மீதியானியர்களால் தோற்கடிக்கப்பட்டிருப்பார்கள்.

இது இன்றைய இயேசு கிறிஸ்துவின் சபையைப் பற்றிய ஒரு அழகான சித்திரமாகும். உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு ஒப்படைப் பில்லாமல் பின்பற்றும் ஆயிரக்கணக்காணவர்கள் அவசியமில்லை. குறைவான எண்ணிக்கையுடைய தங்களை ஒப்படைக்கக்கூடிய அர்ப்பணிப்புள்ள சீஷர்களே அவருக்கு வேண்டியவர்கள். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய இடத்தில் நின்று, தேவன் நமக்குக் கொடுத்த ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தி, நூறு சதவீதம் இயேசு கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புக்கொடுத்தால் நாம் நரகத்தின் சேனை முழுவதையும் நிர்மூலமாக்க முடியும்.

பழைய ஏற்பாட்டு வரலாற்றுப் புத்தகங்களில் காணப்படும் சத்தியத்தை வெளிக்காட்டும் முக்கிய வசனம் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

அப்போஸ்தலர் பவுல், எபிரெயரின் சரித்திரத்திலுள்ள எடுத்துக் காட்டுகளையும் எச்சரிக்கைகளையும் பார்க்கச் சொல்லுகிறார். (1 கொரிந்தியர் 10:11). நியாயாதிபதிகளின் புத்தகத்தில் தேவனை விட்டு விலகிச் செல்லுவதின் பயங்கர விளைவுகளைச் சுற்றி எச்சரிக்கைகள் குவிந்திருக்கின்றன.

நியாயாதிபதிகளின் வாழ்க்கையில் எடுத்துக்காட்டுகளைக் காண முடியும். சிமியோனைப் போன்றவர்கள் ஒரு எச்சரிக்கையாகவும் ஒரு எடுத்துக்காட்டாகவும் இருக்கின்றனர். அவனுடைய வாழ்க்கை

எடுத்துக்காட்டாகவும், எச்சரிப்பதாகவும் உள்ளது. இந்த நியாயாதிபதி களின் எடுத்துக்காட்டுகள் எல்லாம், தேவன் தம்முடைய மகிமைக்காக சாதாரண மக்களைக்கொண்டு அரிய காரியங்களை செய்வதில் களி கூருகிறார் என்ற உயிருள்ள சத்தியத்தின் மாதிரிகளாயிருக்கின்றன. இந்தச் சத்தியத்தை நாம் பற்றிக்கொள்ளும்போது, நாம் தேவனுக்கு ஆயுத்தமாயிருப்பதும், எதைச் செய்யும்படி அவர் நம்மை அழைத் தாலும் ஆயுத்தமாயிருப்பதும் தான் நம்முடைய மிகப்பெரிய திறமை என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

அத்தியாயம் - 4

# ரூத்தின் புத்தகம்
# மீட்பின் அன்புக் கதை

பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் புத்தகங்களைத் தொடர்ந்து, யோசுவா, நியாயாதிபதிகள் ஆகிய புத்தகங்களைப் பார்வையிட்டு, நாம் இப்போது ரூத்தின் புத்தகத்திற்கு வருகிறோம், ரூத்தின் புத்தகம் ''நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில்'' நடந்த ஒரு அழகான அன்பின் கதை.

இந்த அன்பின் கதை இரட்சிப்பையும் இயேசு கிறிஸ்துவோடு நமக்குள்ள உறவையும் பிரதிபலிக்கிறது. பழைய புதிய ஏற்பாடுகள் நாம் அவருக்காக நியமிக்கப்பட்டோம் என்று சொல்லுகின்றன. அவர் மணவாளன், சபையாகிய நாம் அவருடைய ''மணவாட்டி''. ரூத்தின் புத்தகம் ''மீட்பின் அன்புக்கதை'' ஆகிய இந்த உறவை அளிக்கிறது. வேதாகமம் இந்த அழகிய அன்பின் கதையை நமக்குக் கொடுக்கிறது:

> ''நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; அப்பொழுது யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய ஒரு மனுஷன் தன் மனைவியோடும் இரண்டு குமாரரோடுங்கூட, மோவாப் தேசத்திலே போய்ச் சஞ்சரித்தான். அந்த மனுஷனுடைய பேர் எலிமெலேக்கு, அவன் மனைவியின் பெயர் நகோமி. அவனுடைய இரண்டு குமாரரில் ஒருவன் பேர் மக்லோன், மற்றொருவன் பேர் கிலியோன்; யூதாவி லுள்ள பெத்லெகேம் ஊராகிய எப்பிராத்தியராகிய அவர்கள் மோவாப் தேசத்திற்குப்போய், அங்கே இருந்து விட்டார்கள். நகோமியின் புருஷனாகிய எலிமெலேக்கு இறந்துபோனான்; அவளும் அவளுடைய இரண்டு குமாரரும் மாத்திரம் இருந்தார்கள். இவர்கள் மோவாபி யரில் பெண்கொண்டார்கள்; அவர்களில் ஒருத்தி பேர் ஓர்பாள், மற்றவள் பேர் ரூத். அங்கே ஏறக்குறையப் பத்து வருஷம் வாசம்பண்ணினார்கள். பின்பு மக்லோன் கிலி யோன் என்னும் அவர்கள் இருவரும் இறந்துபோனார்கள்; அந்த ஸ்திரீ தன் குமாரர் இருவரையும் தன் புருஷனையும் இழந்து தனித்தவளானாள்'' (ரூத் 1:1-5).



எலிமெலேக்கு, நகோமி, அவர்களுடைய இரண்டு மகன்களும் தூர தேசத்துக்குப் போய், துன்பமான காலங்களைச் சந்திக்க வேண்டிய தாயிற்று. மோவாப் தேசம் பக்தியுள்ள யூதர்களுக்கு எதிராக இருந்ததால், அது அவர்களுக்குக் கெட்ட குமாரனின் தூர தேசத்தைப் போலிருந்தது. இந்தக் குடும்பத்தின் கதையும் கெட்ட குமாரனின் கதையைப் போன்ற அதே வடிவத்தைத் தொடருகிறது. இந்த வீண் செலவு செய்கிற குடும்பம் மோவாப் தேசத்திலிருந்தது, அவர்களின் இரண்டு மகன்களும் மரித்துவிட்டனர். எலிமெலேக்கும் மரித்துவிட்டான். பெத்ல கேம் யூதாவின் பஞ்சத்திலிருந்து தப்பும்படி பிரயாணம் செய்த குடும் பத்தில் உயிருடன் இருக்கும் ஒரே நபர் நகோமி.

நகோமியின் வாழ்க்கையில் வீண்செலவு செய்பவர்களின் கதையின் சில மாதிரிகளின் ஒரு சாயலை நாம் காண்கிறோம். நகோமி தூர தேசான மோவாபில் இருக்கும்போது காரியங்கள் எளிதாயிருக்க வில்லை. அவருடைய இரண்டு மகன்களும் தடைசெய்யப் பட்டிருந்தாலும் மோவாபியப் பெண்களை மணந்திருந்தனர், அவள் தன் கணவனுடனும் இரண்டு மக்களோடும் மோவாப் தேசத்திற்குப்

போனாள். இப்பொழுது அவளுக்குக் கணவனில்லை, மக்களுமில்லை, இரண்டு மோவாபிய மருமக்கள் மட்டுமே இருந்தனர்.

கதை தொடருகிறது, '' கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று அவள் மோவாப் தேசத்திலே கேள்விப்பட்டு, தன் மருமகளோடுகூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பிவரும்படி எழுந்து...'' (ரூத் 1:6). வீண் செலவு செய்யும் ஒரு வருக்கு கிட்டத்தட்ட எப்பொழுதும் இப்படி நடைபெறுகிறது. அவர்கள் இந்த உலகத்தின் தூர தேசத்தில் இருக்கும்போது, தகப்பன் வீட்டுக்குத் திரும்புவது எவ்வளவு நன்றாக இருக்கும் என்று கேள்விப்படுகிறார்கள். ''தன் இரண்டு மருமக்களோடுங்கூடத் தானிருந்த ஸ்தலத்தைவிட்டுப் புறப்பட்டாள். யூதா தேசத்துக்குத் திரும்பிப்போக, அவர்கள் வழி நடக்கையில்...'' (ரூத் 1:7). இதுதான் வீண் செலவாளியான மகன் திரும்பி வருவது. திரும்பிப்போகுமுன், நகோமி தன் மருமக்களிடம் திரும்பி, ''நீங்கள் இருவரும் உங்கள் தாய் வீட்டுக்குத் திரும்பிப் போங்கள், மரித்துப் போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள் தயை செய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயை செய்வாராக. கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று சொல்லி, அவர்களை முத்த மிட்டாள்.''

இன்னும் தொடருகிறது, ''உம்முடைய ஜனத்தண்டைக்கே உம்முடன் கூட வருவோம்'' என்றார்கள். அதற்கு நகோமி; என் மக்களே, நீங்கள் திரும்பிப்போங்கள்; என்னோடே ஏன் வருகிறீர்கள்? உங் களுக்குப் புருஷராகும்படிக்கு, இனிமேல் என் கர்ப்பத்திலே. எனக்குப் பிள்ளைகள் உண்டாகுமோ?'' (ரூத் 1:10,11) என்று நகோமி சொன் னாள். நகோமியின் மருமகள், ஒர்பாள், அவளை முத்தமிட்டுப் போனாள். எனினும் ரூத் அவளோடிருந்தாள்.

நகோமி ரூத்திடம், ''இதோ உன் சகோதரி தன் ஜனங்களிடத் துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப் போய் விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ'' என்றாள். இங்கே தான் ரூத், அவளின் பெயரையுடைய இந்தப் புத்தகத்தின் முக்கிய பாத்திரமாக மாறுகிறாள், இந்த அழகிய அன்புக் கதையின் முக்கிய கதாபாத்திரமாக



மாறுகிறாள். ரூத், ''நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகுமிடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்'' (ரூத் 16,17) என்று சொன்னாள்.

நகோமியிடம் இந்த பயபக்தியான ரூத் தன்னை ஒப்புக்கொடுத்த பொழுது, உண்மையான பற்றுதலுக்கு ஒரு குறிப்பிடத்தக்க மாதிரியா யிருக்கிறாள். இந்த இரண்டு வசனங்களும் திருமண வாக்குறுதி களுக்கு நல்ல வருணனையை அளிக்கிறது; ஏனென்றால் இவை ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இருக்கவேண்டிய ஒப்படைப் பின் மாதிரியைக் குறிப்பிடுகிறது. ஒருவரை நீங்கள் திருமணம் செய்யும் போது, அவர்கள் எங்கே போகிறார்களோ அங்கே போய், எங்கே வசிக் கிறார்களோ அங்கே வசிக்க வேண்டும். ஒரு குடும்பத்துக்குள் திரு மணம் செய்து கொடுக்கப்படவில்லையே என்று நீங்கள் நினைக்கலாம், எனினும் சில ஆண்டுகளுக்குப்பின், நீங்கள், ''உங்கள் மக்கள் என் மக்களாயிருக்கிறார்கள்'' என்று சொல்லுவது நல்லது என்று கண்டு கொள்ளுவீர்கள் அல்லது உங்கள் துணையோடு உள்ள உறவு பாதிக்கப் படும்.

இந்த ஒப்படைப்பின் மிகப்பெரியப்பகுதி, ''உம்முடைய தேவன் என்னுடைய தேவன்'' என்பது. உங்களுக்கு ஒரே தேவன் இல்லா விட்டால், உங்கள் மதிப்பை அளவிட பொதுவான அடிப்படை எதுவு மில்லை. முறிந்த திருமணங்களுக்கு இது ஒரு காரணம். தம்பதி யினர்கள் மதிப்பை அளவிட இருவருக்கு ஒரே முறை இல்லாம லிருத்தல். அப்போது அவர்களுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது. தங்கள் நேரம், தங்கள் பணம், தங்கள் சக்தி இவைகளைத் தங்கள் வாழ்க்கையில் ஒன்று சேர்ந்து எப்படிச் செலவிடப் போகிறார்கள் என்று சிந்திக்கும் போது, அவர்கள் எதிலும் ஒத்துப் போவதில்லை. திருமணமான ஒரு தம்பதியினருக்கு பொதுவான ஒரு மன அமைப்பைக் கொடுக்கும் அஸ்திபாரம், ''உம்முடைய தேவன் என்னுடைய தேவன்'' என்று சொல்லக்கூடியவராக இருப்பதேயாகும். தேவனோடுள்ள உறவில்

உங்கள் மதிப்பீடுகளை நீங்கள் பெற்றுக்கொள்ளும்போது, உங் களுக்குப் பொதுவான ஒரு மதிப்பு அளவுமுறை இருக்க முடியும்.

இந்த அதிகாரத்தின் கடைசி வசனம், ‘‘இப்படி, நகோமி, மோவா பிய ஸ்திரீயான தன் மருமகள் ரூத்தோடுங்கூட மோவாப் தேசத்தி லிருந்து திரும்பி வந்தாள்; வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் அவர்கள் பெத்லெகேமுக்கு வந்தார்கள்’’ என்று சொல்லுகிறது. வாற் கோதுமை அறுப்பின் துவக்கத்தில் பெத்லெகேமுக்கு வந்தார்கள் என்பது மிகவும் முக்கியமான உண்மை. இந்த இரண்டு பெண்களும் பெத்லெகேமுக்கு வந்தது, தேவனுடைய ஒரு பிள்ளை அவளுடைய தகப்பனார் வீட்டுக்குத் திரும்பி வந்ததைக் குறிப்பிடுவதாக நகோமி இருக்கிறாள். வீண்செலவாளியான மகனை அவனுடைய தகப்பன் வரவேற்று, உறுதியளித்து, தழுவி ஏற்றுக் கொள்ள ஓடி வந்ததைப்போல் (லூக்கா 15:20), அவளை ஏற்றுக்கொள்ள அங்கே தேவனுடைய கிருபை காத்துக்கொண்டிருந்தது.

இந்தக் கதையில், தேவனுடைய குடும்பத்தைச் சேராத மக்களை ரூத் குறிப்பிடுகிறாள். ரூத் ஒரு எபிரெய பெண் அல்ல. அவள் அயல் தேசத்தைச் சேர்ந்தவள். தேவனுடைய குடும்பத்தின் அங்கத் தினரல் லாத ஒருவருக்கு தேவன் கிருபைக் காட்டுவாரா? ஆம், அவர் காட்டு வார். நாம் பாவிகளாயிருந்தபோது இரட்சிக்கும் கிருபை நம்மை வந்தடைந்தது, இப்படியாக நாம் எல்லாரும் தேவனுடைய குடும்பத்தில் ஒரு பகுதியாக மாறினோம். நாம் பார்க்கப் போகிறபடி, நகோமிக்கும் ரூத்துக்குமான தேவனுடைய கிருபை அவளுடைய பிரமாணத்தில் காணப்படும்.

ரூத்துக்கும் நகோமிக்கும் அந்தக் கிருபையை தேவன் கொடுத் ததைப் பற்றிய முதல் பிரமாணம் லேவியராகமம் 19:9-10 வசனங்களில் காணப்படுகிறது. இந்தப் பிரமாணம், சேகரிக்கும் பொருளின் பிர மாணம் என்றழைக்கப்படுகிறது, இந்தப் பிரமாணம் அறுவடை யாளர்களிடம் தற்செயலாகக் கீழே சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமல் அவைகளை எளியவர்களுக்கும் பரதேசிகளுக்கும் விட்டுவிட வேண்டும் என்று சொல்லுகிறது. பெத்லெகேமில் முதல் நாளில் ரூத் வயல்களில் கதிர்களைச் சேகரிக்கத் தீர்மானித்தாள். நாம் வாசிக்கிறோம்:



‘‘நகோமிக்கு அவளுடைய புருஷனாகிய எலிமெலேக் கின் உறவின் முறையில் போவாஸ் என்னும் பேருள்ள மிகுந்த ஆஸ்திக்காரனாகிய இனத்தான் ஒருவன் இருந்தான். மோவாபிய ஸ்திரீயான ரூத் என்பவள் நகோமியைப் பார்த்து: நான் வயல்வெளிக்குப் போய் யாருடைய கண்களில் எனக்கு தயை கிடைக்குமோ, அவர் பிறகே கதிர்களைப் பொறுக்கிக் கொண்டு வருகிறேன் என்றாள்; அதற்கு இவள்: என் மகளே, போ என்றாள். அவள் போய், வயல்வெளியில் அறுக்கிறவர்கள் பிறகே பொறுக் கினாள்; தற்செயலாய் அவளுக்கு நேரிட்ட அந்த வயல்நிலம் எலிமெலேக்கின் வம்சத்தானாகிய போவாசு டையதாயிருந்தது’’ (ரூத் 2:1-3).

வேதாகமத்தில் இந்த அன்புக்கதை ஏன் இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள உதவிசெய்யும் முக்கியப் பின்னணி மோசேயின் மற்றொரு பிரமாணம். இது உபாகமம் 25-ஆம் அதிகாரத்தில் இருக் கிறது; இது ‘‘உறவினர் மீட்பைப் பற்றிய பிரமாணம்’’ என்றழைக்கப் படுகிறது. இந்தப் பிரமாணத்தின்படி ஒரு மனிதனுடைய சகோதரன் ஒரு மகனில்லாமல் மரித்தால், அவனுடைய விதவை குடும்பத்தை விட்டு வெளியே யாரையும் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. மரித்த சகோதரனுடைய பேர் இஸ்ரவேலில் அற்றுப்போகாதபடிக்கு, அவளுடைய புருஷனின் சகோதரன் அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். மரித்த மனிதனின் சகோதரன் மறுத்தால், அவள் பட்டணத்து மூப்பர்களிடம் முறையிடலாம். (இது கோர்ட்டுக்கு அவனைக் கொண்டுபோவதுக்குச் சமான மானது). இன்னும் அவன் மறுத்தால், மூப்பர்களின் முன்னிலையில் வந்து, அவனுடைய காலிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றி, அவன் முகத்திலே துப்பலாம். அந்த நாள் முதல், அவனுடைய வீடு, ‘‘பாதரட்சை கழற்றிப் போடப் பட்டவன் வீடு’’ என்றழைக்கப்படும். இஸ்ரவேலின் பண்பாட்டில் அது ஒரு மானபங்கமாகும்.

ரூத் முதலாவது ஒரு எபிரெய மனிதனை மணம் செய்து கொண்டதால், அதன் பயனாக, அவள் எபிரெய இனமாகிய தேவனுடைய குடும்பத்துக்குள் கொண்டுவரப்பட்டாள். அவளுடைய

கணவன் மரித்தபோது, அவர்களுக்குப் பிள்ளையில்லாததால், ரூத் இப்போது அவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினரல்ல. அவள் தன்னுடைய மரித்த கணவனின் உறவினன் ஒருவனிடம் போய், அவனிடம் அவளைத் திருமணம் செய்யும்படிக் கேட்க முடியும் என்று பிரமாணம் தெரிவிக்கிறது. அவள் மறுத்தால், அவன் மறுத்தால், அவர் கோர்ட்டில் நியாயம் கேட்க வேண்டும். இன்னும் அவளைத் திருமணம் செய்ய அவன் மறுத்தால், மூப்பர்கள் உறவினர் மீட்பைப் பற்றிய பிரமாணத்தில் விவரிக்கப்பட்ட சடங்கை ஆசரிக்க வேண்டும்.

அப்படிப்பட்ட ஒரு பெண்ணை திருமணம் செய்துகொள்ள சம்மதித்தவன் அவளுக்காக இரண்டு காரியங்களைச் செய்கிறான். முதலாவது, அவளுக்கிருந்த கடன்களைச் செலுத்தி அவளை திரும்ப வாங்குகிறான். மீட்டவர் செய்த இரண்டாவது காரியம் அவளைத் திருமணம் செய்து கொண்டது. அவளோடு திருமண உறவை ஏற்படுத்தும்போது, அவன் அவளை, திரும்பவும் தேவனுடைய குடும்பத்தினுள் கொண்டுவந்தான். ரூத் யூதாவின் பெத்லெகேமுக்குத் திரும்ப வந்தபொழுது அது அவளுடைய நம்பிக்கையாயிருந்தது. இதனால்தான் இரண்டாம் அதிகாரம், மரித்துப்போன அவள் மாமனார் உறவின் முறையில் போவாஸ் என்னும் பேருள்ள மிகுந்த ஆஸ்திக் காரனாகிய இனத்தான் ஒருவன் இருந்தான் என்ற கிளர்ச்சியூட்டும் செய்தியுடன் துவங்குகிறது.

இந்த அன்புக்கதைத் தொடரும்போது, வீட்டுக்கு திரும்பிவரும் வீண்செலவாளியான பிள்ளைக்கு தேவனுடைய கிருபையையும், மீட்பைப் பெறும்படி அவரிடம் திரும்ப வரும் ஒருவருக்கான தேவனுடைய கிருபையையும் பற்றிய ஒரு விளக்கத்தை நாம் காண்போம்.

அத்தியாயம் - 5

## முதல் பார்வையிலேயே அன்பு

நியாயாதிபதிகள் அரசாட்சி செய்த, எபிரெய வரலாற்றின் இருண்ட காலத்தில் ரூத்தின் கதை நடந்தது. ரூத்தின் புத்தகத்தில் விவரிக்கப்



பட்ட அன்பின் கதை, நம்முடைய இரட்சிப்பையும் மீட்பையும் பற்றிய ஒரு அழகிய விளக்கம். மோவாபிய மருமகளான ரூத், தேவனுடைய குடும்பத்தின் ஒரு பகுதியாயில்லாத ஒருவர். தேவனுடைய பிரமாணத்தில் கொடுக்கப்பட்டபடி அவள் மீட்படையும்படி தேவன் தம்முடைய அன்பையும் கிருபையையும் அவளுக்குக் காட்டுவதைக் காண்கிறோம்.

போவாசுக்குச் சொந்தமான வயலில் கதிர்களைப் பொறுக்க ரூத் போனாள். அந்த நாளில் போவாஸ் வேலைக்கு வந்தபொழுது, அவன் ரூத்தைப் பார்த்து, அவள் அழகால் ஈர்க்கப்பட்டதைப்போல் தோன்று கிறது. அவன் தன் வேலைக்காரனிடம், ''இந்தப் பெண்பிள்ளை யாருடையவள்?'' என்று கேட்டான். அந்தப் பெண்ணிடம் அவன் அன்பு வசப்பட்டதுபோல தோன்றுகிறது. ரூத் என்ற பெயருக்கு ''அழகு'' அல்லது ''ரோஜா மொட்டு'' என்று அர்த்தம். அவனுடைய வேலைக்காரன் எப்படி அவன் மோவாப் தேசத்திலிருந்த ஒரு எபிரெய மனிதனுக்கு மனைவியானாள் என்றும், தன்னுடைய மாமியாருக்கு எப்படி ஒரு மிகப்பெரிய விசுவாச உறுதிமொழியைக் கொடுத்திருக் கிறாள் என்றும் அவனிடம் சொன்னான். தன்னுடைய எபிரெய கணவனைத் திருமணம் செய்துகொண்ட பின் ரூத் ஒரு விசுவாசி யாகிவிட்டாள் என்ற உண்மையையும் ரூத் போவாசுடன் பகிர்ந்து கொண்டாள்.

போவாஸ் ரூத்திடம், தான் அவளைப் பாதுகாக்க முடியும் என்பதால் தன்னுடைய நிலத்திலேயே இருக்கும்படிச் சொன்னான். அவளுக்காக அக்கறை கொண்டிருப்பதை அவன் தெளிவாக ரூத்திடம் சொன்னான். வசனம் 10-இல், ''அப்பொழுது அவள் தரையில் முகங்குப்புற விழுந்து வணங்கி: நான் அந்நிய தேசத்தாளாயிருக்க, நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது என்றாள்'' என்று வாசிக்கிறோம். ''தயை'' என்ற சொல்லின் அர்த்தம், ''நாம் பெறத் தகுதியில்லாததற்கு தேவன் கொடுக்கும் ஆதரவும் ஆசீர்வாதமும்'' என்பதாகும். போவாஸ் அவளி டம் தனக்கு அவளுடைய கணவனின் மரணத்தைப் பற்றியும், நகோமிக்குக் கொடுத்த வாக்குறுதியைப் பற்றியும் தெரியும்

என்று சொன்னான். மேலும் அவன், அவள் இஸ்ரவேலின் தேவனை விசுவாசிக்கிறாள் என்பதும் தனக்குத் தெரியும் என்றான்.

அவள், ''உம்முடைய கண்களில் எனக்கு தயை கிடைக்க வேண்டும்''(ரூத் 2:12-14) என்றாள். சாப்பாட்டு வேளையில் போவாஸ் அவளையும் மதிய உணவில் தன்னோடு சேர்ந்து கொள்ளும்படிச் சொன்னான். அவளுக்குப் பசி இல்லாத வரை அவள் சாப்பிட்டாள். அந்த நாள் அவள் பொறுக்கியதைவிட கூடுதலாக வீட்டுக்குக் கொண்டு போகும்படி போவஸ் வழிவகுத்தான். அறுவடை செய்பவர்களிடம், அவர்கள் ரூத் பொறுக்குவதைக் கண்டால் ''வேண்டுமென்றே'' கதிர்களை ரூத்துக்காக வயல்களில் சிந்தவிடும்படி போவாஸ் கட்டளையிட்டான். போவாசுக்கு ரூத்தின்மேல் அன்பு இருந்தது.

இரண்டு அறுவடை காலம் வரை ரூத் போவாசின் வயல்களில் வேலை செய்ததைச் சொல்வதோடு இரண்டாம் அதிகாரம் முடிவடைகிறது. அதாவது அவள் முதல் அதிகாரத்தில் சொல்லப்பட்ட நிகழ்ச்சிகளை ஆறுமாத காலம் தொடர்ந்தாள். மூன்றாம் அதிகாரம், ''பின்பு அவள் மாமியாகிய நகோமி அவளை நோக்கி: என் மகளே, நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி சவுக்கியத்தைத் தேடாதிருப்பேனோ?'' என்று துவங்குகிறது. இதன் அர்த்தம், ''உனக்கு நான் ஒரு கணவனைக் கண்டு பிடிக்கவா?'' என்பதாகும். ஒருவேளை நகோமி ரூத்திடம் கதிர்களைப் பொறுக்குவதைப்பற்றிய மற்றும் மீட்பைப்பற்றியப் பிரமாணங்களை ரூத்திடம் சொல்லியிருப்பாள். ரூத்துக்கு உறவினர் மீட்பதைக் குறித்த பிரமாணம் தெரிந்திருக்கக்கூடும் என்று நாம் அனுமானிக்கலாம், போவாஸ் அவர்களின் உறவின் முறையினன். போவாசும் அவனுடைய வேலையாட்களும் அந்த இரவில் தூற்றினார்கள், தூற்றி முடிந்ததும் அறுவடையின் பக்கத்திலேயே எப்பொழுதும் உறங்குவார்கள். நகோமி அவளிடம், ''நீ குளித்து, எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தக் களத்திற்குப் போ'' என்று சொன்னாள். நகோமி ரூத்திடம், போவாசிடம் சென்று தன் உறவின் முறை மீட்பராக இருக்கும்படி கேட்கும்படிக் குறிப்பாக சொல்லுகிறாள்.

தூற்றுதல் முடிந்தபின் ஒரு விருந்து நடந்தது. நகோமி ரூத்திடம், போவாஸ் படுத்திருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கும்படிச் சொன்



னான். நகோமி, ''நடு இரவில் நீ அவனிடம், உன்னுடைய உறவின் முறை மீட்பராக இருக்கும்படி அவனிடம் உன் விருப்பத்தைத் தெரிவி'' என்று சொன்னாள். இது மீட்பின் அன்புக் கதையல்ல, இது பின்னாலிருந்து முன்னால் வரும் அன்புக் கதை. அந்தக் கலாச்சாரத்தில் போவாசினால் ரூத்தை மணம் செய்யும்படிக் கேட்க முடியாது. பெண்ணே, ஒரு ஆணிடம் கேட்க வேண்டும். பிரமாணத்தின் கீழ், ரூத் அவர்களில் ஒருவனிடம் போய் தன்னுடைய உறவுமுறை மீட்பராக இருக்கும்படிக் கேட்க வேண்டும். போவாசினால் செய்யக் கூடிய தெல்லாம் தான் அவளுடைய மீட்பராக இருக்க விரும்புவதாக அன்பு பாவனைகளால் காட்டுவது மட்டுமே.

மூன்றாவது அதிகாரத்தில் அவள் செய்தது மிகவும் சரியானது. நடு இரவில் ரூத் போய் போவாசின் காலடியில் படுத்துக்கொண்டாள் என்று நாம் வாசிக்கிறோம். அங்கே ஒரு பெண்ணைப் பார்த்ததும் போவாஸ் பயந்துவிட்டான். அவன், ''நான் உம்முடைய அடியாளாகிய ரூத்; நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி என்றாள்'' (ரூத் 3:8-10). போவாஸ், ''மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக; நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது'' (ரூத் 3:10-12). போவாஸ் அவளால் சுமந்து செல்ல முடிந்த அளவு தானியம் கொடுத்து, வீட்டுக்கு மாமியாரிடம் போகும்படிக் கண்டிப்பான கட்டளை கொடுத்து அனுப்பினான்.

**அன்புக் கதையில் மீட்பு**

நம்முடைய இரண்டு அன்பர்களும் சந்தித்து, அன்பு வசப்பட்டு, திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவிக்கின்றனர். பழைய ஏற்பாட்டின் எபிரெய பிரமாணப்படி, பெண் அவனிடம் தன் விருப்பத்தைத் தெரியப்படுத்த வேண்டும். அப்படி அவள் செய்யும்போது, அவளுடைய அன்பர் பிரமாணப்படி நடக்க வேண்டிய காரியங்களைக் கவனிக்க வேண்டும். இந்தப் புத்தகத்தின் நான்காம் அதிகாரத் துவகத்தில், போவாஸ் திருமணத்தை சட்டரீதியில் நடத்த மூப்பர்களிடம் பேச்சுவார்த்தை நடந்துகிறான்.

அடுத்த நாள் அதிகாலையில், ரூத் தன் விருப்பத்தை அவனிடம் தெரிவித்தபின், போவாஸ் ரூத்துக்கு அதிக பாத்தியதையுடைய சுதந்திரவாளியைக் கண்டு அவனிடம் எலிமெலேக்கின் வயல்நிலம் மீட்கப்பட வேண்டியதின் அவசியத்தைப் பற்றிச் சொன்னான். அந்த மனிதன் அதை மீட்க ஒத்துக் கொண்டான். ஆனால் போவாஸ், அதை மீட்க வேண்டுமானால், மோவாபிய ஸ்திரீயாகிய ரூத்தையும் திருமணம் செய்ய வேண்டும் என்று சொன்னதும், அது ''அவனுடைய சொத் துரிமையை பங்கப்படுத்தும்'' அல்லது அவனுடைய குடும்ப வரலாற்றில் ஒரு களங்கம் ஏற்படுத்திவிடும் என்பதால் அதை மீட்க அவன் விருப்பப்படவில்லை என்று சொன்னான். அப்பொழுது போவாஸ் அங்கிருந்த மூப்பர்களிடம், தான் எலிமெலேக்கின் எல்லா சொத்துக்களையும் மீட்பதாகவும், எலிமெலேக்கின் விதவை மரு மகளாகிய மோவாபிய ஸ்திரீ ரூத்தையும் திருமணம் செய்து மீட்கப் போவதாகவும் சொன்னான்.

மீட்கப்படுவது என்பது, ''திரும்ப வாங்குவது'' ''திரும்பக் கொண்டு வருவது'' என்ற அர்த்தமுடையது. அவளுடைய கடன் கெல்லாம் கிரயம் செலுத்தி முதலாவது அவன் மீட்டான். பின்பு அவளோடு ஒரு உறவை நிலைநாட்டி அவளைத் தேவனுடைய குடும்பத்தினுள் கொண்டு வந்தான்.

வெளிப்படுத்தின விசேஷம் ஐந்தாம் அதிகாரத்தில் மீட்பைப் பற்றிய மற்றொரு அழகிய விளக்கம் இருக்கிறது. பரலோகத்தில் அழுகை உண்டாயிருந்தது ஏனென்றால், புத்தகத்தின் முத்திரைகளை உடைத்து மனுக்குலத்தை மீட்கும் (சுதந்தரவாளி) ஒருவர் இல்லை. பின்னர் பரலோகத்தில் அழுதுகொண்டிருந்தவர்களிடம் இனிமேல் அழத் தேவையில்லை என்று சொல்லப்பட்டது, ஏனெனில், அவர்களை மீட்பதற்குத் தகுதியானவரும் சித்தமுள்ளவருமான ஒரு மீட்பர் கண்டு பிடிக்கப்பட்டாயிற்று. அந்த மீட்பர் இயேசு கிறிஸ்துவானவர்.

நாம் மீட்கப்பட வேண்டும் என்று உணர்ந்து கொள்ளும்பொழுது, மீட்பின் நம்பிக்கை என்ன, நம்முடைய மீட்பின் ஒரே நம்பிக்கை இயேசுவே. இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் நம்முடைய விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. தேவனு



டைய குடும்பத்தினுள் நம்மைத் திரும்பவும் வாங்கும்படிக் கொடுக்கப் பட வேண்டிய விலையே இயேசுவின் மரணம். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்பதின் அர்த்தம், உயிர்த்தெழுந்த, ஜீவனோடி ருக்கும் கிறிஸ்துவோடு ஒரு உறவை நிலைநிறுத்தமுடியும் என்பதாகும். இது பழைய புதிய ஏற்பாடுகளின் மண உறவைப் போன்றது. இந்த உறவு, தேவனோடுள்ள ஐக்கியத்தை நமக்குத் திரும்பக் கொண்டு வருவதாகவும், தேவனுடைய பிள்ளைகள் என்ற நம்முடைய அந்தஸ் தை உறுதிபடுத்துவதாகவும், தேவனுடைய குடும்பத்துக்குள் நம்மைத் திரும்பவும் கொண்டு வருவதாகவும் இருக்கிறது.

ஆரம்பத்தில், தேவனும் மனிதனும் பரிபூரண ஐக்கியத்திலிருந் தனர் ஆதியாகமம், தெரிந்தெடுக்கும் உரிமையுடைய ஒரு ஜந்துவாக மனிதனைப் படைத்தார் என்றும், மனிதன் தேவனை விட்டுத் தூரமாய் விலகுவதை தெரிந்துகொண்டான் என்றும் சொல்லுகிறது. அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னாலும் மீட்கப்படாமல் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நாம் மீட்கப்பட் டோம் என்று பேதுரு எழுதுகிறார் (1பேதுரு 1:18,19).

ஆனால் இது மீட்பைப் பற்றிய பாதி அற்புதம் மட்டுமே. போவாசுக்கும் ரூத்துக்குமிடையிலான திருமணம் மீட்பின் அற்புதத் தின் இரண்டாவது பரிமாணத்தை நமக்குக் காட்டுகிறது. இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து, நம்முடைய இருதயங்களின் கதவைத் தட்டுகிறார். வேதாகமத்திலுள்ள மிக அழகிய உருவணி, உயிர்த்தெழுந்த ஜீவனோடிருக்கும் கிறிஸ்து நம்முடைய இருதயங் களின் கதவைத் தட்டுவதைச் சித்தரிக்கிறது. நம்முடைய இருதயங் களின் கதவைத் திறந்து, அவரை உள்ளே வரும்படி வரவேற்று, நம்மோடு நெருங்கிய உறவை ஏற்படுத்த விரும்புவதாக அவர் நம் மிடம் சொல்லுகிறார். இந்த உறவில் இயேசு கிறிஸ்து மணவாளன், நாம் ''மணவாட்டி'' (மத்தேயு 25:1-13;யோவான் 3:29; வெளி 21:2; 22:17).

ஆழ்ந்த கருத்துள்ள உருவகக் கதையான ரூத்தின் புத்தகம் இதே சத்தியத்தை எடுத்துக் காட்டுகிறது. இந்த சத்தியத்தை, ''பின்னிருந்து முன்னான அன்பின் கதை'' என்று நான் அழைக்கிறேன். பெரும்

பான்மையான கலாச்சாரங்களில் மனிதன் தெரிந்தெடுத்து, பெண் ணிடம் திருமணம் செய்யும் விருப்பத்தைத் தெரிவிக்கிறான்.

இந்த அழகிய அன்புக் கதையில் மீட்பின் பிரமாணம், ரூத் போவாசிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும் என்பது செயல்படுத்தப்பட்டுள்ளது. நம்முடைய மீட்பிலும் இதே காரியம் உண்மையாயிருக்கிறது. போவாஸ் செய்யக் கூடியதெல்லாம், அவன் ரூத்தை நேசித்தான் என்றும், அவளை மீட்க விரும்பினான் என்றும் காட்டுவதாகும். ஆனால் அவள், ''போவாஸ், நீ என்னுடைய சுதந்தர முறையான மீட்பராயிருக்க வேண்டும், நீயே இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்!'' என்று சொல்ல வேண்டும்.

அதுபோலவே நீயும் நானும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவினிடம், பொறுமையுடன் உங்கள் வாழ்க்கையின் கதவைத் தட்டி நிற்கும்போது, ''நீர் என்னுடைய சுதந்திர முறை மீட்பராயிருக்க நான் விரும்புகிறேன்! சிலுவையின் மேல் உம்முடைய மரணத்தின் மூலமாக என்னைத் திரும்ப வாங்க வேண்டுமென்றும், என்னோடு ஒரு நெருங்கிய உறவை நிலைநாட்டி, தேவனுடைய குடும்பத்துக்குள் என்னைத் திரும்பவும் கொண்டுவர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்'' என்று அவரிடம் சொல்ல வேண்டும்.

ரூத்தின் புத்தகத்தை வாசிக்கும்போது நாம் கவனம் செலுத்த வேண்டிய மற்றொரு அழகிய வேதாகம வார்த்தை இருக்கிறது. அந்த வார்த்தை ''கிருபை''. போவாசைத் திருமணம் செய்து சில ஆண்டு களில், தேவன் ரூத்துக்கும் போவாசுக்கும் ஒரு மகனைக் கொடுத்தார், அவனுக்கு ஓபேத் என்று பெயரிட்டனர். ஓபேத் தாவீதின் பாட்டனார், இது ரூத்தையும் போவாசையும் இயேசு கிறிஸ்துவின் இரத்த வம்சா வழியில் சேர்த்தது. மேசியாவின் வம்சா வழியில் இவர்களது பெயர்களை மத்தேயு சுவிசேஷத்தின் முதல் அதிகாரத்தில் காணலாம்.

இன்னும் நமக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிற சீடரை உரு வாக்குவதில் நகோமி குறிப்பிடப்படும் வழியைக் கவனியுங்கள். பொறுக்குதல் மற்றும் மீட்பின் பிரமாணங்களை ரூத்தோடு பகிர்ந்துகொண்டவள் நகோமி. போவாசைத் தனது மீட்பராக



இருக்கும்படி அவனிடம் ரூத்தைக் கேட்கும்படி உற்சாகமளித்தவர் நகோமி.

நீங்கள் மீட்கப்பட்டீர்களா? இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் திரும்பவும் வாங்கப்பட்டீர்களா? இயேசு கிறிஸ்துவுடன் உறவு இருப்ப தனால் மறுபடியும் தேவனிடம் கொண்டுவரப்பட்டீர்களா? இயேசு கிறிஸ்து உங்கள் சுதந்திர முறையான மீட்பராக இருக்க வேண்டும் என்று நீங்களாகவே கேட்டுக்கொண்டீர்களா?

நம்முடைய சுதந்திர முறையான மீட்பராக இருக்க இயேசு விரும்புகிறார். அவர் ஒரு மனிதரானார். இப்பொழுதே இயேசு கிறிஸ்து உங்கள் இருதயத்தின் வாசலிலே நிற்கிறார். நீங்களாகவே அவரிடம், அவர் உங்கள் சுதந்திரமுறை மீட்பராக இருக்கும்படிக் கேட்க வேண்டும். அழகிய மீட்பின் அன்புக் கதையின் மிக முக்கிய செயல்படுத்துதல் இதுவேயாகும்.

அத்தியாயம் - 6

## 1 சாமுவேலின் புத்தகம்
## தேவனுடைய ராஜ்ஜியம்

முந்திய கையேட்டில், வேதாகமத்தின் முதல் மூன்று வரலாற்றுப் புத்தகங்களைப் (யோசுவா, நியாயாதிபதிகள், ரூத் ஆகியவை) பற்றிப் படித்தோம். இவை எடுத்துக் காட்டுகளையும் எச்சரிக்கைகளையும் கொடுப்பதால், ''கதை மூலமாக உண்மையைத் தெரிவிக்கும் வரலாற்றுப் புத்தகங்கள்'' என்றும் அழைக்கப்பட்டன. சாமுவேலின் முதலாம் புத்தகத்துக்கு வரும்போது, ''ராஜ்ஜிய இலக்கிய வரலாற்றுப் புத்தகங்கள்'' என்று தெரிந்துகொள்ளப்பட்ட வரலாற்றுப் புத்தகங்களின் அடுத்த பகுதிக்கு வருகிறோம். இந்தப் பகுதி முதலாம் இரண்டாம் சாமுவேலின் புத்தகங்கள், முதலாம் இரண்டாம் இராஜாக்கள், முதலாம் இரண்டாம் நாளாகமம் ஆகியவைகளை உள்ளடக்கியது. இந்தப் புத்தகங்கள் எல்லாமே ''ராஜ்ஜிய இலக்கியம்'' ஏனென்றால் அவைகள் தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றிச் சொல்லுகின்றன. சில வேதாகமப்

பதிப்புகள், முதலாம் இரண்டாம் சாமுவேல் புத்தகங்களை முதலாம் இரண்டாம் இராஜாக்கள் என்றும், ஒன்றாம் இரண்டாம் இராஜாக்களை மூன்றாம் நாலாம் இரஜாக்கள் என்றும் குறிப்பிடுகின்றன. நாளாகமப் புத்தகங்கள், வரலாற்றின் அதே கால நிகழ்ச்சிகளை திரும்பவும் சொல்லி, எபிரெய வரலாற்றின் அந்தக் காலவரையை தேவன் எப்படிக் கண்டார் என்பதில் கவனம் செலுத்துகிறது. தேவனுடைய ராஜ்ஜியம் இந்தப் புத்தகங்களின் மையக் கருத்தாகும் - இந்தப் புத்தகங்கள், நாம் புதிய ஏற்பாட்டை, குறிப்பாக இயேசுவின் போதனைகளை வாசிக்கும் போது, முக்கிய கருத்தைப் புரிந்துகொள்ள நமக்கு உதவி செய்கிறது. எனவே, பழைய ஏற்பாட்டு நட்களிலும், கிறிஸ்துவின் போதனைகளிலும் தேவனுடைய ராஜ்யத்தின் அர்த்தம் என்ன, என்று பார்க்கக் கொஞ்ச நேரம் செலவிடுவோம்.

**பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்ஜியம்**

இஸ்ரவேல் புத்திரருக்கு தேவனுடைய சித்தத்தின்படி மோசேயின் தலைமைத்துவம் இருந்தது. கர்த்தர் அவர்களை ஒரு கடவுளின் ஆட்சியின் கீழ் அவர்கள் வாழவேண்டுமென்று விரும்பினார், அதன் அர்த்தம் தேவன் தம்முடைய மக்களை ஆட்சி செய்வது (theocracy). ஒரு கடவுளாட்சிக்கு தேவனுக்கு வேண்டியது ஒரு தீர்க்கதரிசி - ஆசாரியன்; மோசேயைப் போன்ற (பின்னர் சாமுவேல்) ஒருவர். மோசே தேவனுடைய மக்கள் சார்பாக விண்ணப்பம் செய்யும்போது அவர் ஒரு ஆசாரியன் (பார்க்க எண்ணாகமம் 11:2-2; 21:7); மோசே சீனாய் மலையிலிருந்து கீழே தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட வார்த்தைகளைக் கொண்டு வரும்போது, அவர் ஒரு தீர்க்கதரிசி (யாத்திராகமம் 20-24). தேவனுக்கு மோசேயைப் போன்ற ஒருவர் இருந்தவரை, அந்தத் தலைவனின் மூலமாக அவருக்கு மக்களை ஆட்சி செய்ய முடிந்தது. இந்தத் தீர்க்கதரிசி-ஆசாரியன் தேவனுடைய பாத்திரமாக இருக்க முடியும், அவர் மூலம் தேவன் ஆட்சி செய்ய முடியும். தாம் தெரிந்து கொண்ட மக்களின் அரசாங்கத்துக்காக தேவன் வைத்திருந்த திட்டம்.

ஒன்று சாமுவேலில், சாமுவேல் தீர்க்கதரிசி - ஆசாரியனாயிருந்தார் என்று தான் காண்கிறோம். எனினும், சாமுவேல் வயது முதிர்ந்தவனானபோது, இஸ்ரவேலர்கள் அவருடைய பிள்ளைகள் நேர்மையற்றவர்களாயிருந்ததால் மற்ற எல்லாத் தேசங்களையும் போல தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டுமென்று சாமுவேலிடம் கேட்டார்கள் (1 சாமுவேல் 8:1-15). சாமுவேல் இதனால் மிகவும் கலக்கமடைந்து, கர்த்தரிடம் ஊக்கமாக ஜெபித்தான். தேவன் அவனிடம் அதை மக்கள் தன்னை (சாமுவேலை) புறக்கணித்ததாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சொன்னார். தேவன் மக்களுக்கு ராஜாவாக இருப்பதைத் தவிர்த்து அந்த இடத்தில் ஒரு மனித ராஜா இருப்பதைத் தெரிந்துகொண்டதால் உண்மையில் மக்கள் கர்த்தரைத் தான் புறக்கணித்தனர். எனவே தேவன் முக்கியமாக சாமுவேலிடம், ''அவர்களுக்கு ராஜா வேண்டுமானால், சாமுவேல், நாம் அவர்களுக்கு அவர்களுடைய ராஜாக்களைக் கொடுப்போம்!'' (6-22) என்றார்.

இது நம்மை தேவனுடைய ராஜ்ஜியம் என்ற கருத்துக்கு அறிமுகப்படுத்துகிறது. மக்கள் தங்களுக்கு ஒரு குறிப்பிட்ட இன மக்களை ஆட்சி செய்யும் பூமியின் ராஜ்ஜியத்தை ஆசித்தனர். அதை ஏற்பாடு செய்ய, தேவனுக்குக் கீழ்ப்படியும் ஒரு ராஜாவும் மக்கள் சார்பில் அவருடைய பிரசன்னத்தில் வருவதற்கான ஆசாரியர்களும் தேவைப்பட்டனர். அவருக்காக மக்களிடமும் அவர்களுடைய தலைவர்களுடனும் பேசுவதற்குத் தீர்க்கதரிசிகளும் தேவைப்பட்டனர்.

இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்பட்ட முதல் ராஜா, சாமுவேலினால் அபிஷேகம் பண்ணப்பட்ட சவுல் (அதிகாரம் 9). சவுல் தான் கீழ்ப்படியாதவன் என நிரூபித்தான். தேவனுடைய சித்தத்தின்படிச் செய்ய மனதற்றவனாயிருந்தான். சில ஆண்டுகளுக்குப்பின் இஸ்ரவேலின் ராஜாவின் ஸ்தானத்திலிருந்து தேவன் சவுலை, புறக்கணித்தார் என்று சாமுவேல் கூறினார் (அதிகாரம் 15). நாம் காண்பதுபோல ராஜாங்க இலக்கியம் முழுவ திலும், ராஜாங்க காலத்தில் தேவன் இன்னும் தீர்க்கதரிசி-ஆசாரியர்களை வேலையில் அமர்த்தியிருந்தார். ராஜா தேவனுடைய சித்தத்தின்படி நடந்து கொள்ளவில்லையானால், தீர்க்கதரிசி-ஆசாரியன் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அவன் தவற்றைச் சுட்டிக் காட்டினான். அவன் முக்கியமாக, ''தேவன் உனக்குச் சொல்லுவதை நீ செய்வது உனக்கு நலமா

யிருக்கும், அப்படிச் செய்யாவிட்டால், நீயும் மக்கள் எல்லாரும் மிகவும் பயங்கரமாகத் துன்பப்பட வேண்டியிருக்கும்'' என்று சொல்லுவான்.

சவுல் தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருந்தபொழுது, இஸ்ரவேலுக்கு முதல் ராஜாவாகிய சவுலை அமர்த்திய சாமுவேல், தேவன் கட்டளைப் படி அவனைப் பதவியிலிருந்து நீங்கும்படி உத்தரவிட்டார். தேவன் சவுலின் இடத்தில் இளைஞனான தாவீதை அபிஷேகம் பண்ண வழிகாட்டினார். அவன் தேவனைப் பிரியப்படுத்துபவனும், தேவனுடைய சித்தத்தின்படி நடப்பவனுமாயிருப்பான் (அதிகாரம் 16, இன்னும் அப்போஸ்தலர் 12:22 பார்க்க). இஸ்ரவேலுக்கு இருந்த ராஜாக்களில் மிகச்சிறந்த ராஜா தாவீது. அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்ததினால் அவன் மூலமாகத் தேவன் கிரியை செய்ய முடியும். அவன் பூரணமானவனாயில்லாலிட்டாலும் கர்த்தருக்கு அவருடைய இருதயம் மென்மையானதாகவும் தாழ்மையாக ஒப்புக்கொடுப்பதாகவும் இருந்தது என்று நாம் காண்போம்.

அடுத்த ராஜா தாவீதின் மகன் சாலொமோன். முதலில் சாலொமோன் தேவன் பயன்படுத்தத்தக்க மனிதரைப்போல் காணப்பட்டார். தேவனுடைய மக்களை நீதியாய் ஆட்சி செய்ய தனக்குப் பகுத்தறியும் திறனைக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டான், அதனால் தேவன் அவனுக்கு ஞானத்தையும், ஐசுவரியத்தையும், கனத்தையும் சன்மானமாகக் கொடுத்தார் (1இராஜாக்கள் 3:5-14). அவனுடைய தகப்பன் தாவீது கட்டவேண்டும் என்று பேராவ லோடிருந்த தேவாலயத்தை சாலொமோன் கட்டி முடித்தான் (பார்க்க 1 நாளாகமம் 22).

சாலொமோன் எழுநூறு மனைவிகளையும், முன்னூறு மறுமனையாட்டிகளையும் கொண்டிருந்தது மாம்ச இச்சைகளுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தது துக்ககரமானது! இந்தப் பெண்கள் விக்கிரகங்களை ஆராதித்தனர், சாலொமோனும் அவர்களுடைய அந்நிய தேவர்கள் ஆராதனையில் கலந்துகொண்டான் (1 இராஜாக்கள் 11:1-8). தாவீதின் பாவம் மிகப் பெரிய பாவம் என்று பின்பு காண்போம். எனினும் சாலொமோனின் பாவமே தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களின்மேல் குழப்பமான விளைவுகளைக் கொண்டுவந்தன. சாலொமோனின் மகன்



ரெகொபெயாம் சாலொமோனுக்குப்பின் இஸ்ரவேலின் நான்காவது இராஜாவானான் (9-13).

சாலொமோனுக்குப்பின், இஸ்ரவேல் பிரிந்த ராஜ்ஜியமாகியது. பத்துக் கோத்திரங்கள் வடக்கே போய் தங்களை இஸ்ரவேலர் என்றழைத்தனர். இரண்டு கோத்திரங்கள் தெற்கே சென்று (யூதாவும் பென்யமினும்), தங்களை யூதா என்றழைத்தனர். I,II இராஜாக்கள், I,II நாளாகமம் ஆகிய வரலாற்றுப் புத்தகங்களில் அநேக ராஜாக்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வடராஜ்ஜியத்தில் நல்ல ராஜா ஒருவனுமில்லை. தீயவரும் சொல்லமுடியாத கொடுமைக்காரருமான அசீரியர்கள் வடக்கிலிருந்த பத்துக் கோத்திரங்களையும் சிறைக் கைதிகளாக்கினர். அவர்களைப்பற்றி எதையும் பின்னர் கேள்வி ப்படவில்லை. யூதா படிப்படியாக பாபிலோனியர்களால் சிறை பிடிக்கப்பட்டு, எழுபது ஆண்டுகள் அங்கு வாழ வேண்டியதாயிற்று. பெர்சியா பாபிலோனை தோற்கடித்தபோது, கோரேஸ் ஆட்சியைக் கைப்பற்றினார். புதிய ராஜாவாகிய கோரேசை தேவன் ஏவி, கர்த்தருடைய ஆலயத்தைத் திரும்பவும் கட்ட மனதுள்ள யூதர்கள் திரும்பித் தங்கள் தேசத்துக்குப் போகலாம் என்று உத்தரவு பிறப்பிக்கும்படிச் செய்தார் (பார்க்க 2 நாளாகமம் 36:22-23; எஸ்றா 1).

ராஜ்ஜிய இலக்கிய வரலாற்றுப் புத்தகங்கள் வாசிக்க குழப்பமுடையதாயிருப்பதால், அவற்றை கிரகிக்கதக்கவர்களாயிருக்க வேண்டும், எனினும், எபிரெய வரலாற்றின் ஏழு அடிப்படைச் சத்தியங்களின் மேல் கவனம் செலுத்தினால், உங்களுக்கு எப்பொழுதும் ஒரு வரலாற்று சமநிலை இருக்கும்:

1. ஐக்கியமாயிருந்த ராஜ்ஜியம் (சவுல், தாவீது, சாலொமோன் ஆகியோரின் கீழ்)
2. பிரிந்த ராஜ்ஜியம்
3. வடநாட்டை இஸ்ரவேல் அசீரியர்கள் சிறைப்பிடித்தது:
4. வடராஜ்ஜியம் இல்லாமற்போனது
5. தெற்குராஜ்ஜியம் யூதா பாபிலோனியர்களால் பிடிக்கப்பட்டது:
6. பெர்சியா பாபிலோனைத் தோற்கடித்தது
7. பாபிலோனிய (பெர்சிய) அடிமைத்தனத்திலிருந்து திரும்பியது.

சுருக்கமாகச் சொன்னால், பழைய ஏற்பாட்டு தேவனுடைய ராஜ்ஜியம் சொற்படியானது. அது தேவன் அரசாட்சி செய்த வரலாற்று மற்றும் எல்லைகளுக்குட்பட்ட ராஜ்ஜியம், இதன்மேல் தேவனே ராஜ்ஜிய அதிகாரம் முழுவதுமுடையவர், வரலாற்றில், ஒரு குறிப்பிட்ட மக்கள் மேல், குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட காலத்தில் தேவன் தாமே ஒரே ஆழுநராக இருக்க விரும்பினார். எனினும் மக்கள் தேவன் தங்கள் அரசராக இருப்பதைப் புறக்கணித்தனர், அவர்கள் மனித ராஜாக்களைக் கேட்டனர், அவர்களைப் பெற்றும் கொண்டனர், விளைவு? துக்ககரமானவை.

வேதாகமத்தை ஒருபொழுதும் வாசிக்காத பெண்மணி ஒருவரை எனக்குத் தெரியும். அவள் ஒரு பண்புள்ள குதர்க்கவாதி, வேதவசனங் களின் இந்தப் பகுதியைப் பற்றி அவர், ''என்னுடைய வாழ்க்கையில் இதைப் போன்ற பயங்கரமான எதையும் நான் வாசித்ததில்லை. பரிசுத்த ஆவியானவர் இல்லாவிட்டால், இந்தப் புத்தகங்களை நான் வாசித் திருக்க முடியாது. இது பயங்கரமான ஒரு காரியம்!'' என்று சொன்னார்கள். ஆம் அது அப்படித்தான்! தேவன் இந்த ராஜாக்களோ அல்லது அவர்களினால் ஏற்படும் விளைவுகளையோ மக்களுக்கு தேவை என்று ஒருபோதும் விருப்பப்படவில்லை. ராஜ்ஜியத்தைப் பற்றிய இலக் கியத்தில் ராஜாக்களைப்பற்றி நாம் வாசிப்பவைகளுக்குத் தேவன் பொறுப்பல்ல, ஏனென்றால் அவர்களில் அநேகர் தீயவர்கள். மக்களும் இதற்குப் பொறுப்பானவர்கள் தான், ஏனென்றால் இராஜாக்கள் வேண்டும் என்று கேட்டு அவர்கள் தானே அந்த ராஜாக்களைத் தெரிந்தெடுத்தார்கள். ராஜியத்தைப் பற்றிய இலக்கிய புத்தகங்களை வாசிக்கும்போது அதை மறக்காதீர்கள்.

**புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்ஜியம்**

ராஜ்ஜியத்தைப் பற்றிய இலக்கிய புத்தகங்கள், புதிய ஏற்பாட்டில் வாசிக்கும் தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றிய கருத்தை நாம் புரிந்துகொள்ள உதவி செய்கின்றன. வரலாற்றுப்படி, தங்கள் தேவாலயத் தையும் பட்டணத்தையும் திரும்பக் கட்டும்படி யூதர்கள் தங்கள் தேசத்துக்குத் திரும்பி வந்தபின், நெகேமியாவுக்குப்பின் மல்கியா தீர்க்கதரிசியின் மரணம் வரை அமைதியான நானூறு வருடங்களை



அனுபவித்தனர். புதிய ஏற்பாட்டுக்காலம் வரை திரும்பவும் எந்தச் சிறப்பான வெளிப்பாட்டையும் தேவன் பேசவில்லை.

இந்த இடைக்காலத்தில் யூதர்கள் மறுபடியும் சிறைபிடிக்கப் பட்டனர். இந்த முறை அவர்களைத் தோற்கடித்தது ரோம சாம்ராஜ்ஜியம். எபிரெய வரலாற்றின் அந்த அத்தியாயம் யோவான் ஸ்நானனும் மேசியா இயேசு கிறிஸ்துவும் அந்த நானூறு வருட அமைதியை முறித்து தேவனுடைய செய்தியைக் கூறியபோது துவங்கியது. அவர்களது செய்தி என்ன?

தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றிய நற்செய்தி! இயேசு தாம் ஒரு புவியியல், தேசீய அல்லது வரலாற்று ராஜ்ஜியத்தைப் பற்றி சொல்ல வில்லை, ஏனென்றால் அதிக காலத்துக்கு முன்பாகவே அதைப் புறக்கணித்து விட்டனர். மாறாக, தேவன் தாம் அவர்களுடைய ராஜா வாக மறுபடியும் வருவதற்கு சித்தமாயிருக்கிறார் என்று மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என விரும்பினார். இந்த முறை தேவனுடைய ராஜ்ஜியம் அவர்களுக்குள் இருக்கும் (லூக்கா 17:20,21). அதாவது, தேவனுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்த ஒரு மனிதன், பெண், சிறுவன் அல்லது சிறுமி ஆகியோர் தேவனை தங்கள் உள்ளத்தில் வரவேண்டும் என்று கேட்டு, ''நீர் என்னுடைய ராஜாவாக இருக்க வேண்டும், நான் உம்முடைய பிரஜையாக இருக்க விரும்புகிறேன்'' என்று அறிக்கை யிடும்போது, அவர் தேவனுடைய ராஜ்ஜியத்தினுள் நுழைந்து விட்டார்!

இயேசு நிக்கோதேமு என்ற பெயருடைய பரிசேயனிடம் பேசும் போது, அவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத் தினுள் பிறவேசிக்க முடியாது என்று அவனிடம் கூறினர். இயேசுவின் சொற்படி, மறுபடியும் பிறந்த மக்கள் மட்டுமே தேவனைத் தங்களுடைய ராஜாவாகக் காண முடியும் என்றார். (யோவான் 3:3-5; இன்னும் பார்க்க 1 கொரிந்தியர் 12:3), ஒரு முறை தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கண்டால், அவர்கள் அதனுள் போக முடியும். மறுபடியும் பிறப்பதைப் பற்றி அதிகமாக நாம் கேள்விப்படுகிறோம், அது சரியானதே. ஆனால் இந்த வசனப்பகுதியிலே, அடிப்படைப் பாடப்போருள் புதிதாகப் பிறப்பதோ, தேவனுடைய ராஜ்ஜியமோ அல்ல. புதிதாகப் பிறப்பது

முடிவான ஒரு காரியமல்ல, ஆனால் முடிவுக்கு ஒரு வழி - அந்த முடிவு தேவனுடைய ராஜ்ஜியம்.

மலைப்பிரசங்கத்தில் இயேசு நமக்குத் தெரிவித்த முக்கியமான காரியம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? நம்முடைய வாழ்க் கையில் மிகவும் முக்கியமான காரியம் எதுவாயிருக்க வேண்டுமென்று அவர் கூறினார்? முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவரு டைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்'' (மத்தேயு 6:33) என்பதே.

உங்கள் நேரம், பணம், திறன் ஆகியவைகளை எப்படிச் செலவிடு கிறீர்கள் என்ற அடிப்படையில், உங்கள் முன்னுரிமைகள் எவை?

புதிய பிறப்பின் நோக்கம், தேவன் நம்முடைய வாழ்க்கைகளின் மேல் ஆட்சி செய்து அவருடைய ராஜ்ஜியத்தினுள் நம்மைக் கொண்டு வருவதே. ஒரு சிகப்பு மையத்தையும் அதைச் சுற்றி பத்து வட்டங் களையும் கொண்ட குறிப்புப் பலகையைப் போல உங்கள் முன்னுரிமை களைக் கற்பனை செய்யுங்கள். இயேசுவின் கருத்துப்படி, சிகப்பு மையம் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறிக்கிறது. உங்கள் முன்னுரிமைகள் எல்லாம் மையத்தைச் சுற்றியுள்ள வட்டங்களாக வரையறை செய்யப்பட வேண்டும். நமது தெரிந்து கொள்ளுதலும் ஊழியமும், நாம் எவ்வளவு நேர்மையாக அதைச் செய்கிறோம் என்பதும் நம்முடைய முன்னுரிமைக ளைப் பிரதிபலிக்கும். நம்முடைய ஜெபங்களுங்கூட இயேசு நமக்குப் போதித்ததைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்: ''பரமண்டலங் களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப் படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்...'' (மத்தேயு 6:9-11).

''எங்களுக்குத் தாரும்'' என்று நாம் சொல்ல வேண்டும் என்று இயேசு நமக்குச் சொல்வதற்கு முன்பாக, மூன்று முறை தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கூறுவதைக் கவனியுங்கள். அவர், ''தேவனே, உம்முடைய நாமம், உம்முடைய ராஜ்யம், உம் முடைய சித்தம். என்னுடைய முன்னுரிமைகளில் இதுதான் முதன்மை யானது'' என்று நாம் ஜெபிக்க வேண்டுமென்று சொன்னார். அதன்பின், அதற்குப்பின் மட்டுமே, ''எங்களுக்குத் தாரும்'' என்று நாம் ஜெபிக் கிறோம். இஸ்ரவேலர் செய்ததுபோல காரியங்களை நம்முடைய வழியிலே செய்ய முடியும்; எனினும் நாம் அப்படிச் செய்தால், நம்மையும் நம்முடைய முன் உரிமைகளையும் முதலாவது வைத்தால் கசப்பான பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.



ராஜ்ஜிய இலக்கிய வரலாற்றுப் புத்தகங்களில் தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றி ஆய்வு செய்யும்போது அதை உங்கள் மனதில் வைத்திருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் இந்த மையக்கருத்தை புரிந்து கொண்டீர்களானால், புதிய ஏற்பாட்டை வாசிக்கத் துவங்கும் போது அது ஒரு வெளிப்படுத்தலைப் போல உங்கள் மீது திடீரெனத் தோன்றும்! புதிதாகப் பிறப்பதின் நோக்கம் தேவனுடைய ராஜ்ஜி யத்தைப்பார்த்து அதனுள் பிவேசிப்பது தான் என்பதை மறவாதீர்கள். அவருடைய ராஜ்ஜியத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அதனுள் நுழைந்திருக்கிறீர்களா? நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா?

அத்தியாயம் - 7

## தேவனைப்பற்றிக் கேள்விப்படுதல்

முன்னய அத்தியாயத்தில் நாம் பார்த்ததுபோல, பழைய ஏற்பாட்டின் ராஜ்ஜிய இலக்கிய புத்தகங்களை ஆய்வு செய்யும்போது, தேவனுடைய ராஜ்ஜியம் ஒரு கடினமான கருத்தை உடையது என்பதை மனதில் கொள்ள வேண்டும். இந்தப் புத்தகங்களின் இன்னொரு முக்கிய பகுதி இந்தப் புத்தகங்கள் நமக்குக் கொடுக்கும் எடுத்துக்காட்டுகளும் எச்சரிக்கைகளுமாகும். அப்போஸ்தலர் பவுல் எழுதியபடி, ''இவை களெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது'' (1 கொரிந்தியர் 10:11). நமக்கு முன்பாக

இருக்கும் புத்தகங்களில் ஏராளமான எடுத்துக்காட்டுகளையும் எச்சரிக் கைகளையும் நாம் காணலாம்.

முதலாவது, இரண்டாவது சாமுவேலின் புத்தகம் நீண்ட காலத்துக்கு முன்பாக ஒரே புத்தகமாகக் கருதப்பட்டது. 1,2 இராஜாக் களும், 1,2 நாளாகமும் அப்படியே ஒரே புத்தகமாக இருந்தன. சாமுவேலின் புத்தகம் குண இயல்புகளின் மேல், குறிப்பாக மூன்று மனிதர்களின்மேல் கவனம் செலுத்தி, தேவனுடைய சத்தியங்களை நமக்கு எடுத்துக் கூறுவதாக இருக்கிறது. 1 சாமுவேலின் முதல் எட்டு அதகாரங்களும் தீர்க்கதரிசி சாமுவேலின் வாழ்க்கையிலும் தலைமை யிலும் நாம் பின்பற்றக் கூடிய உண்மையான எடுத்துக் காட்டுகளை நமக்குக் கொடுக்கின்றன. அதிகாரங்கள் 9-15 வரை முதல் இஸ்ர வேலின் இராஜாவான சவுல் மீது கவனத்தைத் திருப்புகின்றன. அவரது வாழ்க்கை நமக்கு ஒரு எச்சரிப்பாக அமைகிறது.

1 சாமுவேல் 16 முதல் 2 சாமுவேல் முடிவு வரையில் அடிப் படையான கதாபாத்திரம் தாவீது. இஸ்ரவேல்களின் மிகச் சிறந்த இராஜா தாவீது, பரிசுத்த ஆவியானவர் அவனுடைய வரலாற்றுக்கு ஒதுக்கிய இடத்தை வைத்துப் பார்க்கும்போது, வேதாகமத்திலுள்ள கதாபாத்திரங் களில் மிகவும் முக்கியமானவர்களில் ஒருவர் எனக் காண்கிறோம். சாமுவேலின் புத்தகங்களிலும் சங்கீதப் புத்தகத்திலும் ஏறக்குறைய பாதி தாவீதைப் பற்றியதே. அவர் எழுதிய அநேக சங்கீதங்களின் மூலம் அவருடைய வாழ்க்கையில் என்ன நடந்தது என்பதை அறிகிறோம். அவருடைய வாழ்க்கையைப் பற்றி 1,2 சாமுவேலின் புத்தகங்களில் படிக்கும்போது, அவர் எழுதிய சங்கீதங்களை நன்கு புரிந்து கொள்ள முடியும். அதுபோல் அவர் எழுதிய சங்கீதங்களிலிருந்து சாமுவேல் புத்தகத்தில் அவருடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்த உள்ளான ஒரு பார்வையை நாம் பெற முடியும்.

எனவே 1,2 சாமுவேலின் புத்தகத்தை வாசிக்கும் போது, சாமுவேல், சவுல், தாவீது ஆகிய மூன்று முக்கிய கதாபாத்திரங்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம். முதலில் சாமுவேலில் துவங்குவோம். சாமுவேலின் பெயர் இரண்டு எபிரெய வார்த்தைகள் ‘‘கேள்விப்ப டுவது’’(heard), ‘‘தேவனைப்பற்றி’’(of God) என்பவைகளாலானது.



அவன் எப்படி பிறந்தான் என்பதைக் கவனிக்கும்போது இது மிகவும் பொருத்தமானதாயிருக்கிறது. அவனுடைய தாய் அன்னாள் அநேக ஆண்டுகளாக பிள்ளையில்லையே என்ற மனவேதனையை சகித்து வந்தாள். அந்த நாட்களில், பிள்ளையை சுமப்பது தேவனுடைய ஆசீர்வாதத்தின் ஒரு அடையாளமாக இருந்தது, எனவே அன்னாள் அவளுக்குப் பிள்ளையில்லாததால் தேவன் அவள் மேல் பிரியப்பட வில்லை என்று நினைத்திருக்கக் கூடும்.

ஒருநாள், சீலோவின் கர்த்தருடைய ஆலயத்தில் அவளுடைய குடும்பம் கர்த்தரை வழிபடும்போது, அவள் மனங்கசந்து அழுது, தனக்கு ஒரு மகனைக் கொடுக்கும்படி தேவனிடம் ஜெபித்தாள். அவள் ஊக்கமாக ஜெபித்தபொழுது, அவளுடைய உதடுகள் அசைந்தன, ஆனால் சத்தம் கேட்கப்படவில்லை. இதைப்பார்த்த முதியவரான ஏலி அவள் குடித்திருக்கிறாள் என்று நினைத்தார். அவர் அவளை நோக்கி, ‘‘உன் குடியை உன்னைவிட்டு விலக்கு’’ என்றார் (1 சாமுவேல் 1:14). அன்னா தன்னுடைய நிலைமையை விளக்கியபோது, ஏலி அவள் மேல் இரக்கப்பட்டு அவளை ஆசீர்வதித்து, தேவன் அவளுடைய ஜெபத்துக்குப் பதிலளிப்பார் என்று சொன்னார் (1சாமுவேல் 15-17). அன்னாள் கர்ப்பமாகி ஒரு மகனைப் பெற்றாள்; அவனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள். ஏனெனில் கர்த்தர் அவளுடைய வேண்டு கோளைக் கேட்டார் (20). (வேதவசனங்களில் ‘‘ஏல்’’(el) என்பதோடு முடியும் பெயர் தேவன் சம்பந்தப்பட்டது, தானியேலைப்போல (Daniel), ஏனெனில் எபிரெய மொழியில் தேவன் என்ற வார்த்தை ஏல் என்பதாகும்.)

சாமுவேலை பால்மறக்கச் செய்தபின், அன்னாள் அவனை ஆலயத்துக்கு எடுத்துச் சென்று ஆசாரியன் ஏலியிடம் ஒப்படைத்து அவனை தேவனுக்குக் கொடுத்தாள். அவனுடைய பெயர் பொருத்த மானது என்று மறுபடியும் நிரூபிக்கப்பட்டது, ஏனெனில் சாமுவேல் சிறு பிள்ளையாக தேவனுடைய சமுகத்தில் வளர்க்கப்பட்ட பொழுது அவன் தேவனுடைய சத்தத்தைக் கேட்டான் (அதிகாரம் 3). ஏலி தனது மகன்களைக் கட்டுப்படுத்தி வளர்க்காததால் அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் அவருடைய ஆராதனையையும் இழிவுப்படுத்தினர்.

தேவன் சாமுவேலுடன் பேசி ஏலியைக் கடிந்து கொண்டது என்பது துக்ககரமானது (2:12-17, 22-25, 27-36). ஏலியை தன் தகப்பனை போல பார்த்துக் கொண்ட சாமுவேல், முதியவரான ஆசாரியரிடம், அவர் ஆசாரியப் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்று சொல்ல வேண்டியிருந்தது. ''தேவனைப்பற்றி கேள்விப்படுதல்'' என்ற பெயர் சாமுவேல் மனிதனானபோதும் அவனுக்குப் பொருத்த மாயிருந்தது. வடக்கு முனை முதல் தெற்கு முனை மட்டும் (தாண் முதல் பெயர்செபா மட்டும்) இஸ்ரவேல் முழுவதும் சாமுவேல் பேசியபொழுது தேவன் அவர்களுக்கு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார் என்று தெரிந்து கொண்டார்கள் (3:19-4:1) என்று வேதவசனங்கள் சொல்லுகின்றன. இஸ்ரவேல் முழுவதும் இந்த மனிதன் மூலமாக தேவனுடைய வசனங்களைக் கேட்டார்கள், எனவே ''தேவனைப்பற்றி கேள்விப் படுதல்'' என்பது உண்மையாகவே ஒரு பொருத்தமான பெயர்.

சாமுவேலுடைய வாழ்க்கை அநேக நம்பிக்கையுள்ள எடுத்துக் காட்டுகளை நமக்கு அளிக்கிறது. முதலாவதாக, அவரும் அவருடைய தாயாரும் தெய்வீக பராமரிப்பு மற்றும் கல்வி பயிற்சிகளின் மதிப்பைக் காட்டுகிறார்கள். பயனுள்ளவராகவும் பக்தியுடையவராகவும் இருக்க பரிசுத்த அழைப்புக்கும் பொறுப்புக்கும் நம்முடைய பெற்றோரின் பங்கு என்ன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். நம்முடைய பிள்ளைகள் தேவனிடமிருந்து கிடைத்த மிகப்பெரிய ஆசீர்வாதம் என்றும் நாம் கருதவேண்டும் (சங்கீதம் 127:3). முன்னுரிமை முக்கியத்துவத்தை நாம் அறிக்கையிடும்போது சாமுவேல் யோவான் ஸ்நானன் போல நம்முடைய பிள்ளைகள் ஆவிக்குரிய வளர்ச்சியின் ஆசீர்வாதங்களும் பெற்றுக் கொள்வார்கள்.

இரண்டாவதாக, தேவனுடைய வழியில் ஒரு பிள்ளையினால் எவ்வளவு நன்மைகளைச் செய்ய முடியும் என்பதற்கு சாமுவேல் ஓர் நல்ல உதாரணம். அவன் இஸ்ரவேலரை இருண்டகாலங்களில் வழி நடத்தியது அவனுக்கிருந்த தேவ பக்தியால் தான். சில கல்விமான்கள் அவனை கடைசி நீதிபதியாகக் கருதுகின்றதால் அவனுடைய வாழ்க்கை, எபிரெய வரலாற்றில் மிக முக்கியமானது.



இந்த மிகப்பெரிய மனிதர் ஒரு மிகப்பெரிய அரசியல் தலைவராக மாறி, நியாயாதிபதிகளின் காலத்தையும் இராஜாக்களின் காலத்தையும் இணைக்கும்போது, இந்த சாமுவேலின் புத்தகங்களில் மூன்றாவது நம்பிக்கையூட்டும் ஒரு எடுத்துக்காட்டை நாம் காண்கிறோம். இஸ்ரவேலர்களின் மிகப்பெரிய இராஜாக்களான சவுலையும் தாவீதையும் அவர் அபிஷேகம் செய்தார். சவுலின் தள்ளாடிய ஆட்சியைப் போன்ற குழப்பமான காலங்களில், தம்முடைய வாழ்க்கை முழுவதும் அவர் கர்த்தருக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் உண்மையுள்ளவராயுமிருந்தார்.

**சவுல்**

சவுலின் வாழ்க்கை துக்கம் நிறைந்த எச்சரிக்கைகளோடு காணப் படுகிறது.

வேதவசனங்களில் சவுல் முரண்பாடுடைய ஒருவரராயிருக்கிறார். ஏனென்றால் அவருடைய வாழ்க்கை முட்களுடைய ஒரு இறையியல் கேள்வியை எழுப்புகிறது: ஒரு மனிதன் இன்று இரட்சிக்கப்பட்டு நாளை அதை இழந்தவனாயிருக்க முடியுமா? சிலர், இல்லை உங்களுடைய இரட்சிப்பை நீங்கள் இழக்க முடியாது என்று கூறுகின்றனர்; அவர்கள் துன்மார்க்கர் திரும்பி வந்த அநேக வேதவசனங்களைக் குறிப்பிட்டுத் தங்கள் வாதத்தைத் தாங்குகின்றனர். எனினும் மற்றவர்கள் ஆம், என்கின்றனர், நீங்கள் இரட்சிப்பை இழக்க முடியும்; அவர்கள் சவுலின் அனுபவத்தையும் இன்னும் அநேக வேதாகமப் பகுதிகளையும் குறிப்பிட்டு, அதை இழக்க முடியும் என்று சொல்லுகின்றனர். சவுல் தன்னுடைய வாழ்க்கையில் உண்மையான புத்துயிர் பெற்ற அனுபவத்தைக் கொண்டதாகத் தோன்றுகிறது; பின்னர் இந்த அற்புத புத்துயிரின் கிரியையை இழந்துவிட்டது போல் தோன்றுகிறது. இந்த நிலையை ஆதரிப்பவர்கள், ஒரு துன்மார்க்கராக மாறிய ஒவ்வொரு முறையும் நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்கின்றனர்.

வேதாகமம் தேர்ந்தெடுத்தலைப் போதிக்கிறது, அதாவது, தேவன் தம்முடைய கிருபை, ராஜரீகம் ஆகியவைகளின் அடிப்படையில் மட்டுமே இரடசிக்கிறார் என்று நான் நம்புகிறேன். எனவே ஒரு மனிதன் நம்பத்தகுந்த உண்மையான இரட்சிப்பை அனுபவித்திருந்தால் -

அவர்கள் உண்மையாகவே மறுபடியும் பிறந்திருந்தால் - தங்கள் இரட்சிப்பை இழந்துபோகமாட்டார்கள்.

சவுலுக்கு ஆவிக்குரிய அனுபவம் இருந்தது; முதலில் அவர் ஒரு ஆவிக்குரிய மனிதராக மாறிவிட்டதைப் போல் காணப்பட்டது. சாமுவேல் அவரை அபிஷேகம் செய்தபின் தேவன் அவருடைய இருதயத்தை மாற்றினார் (10:9). தேவனுடைய ஆவி அவன்மேல் வல்லமையாக இறங்கியபோது, அவரோடு சேர்ந்த தீர்க்கதரிசிகளின் கூட்டத்தோடு அவருங்கூட தீர்க்கதரிசனமளித்தார் (10-11). எனினும், சவுலின் வாழ்க்கையைத் தொடர்ந்து ஆய்வு செய்யும்போது, அவருடைய ஆவிக்குரிய வல்லமையை இழந்துவிட்டார் என்பது தெளிவாகிறது.

சாமுவேல் நம்மை சவுலுக்கு அறிமுகப்படுத்துகிறது. அவரைப் பற்றி தெரிந்துகொள்ளும் முதல் காரியம் அந்தத் தேசத்திலுள்ள எவரைக்காட்டிலும் உயர்ந்த மனிதனாகவும் சவுந்தரியமானவனுமாக இருந்தான் என்பதாகும் (9:2). ஒரு மனிதனுடைய சரீரத் தோற்றம் ஒருவரை நியாயப்படுத்துவதற்கோ, தலைமை தாங்குவதற்கோ ஆன தகுதியாக எடுத்துக்கொள்ள முடியாது. இதற்கு முரண்பாடாக, பின்னர் சாமுவேல் சவுலை அபிஷேகம் பண்ணப்போன போது கர்த்தர்: '' நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷர் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்'' (16:17) என்றார்.

முதலாவது நாம் சவுலை சந்திக்கும்போது, அவனும் அவனுடைய வேலைக்காரனும் காணாமற்போன அவனுடைய தகப்பனின் கழுதைகளைத் தேடி அவைகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலையிலிருக்கின்றனர். அவர்கள் முயற்சியைக் கைவிட முடிவு செய்த அந்த நேரத்தில், சவுலினுடைய வேலைக்காரன் பக்கத்திலிருந்த ஒரு தீர்க்கதரிசியை (சாமுவேல்) நினைவுகூர்ந்தான். எனவே அவர்கள் அந்த தேவனுடைய மனிதனிடம் போனார்கள், அவர்கள் வருகைக்காக தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் சாமுவேலை ஆயத்தப்படுத்தியிருந்தார் (9:3-14, 18-20). ''சவுல் வர ஒரு நாளுக்கு



முன்னே கர்த்தர் சாமுவேலின் காதுகேட்க: நாளை இந்நேரத்திற்கு பென்யமீன் நாட்டானாகிய ஒரு மனுஷனை உன்னிடத்தில் அனுப்புவேன்; அவனை என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் அதிபதியாக அபிஷேகம் பண்ணக்கடவாய்'' (15-16). எனவே சவுல் சாமுவேலை சந்தித்தபோது, சாமுவேலுக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது.

சாமுவேல் அவனை ஒரு விருந்துக்கு அழைத்து, கழுதைகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும், இஸ்ரவேலர்கள் ஆசைப்பட்ட இராஜா அவன் தான் என்று அறிவித்தான் (19-20)! திகைப்படைந்த சவுல் பென்யமீன் கோத்திரத்து குடும்பங்களிலெல்லாம் அவனுடைய குடும்பம் அற்பமானது, அந்தக்குடும்பத்திலிருந்து வந்த அவன் எந்தத்தகுதியுமில்லாதவன் என்று பதிலளித்தான் (21).

பழைய ஏற்பாட்டில் தேவன் ஒரு தலைவனை அழைத்தபோது சவுலும் அந்தக் கூட்டத்தில் ஒருவனாயிருந்தான். தேவன் மிகப்பெரிய விடுதலையளிப்பவனாயிருக்கும்படி அழைத்தபோது கிதியோன் இதே வார்த்தைகளைச் சொன்னான், மோசே இதே எதிர்ப்புகளைத் தெரிவித்தான். நியாயாதிபதிகளின் புத்தகத்தின் கடைசியில், வேதாகமத்தில் எழுதப்பட்ட வெறுக்கதக்க சம்பவங்களில் ஒன்றை வாசிக்கிறோம். கிபியாவின் மனிதர்கள் லேவியனின் மறுமனை யாட்டியை அவமானப் படுத்தி, அதனால் அவள் மரணமடைந்ததை யடுத்து பென்யமீனின் கோத்திரத்தார் ஏறக்குறைய நிர்மூலமாக்கப்பட்டனர் (நியாதிபதிகள் 19,20). இஸ்ரவேலர் யாவரும் அவர்களுக்கு எதிராகத் தங்கள் உள்நாட்டுப்போரை முடித்தபின் பென்யமீனில் அறுநூறுபேர் மட்டுமே இருந்தனர்; அந்தக் கோத்திரம் பூமியிலிருந்து அழிந்து போதாபடி அவர்களுக்கு மனைவிகளைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிருந்தது (அதிகாரம் 21).

இது சவுலின் பரம்பரை வரலாறு. அவன் அற்பமான கோத்திரத்திலிருந்து வந்த அற்பமானவனிலும் அற்பமானவன் என்று சொன்னதில் வியப்பொன்றுமில்லை. அவனுடைய தாழ்மை உண்மை யானதும் பிறர் நலம் கருதுவதுமாயிருந்தது. எப்படியிருந்தாலும், சாமுவேல் சவுலோடு அப்பத்தைப் பிட்டு, தேவனுடைய கட்டளைப் படி அடுத்த நாள் அவனை இராஜாவாக அபிஷேகம் பண்ணினார் (1 சாமுவேல் 9:22-10:1).

சவுல் ஒரு நல்ல இராஜாவாயிருக்கவில்லை. ஆவிக்குரிய பிரகார மாய் அவன் ஒரு மிகப்பெரிய இராஜாவாகவும், மிகப்பெரிய மனிதனாகவும் இருந்திருக்க முடியும். தேவன் அவனையும் அவன் சந்ததியாரையும் நித்தியமாய் இஸ்ரவேல் அரசர்களாயிருக்கும்படித் திட்டமிட்டிருந்தார். எனினும் அவனுடைய கீழ்ப்படியாமையினால், ராஜ்ஜியம் அவனிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது (13:13-14).

தேவன் இருதயத்தை மாற்றிய மனிதனுக்கு என்ன நேரிட்டது? அவனுடைய பார்வையில் ஒரு காலத்தில் அவன் சிறியவனாயிருந்தான் (15:17), எனினும் இப்போது அவனுடைய கருத்துக்கள் தேவனுடைய கருத்துக்களைவிட முக்கியமானவை என்று நினைப்பதைப்போல் தோன்றுகிறது. அவன் ஒரு முறையல்ல, இரண்டு முறை கீழ்ப்படிய வில்லை. முதலாவது, பெலிஸ்தருக்கு எதிரான போரில், பலிசெலுத்த சாமுவேல் வரத் தாமதமானபோது, அவன் பீதியடைந்து, ஆசாரியரின் கடமையை எடுத்துக் கொண்டு தானே பலியிட்டான் (அதிகாரம் 13). சாமுவேல் அவனைக் கடிந்து கொண்டபோது, இஸ்ரவேலில் ஒரு பொழுதுமில்லாத மிகப்பெரிய தாவீதைப் பற்றி நாம் கேள்விப்படுவது இதுவே முதல் முறை.

இரண்டாவதாக, அமலேக்கியர்களை நிர்மூலமாக்காமல் விட்ட தால் சவுல் தேவன் கொடுத்த இரண்டாவது தருணத்தையும் இழந்தான் (அதிகாரம் 15). எல்லாவற்றையும் அழிக்கும்படி சவுலுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது - எல்லா மக்களும், எல்லா மாடுகளும், ஆடு களும், ஒட்டகங்களும் கழுதைகளும். எல்லாவற்றையும்! ஆனால் சவுலும் அவனுடைய போர்வீரர்களும் கொள்ளைப்பொருட்களில் நல்லவைகளைத தங்களுக்கு வைத்துக் கொண்டார்கள், அமலேக்கிய ராஜாவையும் கொல்லாமல் விட்டுவிட்டனர். கர்த்தர் சாமுவேலிடம், ''நான் சவுலை ராஜா வாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருந்து; அவன் என்னைவிட்டுத் திரும்பி என் வார்த்தைகளை நிறைவேற்றாமற் போனான்'' (11) என்றார். பின்னாக ஆடுகளின் சத்தத்தையும் பொருட் படுத்தாமல் கர்த்தருக்கு முற்றிலும் கீழ்ப்படிந்ததாகச் சொன்ன பவுலை, வருத்தத்தோடு சாமுவேல் எதிர்த்தார் (13-14). அப்பொழுது சவுல் தானும் தன்னுடைய மனிதர்களும் கர்த்தருக்குப் பலியிடுவதற்காகக்



காப்பாற்றினார்கள் என்று சாக்குபோக்குச் சொன்னார். ஆனால் சாமுவேல் எதையும் நம்பவில்லை. அவர் சவுலிடம், தேவன் பலியைப் பார்க்கிலும் தமக்குக் கீழ்ப்படிவதிலேயே அதிகப் பிரியமுடைய வராயிருக்கிறார், அவனுடைய இறுமாப்பான கலகம் பில்லிசூனியம் விக்கிரகாராதனை ஆகியவைகளைப்போல இழிவானது என்றார். சாமுவேல் வெளியேற முயற்சித்தபோது, சவுல் அவரைப் பிடித்து அவர் சால்வையை கிழித்தான். சாமுவேல் சவுலிடம் இதைப்போலவே கர்த்தர் அவனிடமிருந்து அவனுடைய ராஜ்யத்தை கிழித்துப்போட்டார் என்று சொன்னான் (22-29).

பின்பு, தேவனுடைய ஆவி சவுலை விட்டு நீங்கிப்போயிற்று என்று பார்க்கிறோம் (18:17). இதற்குரிய வார்த்தை ''இக்காபாட்''(ichabad) என்பதாகும். இதன் அர்த்தம், ''மகிமை வெளியேறிற்று'' என்பது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவனுடைய ஆவி மனிதர் மேல் வந்தது, அவர்கள் அவருக்குக் கீழ்ப்படியாவிட்டால் ஆவி அவர்களை விட்டுப் போய் விடுகிறது. உயிர்த்தெழுந்த இயேசு நமக்குள் வாசமாயிருக்கும் போது அவர் நம்மைவிட்டு விலகுவதுமில்லை, நம்மைக் கைவிடுவது மில்லை என்று வாக்குத்தத்தம் இன்று நமக்கிருக்கிறது (எபிரெயர் 13:5). ஆனால் சவுலினுடைய வாழ்க்கை ஒரு துக்ககரமான எச்சரிப்பு. இன்று அவரைவிட்டுப்போகவும், அவரைத் துக்கப்படுத்தவும், அவரை சாந்திப்படுத்தவும் முடியும். சவுலின் வாழ்க்கை அபிஷேகம் செய்யப் பட்டவரின் கீழ்ப்படியாமைக்கு எதிரான ஒரு எச்சரிக்கை - தேவனுடைள கிருபையையும் ஆசீர்வாதங்களையும் வீணாக்குபவர் களுக்கு எதிரான ஒரு எச்சரிக்கை.

அத்தியாயம் - 8

# அபிஷேகம் பெற்றவர் கீழ்ப்படிதல்

சவுல், தாவீது ஆகியோர்களின் வாழ்க்கைகளைத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யும்போது, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப் படுவது என்பது மக்களைக் கீழ்ப்படியும் இயந்திரங்களாக மாற்றிவிடாது என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். நமக்கு இன்னும் சுயசித்தம்

இருக்கிறது. சவுலைப் பொருத்தவரையில், அவனால் முற்றிலும் தெரிவு எசய்ய முடிந்து, எனினும் தொடர்ந்து அவன் தவறான முடிவுகளையே எடுத்தான். எனவே கர்த்தர் தம்முடைய ஆவியை அவனிலிருந்து விலக்கிக் கொண்டார் (1 சாமுவேல் 16:14; 18:12).

சவுலுக்கு நடைபெற்றதுபோல இன்று நமக்கும் நடைபெறுமா? பரிசுத்த ஆவி பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்களோடு இடைபட்ட முறையைவிட, சிலுவை, பெந்தெகொஸ்தே ஆகியவைகளால் நம்மோடு வேறுவகையில் இடைபடுகிறார் என்று நான் நம்புகிறேன். ''உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்'' (சங்கீதம் 51:11) என்று தாவீது ஜெபிப்பதை நாம் கேட்கிறோம். இயேசு நம்மிடம், ''நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' (எபிரெயர் 13:5) என்று சொல்லுகிறார். புதிதாகப் பிறக்கும் அனுபவத்தை நாம் பெற்றுக் கொண்டதும், தேவன் தம்முடைய ஆவிக்குரிய கிரியையை நமக்குள் நடப்பிக்கிறார். ''...இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய...'' (பிலிப்பியர் 1:5,2:13). நம்முடைய நாட்களில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை இரண்டு பரிமாணங்களைக் கொண்டது:

(i) நமக்குள் அவருடைய கிரியை; இது புதிய பிறப்பைக் குறிக்கிறது. இது ஆவியின் கனிகளினால் வெளிப்படுத்தப்படுகிறது (கலாத்தியர் 5:22,23). (2) அவருடைய ஆசீர்வாதம் அல்லது நம் மேல் அவருடைய அபிஷேகம். அவருடைய கிரியையின் இந்தப் பரிமாணம், பரிசுத்த ஆவியானவரின் வரங்களின்மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

சவுலின் கீழ்ப்படியாமை கர்த்தர் அவனைத் தம்முடைய சமுகத்திலிருந்து எடுத்துப்போட்டு அவனிடமிருந்து பரிசுத்த ஆவியையும் எடுத்து போடச் செய்தது. அது ஒருவரது தனிப்பட்ட குணம் சிதைவுபடுதலையும் அதன் விளைவுகளையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

**சவுலின் மனச்சிதைவு**

சவுலை ஒரு மனப்பிரமை பிடித்த ஒருவர் என்று கூறலாம். அவர் இல்லாத ஒன்றைக் கற்பனை செய்வார். எல்லாரும் அவனுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுகின்றனர், குறிப்பாக இளைஞன் தாவீது தனக்கு எதிரி என்று நம்பினான். கடைசியில் அவன், தாவீது அவனுடைய



ராஜ்ஜியத்தை எடுத்துக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறான் என்று நம்பி அவன்மேல் பைத்தியக்காரத்தனமாகப் பொறாமை கொண்டான் (1 சாமுவேல் 18:8; 20:30-31). ஒரு வகையில், அவனிடமிருந்து ராஜ்ஜியத்தை எடுத்து அவனைவிட சிறந்த வேறோருவன் கையில் கொடுப்பார் என்ற சாமுவேலின் தீர்க்க தரிசனத்தால் சித்தரவதை செய்யப்பட்டிருப்பான் - அதாவது தேவனுடைய சித்தத்தைத் தன் முழு இருதயத்தோடும் நிறைவேற்றக் கூடிய ஒருவனைத் தேர்ந்தெடுப்பார் (13:14).

சவுலின் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்திய குணத்தை ஒரு வார்த்தையில் சொன்னால், ''கீழ்ப்படியாமை''. சவுலின் வாழ்க்கையை தேவன் 'இச்சாபட்' (Ichabod) என்ற ஒரு வார்த்தையில் எழுதினார். இதன் அர்த்தம் 'கனப்படுத்தப்படாமல் விடுவது' என்பது.

**தாவீது: தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற ஒரு மனிதன்**

சவுலின் வாழ்க்கைக்கு முற்றிலும் நேர் மாறாக உள்ள வாழ்க்கை தாவீதினுடைய வாழ்க்கை தாவீதின் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்திய குண இயல்பு, கீழ்ப்படிதல் - அவன் தேவனுடைய சித்தத்தைத் தன் முழு இருதயத்தோடும் நிறைவேற்றிய ஒரு மனிதன். தேவனிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்ட சவுலின் வாழ்க்கை சிதைந்திருந்த இடத்தில், தாவீதின் வாழ்க்கையில் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தார். ஏனெனில் சவுல் கீழ்ப்படியாமையில் கவனம் செலுத்தியதுபோல தாவீது கீழ்ப்படிதலில் அதிக கவனம் செலுத்தினான். பெத்லேகேம் ஊரானாகிய ஈசாயின் வீட்டுக்கு, சவுலுக்கு அடுத்து வரும் இஸரவேலின் ராஜாவை அபிஷேகம் பண்ணும்படி தேவன் சாமுவேலை அனுப்பினார். எனினும் தீர்க்கதரிசி - ஆசாரியனாகிய சாமுவேல் அழகான மூத்த மகன் ராஜாவாக மனதில் பதியக் கூடியவனாக இருப்பான் என்று நினைத்தார்; எனவே இந்த முக்கியமான உண்மையைச் சொல்லி தேவன் அவனுடைய பார்வையை சரி செய்தார்:

''நீ இவனுடைய முகத்தையும் இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பர்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்'' (16:7).

ஈசா அவனுடைய ஏழு பெரிய உடற்கட்டுடையவர்களும் பலசாலிகளுமான ஏழு மகன்களையும் ஒருவர் பின் ஒருவராக சாமுவேல் முன் போகச் செய்தான், எனினும் அவர்களில் ஒருவரையும் தேவன் தெரிந்தெடுக்கவில்லை. ஒருவேளை கொஞ்சம் குழப்பமடைந்த வனாக சாமுவேல் ஈசாவிடம் அவன் பிள்ளைகள் இவ்வளவுதானா என்று கேட்டான்(11). நல்லது, ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த இன்னொரு மகன் அவனுக்கிருந்தான் (11). சாமுவேல் ஈசாவிடம் அவனைக் கூட்டிக் கொண்டு வரும்படிச் சொன்னார். சகோதரர்களில் இளையவனும் அற்பமானவனுமான தாவீதுத் தான் (அதிகப் பரிசிசயப் பட்ட பெயர் போலிருக்கிறதா?) அடுத்த ராஜாவாக தேவன் தெரிந் தெடுத்தவன்(12). எனவே சாமுவேல் அவனை அபிஷேகம் செய்தார், அந்த நாள் முதல் பரிசுத்த ஆவியானவர் அவன் மேல் இறங்கினார் (13).

அப்படியிருந்தபோதிலும் தாவீது ராஜாவாக வெகுகாலம் ஆகியது. 1 சாமுவேலின் பெரும் பகுதியில் தாவீது தேவனுடைய கலாசாலையில் ஆயத்தம் பண்ணப்படுவதை நாம் காண்கிறோம். சவுலின் எரிச்சலும் கொலைவெறியும் அவனைப்பின் தொடர்ந்தபொழுது, தாவீது எல்லா விதமான சோதனைகளின் வழியாகச் சென்றான், என்ன நேரிட்டாலும் கர்த்தரை நம்பி அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவைகள் அவனுக்குப் போதித்தன. அவன் அனுபவித்தவைகள் எல்லாம் அவனு டைய வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்ற அவனைத் தகுதியுள்ளவனாக்கியது. தேவன் இதை நமக்கும் செய்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? நாம் உயிரோடிருக்கும் ஒவ்வொரு நாளும், நாம் உயிரோடிருக்கப் போகும் அடுத்த நாளுக்கும் நம்மை ஆயத்தப்படுத்துகிறது. நாம் தேவனை நேசித்து அவருடைய நோக்கத்தின்படி அழைக்கப் பட்டிருப்போமானால், வருங்காலத்தில் தேவன் நாம் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறரோ அதற்கு நாம் அனுபவப்படும் ஒவ்வொரு காரியமும் உதவியளிப்பதாயிருக் கிறது (ரோமர் 8:28).

தேவன் தாவீதுக்குக் கொடுத்த அனுபவங்கள் சிலவற்றையும், தேவன் அவன் எப்படியிருக்க வேண்டும் என்று விரும்பினாரோ,



அப்படிப்பட்ட ஒரு மனிதனாக அவனை எப்படி உருவாக்கினார் என்பதையும் பார்ப்போம்.

**மேய்ப்பனாகிய தாவீது**

மோசே, தாவீது போன்ற வேதாகமத்திலுள்ள மிகப்பரிய தலைவர் கள் மேய்ப்பர்களாயிருந்தனர். இதற்கு ஒரு காரணம் இருக்கிறது, தாவீதின் அனுபவம் இந்தக் காரணத்தை நமக்குக் காட்டுகிறது. தன்னுடைய தகப்பனின் மந்தைகளை பாதுகாக்கும்போது, ஆடுகளைத் தாக்கிய சிங்ககளையும் கரடிகளையும் எதிர்த்துப் போரிட வேண்டி யிருந்தது (1 சாமுவேல் 17:34-36). மேசியா இயேசு கிறிஸ்துவைப் போல, தாவீது ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்க சித்த முடையவனாயிருந்தான் (ஒத்துப் பார்க்க யோவான் 10:11-15). தேவன் இதைப் பார்த்து, ''தன்னுடைய தகப்பனாரின் ஆடுகளைப்பற்றி அந்த இளைஞன் அப்படிப்பட்ட உணர்வுடையவனாயிருந்தால், என்னுடைய ஆடுகளைப்பற்றியும் அப்படியே உணருவான். நான் அவனை ஒரு ராஜாவாக்க வேண்டும்!'' என்று நினைத்திருக்கக் கூடும்.

**இசைக்கலைஞன் தாவீது**

சவுல் மனச் சோர்வடைந்த இருண்ட மனநிலையில் இருந்தபோது அவனுக்கு உதவி தேவைப்பட்டது. அவனுடைய சேவகர்கள் இசை மருத்துவம் நல்லது என்று அறிவித்தனர், சிலருக்குத் தாவீதின் இசை ஞானத்தைப் பற்றித் தெரிந்திருந்தது.

அவர்களில் ஒருவன், பெத்லெகேமில் ஈசா என்று ஒரு மனிதனின் மகனான ஒரு வாலிபனை தனக்குத் தெரியும் என்றும், அவன் சுரமண்டலம் வாசிப்பதில் தேறினவன் மட்டுமல்ல, அழகானவன், பலவான், நல்ல உறுதியான முடிவெடுக்கக் கூடியவனுமாவான் என்று சொன்னான். '' கர்த்தர் அவனோடிருக்கிறார், இதை விட வேறு என்ன வேண்டும்?'' என்றும் அவன் சொன்னான் (16:18).

எனவே தாவீது சவுலின் ஆவியை தன் இசையினால் சாந்தப் படுத்தினான் (23), அவன் எழுதிய சங்கீதங்களையும் பாடியிருக்கக் கூடும். சங்கீத புத்தகத்தின் ஏறக்குறை பாதி சங்கீதங்களை தாவீது

எழுதினான் என்றும், அது இஸ்ரவேலின் ஞானப்பாட்டுப் புத்தகமாய் இருந்ததென்றும் மறவாதீர்கள். அவனுடைய வாழ்க்கையின் இறுதிப் பகுதியில், அவன் தேவாலய நிர்வாகத்துக்கும் அதன் ஆராதனை முறைக்கும் ஏற்பாடு செய்தான் - ''கர்த்தருக்கு துதி செய்ய'' தாவீது உண்டுபண்ணிய கீதவாத்தியங்களை இசைத்த நாலாயிரம் ஆசாரியர் களையும் உள்ளடக்கியது. (1 நாளாகமம் 23, வசனம் 5). தேவனுடைய மக்களின் சரித்திரத்தில் வேறு எந்த நபரையும் விட தாவீது இசையையும் தேவனுடைய வசனங்களையும் சதாகாலங்களுக்கும் ஒன்றாக இணைத் தான்.

**போர்வீரனாகிய தாவீது**

வாலிப வயதிலேயே, தாவீது கர்த்தருடைய போர்களில் ஈடு பட்டான். தாவீது, கோலியாத்து பற்றிய கதை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? (1 சாமுவேல் 17). கோலியாத்து பெலிஸ்தர்களின் மாவீரன், அவன் ஒன்பது அடி உயரமுடைய ஒரு இராட்சதன்! (4) அவன் பயத்தினால் ஸ்தம்பித்துப் போயிருந்த கர்த்தருடைய சேனைகளை இகழ்ந்தான். அப்போது போர்முனையிலிருந்த தன்னுடைய சகோ தரர்களுக்கும் அவர்களுடைய அதிபதிகளுக்கும் கொடுப்பதற்காக மட்டுமே வந்திருந்த தாவீது, கோலியாத்தின் ஜம்பப் பேச்சைக் கேட்டான். அவன், தான் ''விருத்தசேதனமில்லாத இந்த பெலிஸ்த னோடு'' போரிடுவதாக அறிவித்து, கோலியாத்தை நேராகச் சந்தித்த போது அவனிடம்:

> ''நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ர வேலுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றைய தினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக் கொடுப்பார்... கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக் கூட்டமெல்லாம் அறிந்து உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்'' (45-47) என்று சொன்னான்.



இதன் சாராம்சம், தாவீது காரணம் தேவனுடையது, யுத்தமோ கர்த்தருடையது என்பதாகும்.

**தாவீது, மனிதர்களின் தலைவன்**

தாவீது மிகப்பெரிய செல்வாக்குடைய ஒரு பெரிய அதிபதியாகவும் ஆனான். அவனுக்காக தங்கள் உயிரையும் கொடுக்க அவனுடைய மனிதர்கள் சித்தமாயிருந்தனர். மனநிலை சரியாயில்லாத சவுலினிட மிருந்து அதுல்லாம் குகைகளில் மறைந்து தாவீது வாழ்ந்து கொண் டிருந்தபோது, பெலிஸ்தர் இஸ்ரவேலின் மீது படையெடுத்து பெத்லெகேமைக் கைப்பற்றினர். தாவீதின் சிறந்த படையினர் அவனைப் பார்க்க வந்தபொழுது, அவன் பெத்லெகேம் நகரத்தின் கிணற்றிருந்து தண்ணீர் குடிப்பதற்கு வேண்டுமென்று தற்செயலாகச் சொன்னான். எனவே இந்த மனிதர்கள் எதிரியின் படைகளை தைரியமாக ஊடுருவிச் சென்று, தாவீதுக்கு அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவந்தனர்! எனினும் தாவீது அதைக் குடிக்கவில்லை - அதைக் குடிக்க அவனுக்குத் தகுதியில்லை, ஏனென்றால் அந்தத் தைரியமான மனிதர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து அந்தத் தண்ணீரைக் கொண்டு வந்தனர் என்று சொல்லி, கர்த்தருக்கு முன்பாக அதை ஊற்றினான் (2 சாமுவேல் 13-17). தன்னைப் பின்பற்றுவர்களை யுடைய ஒரு மனிதனே ஒரு தலைவன் என்று சொல்லுகிறார்கள். தாவீது மனிதர்களுக்கு ஒரு உண்மையானத் தலைவனாயிருந்தான்.

**தாவீதும் யோனத்தானும்**

நண்பர்கள் என்று சொல்லுவதற்கு உலகத்திலுள்ள அழகிய எடுத்துக்காட்டுகளில் ஒன்று சவுலின் மகனான யோனத்தானுடன் தாவீதுக்கிருந்த நட்பு: யோனத்தான் கொல்லப்பட்டான் என்று கேள்விப்பட்டதும், தாவீது, ''என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்ப மாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது!'' (2 சாமுவேல் 1:26) என்று சொன்னான்.

அநேக மனிதர்களால் மற்றொரு மனிதனின் கண்ணைப் பார்த்து, ''நான் உன்னை சிநேகிக்கிறேன் என்று சொல்ல முடியாது.'' ஒருவேளை இது ஆண்புணர்ச்சி உறவு என்று தவறாகப் புரிந்து கொள்ளப்படக் கூடும். ஆனால் ஒரு மனிதனுக்கும் மனிதனுக்கும் அல்லது ஒரு பெண்ணுக்கும் மற்றொரு பெண்ணுக்கும் இடையே சிநேகமிருப்பது ஒரு அழகான காரியம். என்னுடைய அனுபவத்தில், இந்த வாழ்க்கையில் அழகான ஒன்றை தேவன் வடிவமைக்கும்போது சாத்தான், தேவன் நமக்குக் கொடுக்க விரும்புகிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நமக்குக் கிடைக்காமலிருக்கும்படிச் செய்ய முயற்சிக்கிறான். தாவீதின் இருதயத்தையும் யோனத்தானின் இருதயத்தையும் ஒன்றாக இணைத்தவர் தேவன்.

தாவீதின் வாழ்க்கையில் ஆவிக்குரிய இரகசியம் என்ன? அவன் தேவனுடைய சித்தத்தின்படி எல்லாக் காரியங்களையும் செய்து முடிக்க விரும்பி, முற்றிலுமாகத் தன்னைத் தேவனுக்கு விட்டுக் கொடுத்தவன். தேவனுக்குத் தன்னை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்த ஒருவனோடு தேவன் என்ன செய்ய முடியும் என்பதற்கு ஒரு மிகப்பெரிய எடுத்துக் காட்டாக தாவீது காணப்படுகிறான்.

அத்தியாயம் - 9

## வெற்றிகரமாகத் தோல்வியடைவது எப்படி?

வேத வசனங்களில், பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பெற்றுக் கொள்ளுவதற்கு முக்கியமான காரியம் கீழ்ப்படிதல். இயேசு, ''நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது ... வேறொரு தேற்றரவாளனை (பரிசுத்த ஆவியானவர்) உங்களுக்குத் தந்தருளுவார்'' (யோவான் 14:15,16). இதன் கருத்து, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அனுபவிக்க, கீழ்ப்படிதல் ஒரு முன் தேவையாயிருக்கிறது (பார்க்க அப்போஸ்தலர் 5:32). தாவீதின்



வாழ்க்கையின் பெரும் பகுதியில் அவன் உண்மைக்குப் பிரகாரமான ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினான்.

**வெற்றியின் சூரிய உதயம்**

அபிஷேகம் செய்யப்பட்ட கீழ்ப்படிதலில் தாவீதின் எடுத்துக் காட்டு 2 சாமுவேல் 7ல் உச்ச நிலையையடைந்தது. தேவனுக்கு ஒரு வீட்டைக் கட்ட வேண்டும் என்ற ஆவல் அவன் இருதயத்திலிருந்தது. அவன் கேதுரு மரத்திலான ஒரு அரண்மனையில் வாழ்ந்தான், எனவே ஒரு மிகப்பெரிய அரண்மனையை தேவனுக்குக் கட்ட விரும்பினான், ஏனெனில் தேவன் பூமியில் அந்த வேளையில் ஒரு கூடாரத்தில் வாசம் செய்தார். எனினும் தீர்க்கதரிசி நாத்தான் தேவன் தமக்காக தாவீது ஒரு வீட்டைக் கட்டுவதை விரும்பவில்லை'', ஏனெனில் அவர் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டப்போகிறார் - அவர் வம்சாவழியில் பிறந்த இயேசு, நித்திய ராஜ்ஜியமான இஸ்ரவேல் மகன்களின் சந்ததியை அரசாளும்.

மேசியா அவன் வழியில் தோன்றுவார், அவருடைய ராஜ்ஜியத்திற்கு முடிவே இருக்காது (லூக்கா 1:33).

தாவீது ஒரு அழகிய ஜெபத்தினால் பதிலளித்தான்:

> ''கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இது வரைக்கும் கொண்டுவந்தது எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்? கர்த்தராகிய ஆண்டவரே, இது இன்னும் உம்முடைய பார்வைக்குக் கொஞ்ச காரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருந்த தேவரீர் உம்முடைய அடியானுடைய வீட்டைக்குறித்து, வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை மனுஷர் முறையாய்ச் சொன்னீரே. இனி தாவீது உம்மிடத்தில் சொல்ல வேண்டியது என்ன? கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நீர் உமது அடியானை அறிவீர். உம்முடைய வாக்குத்தத்தத்தினிமித்தமும், உம்முடைய சித்தத்தின் படியேயும், இந்தப் பெரிய காரியங்களெல்லாம் உமது அடியானுக்கு அறிவிக்கும்படிக்குத் தயவு செய்தீர்'' (2 சாமுவேல் 7:18-21).

தேவன் நம்மை ஆசீர்வதிப்பது நாம் செய்த காரியங்களின் சாதனைகளால் அல்ல. தேவன் தம்முடைய கிருபையினால் நம்மை ஆசீர்வதிக்கிறார் என்பதே தாவீது தம் ஜெபத்தில் சொல்லியவைகளின் சாராம்சம்.

**பாவத்தின் புயல் மேகங்கள்**

2 சாமுவேல் 11க்கு வரும்போது தாவீதினுடைய வாழ்க்கையில் நீண்டதும் மிகக்கடினமானதுமான மற்றொரு அத்தியாயத்தை நாம் துவங்குகிறோம். இங்கே தாவீது ஒரு எடுத்துக்காட்டாக இருப்பது முடிவடைகிறது; அவனுடைய வாழ்க்கை வேதாகமத்திலுள்ள மிகப் பெரிய எச்சரிக்கைகளில் ஒன்றாகிறது. விபசாரம், கொலை ஆகிய பாவங்களைச் செய்து, ஒரு முழு ஆண்டு அந்தப் பாவத்தை மூடி மறைக்க முயற்சித்தான்.

தேவனுடைய இருதயத்தைப் பின்பற்றிய, தேவனின் சித்தத்தின் படியான எல்லாக்காரியங்களையும் செய்து முடித்த ஒரு மனிதன் எப்படி, துக்ககரமாக வீழ்ச்சியடைய முடியும்? தாவீதினுடைய பாவங்களுக்கு நான் அநேக காரணங்களைக் காண்கிறேன். முதலாவதாக, தாவீது ஒரு மனிதன் தானே. அவன் ஒரு தெய்வ பக்தியுள்ள மனிதனாயிருந்தாலும், அவன் பாவம் செய்வதற்கு அல்லது ஆவிக்குரிய தோல்விக்கு அப்பாற் பட்டவனல்ல (பார்க்க 1 கொரிந்தியர் 10:12,13).

இரண்டாவதாக, தாவீதினுடைய வெற்றி அவனைப் பாவத்திற்கு வழி நடத்திற்று. 2 சாமுவேல் 11:1ல்: ''மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வந்தபோது, தாவீது யோவாபையும், அவனோடேகூடத் தன் சேவகனையும், இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கைபோடவும் அனுப்பினான். தாவீதோ எருசலேமில் இருந்து விட்டான்.''

போரில் தலைமை தாங்கி போவதற்குப்பதிலாக தாவீது அவனு டைய இடத்தில் யோவாபை அனுப்பிவிட்டு தான் எருசலேமில் இருந்தான். தாவீது பாவஞ்செய்தான், ஏனெனில் அவன் தன்னுடைய வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தத்தின்படிச் செய்யவில்லை. தாவீது அவனுடைய வெற்றியின் உச்சியில் இருந்தாலும் தாவீது பாவஞ்



செய்தான் என்று நான் நம்புகிறேன். ஒரு முறை அப்போஸ்தலர் பவுல், ''தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்'' (பிலிப்பியர் 4:12) என்று சொன்னார். தேவையாயிருப்பதைக் கையாள ஆவிக்குரிய முதிர்ச்சி அதிகமாய் அவசியப்படுகிறது. போது மானதற்கு அதிகமாய் இருக்கும்போது, ஒருவேளை இன்னுமதிகமாக ஆவிக்குரிய முதிர்ச்சி வேண்டியிருக்கிறது. நமக்கு அபரிமிதமாக இருக்கும்பொழுது நாம் அதிகமாக தேவனைச் சார்ந்திருப்பதில்லை, தாவீதைப் போல இது நம்மை ஆவிக்குரியபடி பலவீனமாக்குகிறது.

தாவீதினுடைய படை, ராபா நகரை முற்றுகையிடும்போது, இரவில் எருசலேமில், தாவீது ஒரு உப்பரிகையின்மேல் போய் ஒரு அழகான பெண் குளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். - அவன் கண்டதை அடைய ஆசைப்பட்டான். அவன் ராஜாவாயிருந்ததால், அவனுக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ள அவனுக்கு அதிகார மிருந்தது. அவன் அவளை எடுத்துக் கொண்டான். தாவீதினுடைய விபசாரம் ஒருவருக்கொருவர் இடையிலான அன்பின் விவகாரமல்ல - வாசிக்கும்போது இதைக் கவனியுங்கள், இதைப் பற்றிச் சொல்ல பத்சேபாளுக்கு ஏதுவில்லை. அது அவள் விரும்பியதல்ல. அவளு டைய கணவன் உரியா தாவீதினுடைய படையில் ஒரு வலிமை மிக்க மனிதன், அவள் தன் கணவனை அதிகமாக நேசித்ததுபோல் தோன்று கிறது. ஆனால் அவளுடைய கணவன் தாவீதுக்காக யுத்தம் பண்ணி வெகு தூரத்திலிருந்தான்.

பத்சேபாள் கர்ப்பவதியாயிருப்பதைத் தாவீது தெரிந்து கொண்ட பொழுது, அவளது கணவனை அவன் போரிலிருந்து திரும்ப அழைத்துக் கொண்டு வந்தான். உரியா வீட்டுக்குப் போய் அவன் மனைவி பத்சேபாளோடிருக்கும்படிச் செய்ய தாவீது முயற்சி செய்தான். ஆனால் அவன் விசுவாசமுள்ள படை வீரனாயிருந்தபடியால் அவன் அப்படிச் செய்யவில்லை. தாவீது உரியாவைக் குடிக்கச் செய்தான், அப்படியும், அவன் தன் வீட்டுக்குச் செல்லவில்லை. ஏனெனில் போர்க்களத்தில் வீரர்கள் கடினமான சூழ்நிலைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும்போது தான் மட்டும் வீட்டுக்குப் போய் மனைவியுடன்

இருக்க அவன் விரும்பவில்லை. எனவே தாவீது உரியாவின் கையி லேயே தன்னுடைய அதிபதி யோவாபுக்கு ஒரு செய்தியனுப்பினான்: ''மும்முரமாய் நடக்கிற போர்முகத்திலே நீங்கள் உரியாவை நிறுத்தி, அவன் வெட்டுண்டு சாகும்படிக்கு, அவனைவிட்டுப் பின் வாங்குங் கள் என்று எழுதியிருந்தான்'' (2 சாமுவேல் 11:15).

தளபதி யோவாப் ராஜாவுக்கு பதில் செய்தி அனுப்பினான், அதில் போரைப் பற்றிய முழு விவரங்களையும் எழுதி, அதோடுகூட: ''உம்முடைய சேவகனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான்'' (21) என்று சொல்லச் சொன்னான். உரியா கொல்லப்பட்டான், எனவே தாவீது விபசார குற்றத்துக்கு மட்டுமல்ல, கொலைக்கும் குற்றவாளி யானான். இந்தச் சம்பவத்தைப் பற்றி பின்னால் நாளாகமத்தில் மறுபார்வையிடும்போது, தாவீதின் பாவத்தின் மையமாக உரியாவின் கொலை மீது கவனம் செலுத்தப்படுகிறது. அவன் ஒரு பொய்க்காக வாழும் குற்றவாளியானான். தாவீது தன் பாவத்தை ஒரு ஆண்டு முழுவதும் மூடி மறைத்தான், தனக்கு மட்டுமே தெரியும், வேறு யாருக்கும் தெரியாது, ஒருவேளை தன் நம்பிக்கைக்குரிய தளபதி யோவாபுக்கும் தெரிந்திருக்கக் கூடும் என்று எண்ணியிருந்தான். அப்படி மூடி மறைத்த ஆண்டு தாவீதின் வாழ்க்கையில் மகிழ்ச்சியற்ற ஆண்டாயிருந்திருக்கும் (அவனுடைய இருதயத்தைப் பற்றி வாசி யுங்கள் சங்கீதம் 32,51).

அவன் செய்த குற்றம் அவனை சரீரசுகவீனனாக்கியது. இறுதியில் அவன் கர்த்தரிடத்தில் திரும்பி, ''நான் என் அக்கிரமத்தை மறைக் காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்'' (சங்கீதம் 32:5) என்றான். தெய்வபக்தியுள்ள மக்கள் பாவமன்னிப்பின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று தாவீது சொன்னான். இது தெய்வபக்தியுள்ள மக்களை பாவம் செய்யலாம் என்று அறிவுறுத்துவதாக இருக்கிறதா? ஆம், நிச்சயமாய் அப்படியிருக்கிறது. தாவீது தன்னுடைய பாவங்களுக்கும் அவன் பாவத்தின் விளைவுகளுக்கும் பதிலளித்த முறையில் அவன் பெரியவன் என்று அழுத்தமாகக் கூறுவதில் ஒரு நியாயமிருக்கிறது.



**இருண்ட வானத்தில் ஒளிக்கதிர்கள்**

நாம் தோல்வியடையும்போது, நம்முடைய தோல்வியைப் பற்றி நாம் என்ன செய்கிறோம் - அதற்கு எப்படி பதில் செய்கிறோம் - என்பதே முக்கியமான காரியம். தாவீது பாவஞ்செய்திருந்தாலுங்கூட வேதாக மத்தில் நமக்கு மிகப் பெரிய எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகத் தாவீதின் வாழ்க்கை இருக்கிறது.

**கேள்வியும் பதிலும்**

2 சாமுவேல் 12ல், தைரியமிக்க நாத்தான் என்ற பெயர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி தாவீதின் ராஜ அவைக்கு வந்தார். அவர், திரளான ஆடுமாடுகளையுடைய ஒரு ஐசுவரியவானைப்பற்றியும், அதே பட்டணத்தில் ஒரு சின்ன ஆட்டுக்குட்டியை உடைய ஏழை மனிதனையும் பற்றிய கதையொன்று சொன்னார். அந்த ஏழை மனிதன், தன் சிறிய ஆட்டுக்குட்டியின் மேல் அதிக பாசம் வைத்திருந்தான்; அவனுடையப் பிள்ளைகளுக்கு அது ஒரு செல்லப் பிள்ளையாக இருந்தது. அந்த ஆட்டுக்குட்டி அவனுடைய மேசையில் சாப்பிட்டு அவனுடைய பாத்திரத்திலிருந்து குடித்தது. ஐசுவரியவானின் வீட்டில் தங்கும்படி ஒரு விருந்தாளி வந்த பொழுது, அவன் தன்னுடைய மிருகங்களில் ஒன்றைக் கொல்லாமல், அந்த ஏழை மனிதனின் ஒரே செல்ல ஆட்டை உணவுக்காக கொன்றான்.

தாவீது இதைக் கேட்டதும், கோபமடைந்து, ''இந்தக் காரியத்தைச் செய்தவன் மரணத்திற்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான்'' (5) அப்போது நாத்தான் தாவீதைச் சுட்டிக்காட்டி:

''நீயே அந்த மனுஷன்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் நான் உன்னை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, உன்னைச் சவுலின் கைக்குத் தப்பு வித்து, உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து... இஸ்ரவேல் வம்சத்தையும் யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித் தேன்; இது போதாதிருந்தால் இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன். கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக்

காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன? ஏத்தியனான உரியாவை நீ பட்டயத்தினால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக் கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்று போட்டாய்'' (2 சாமுவேல் 12:7-9).

ராஜசபையின் முன்பாக, நாத்தான் தாவீதுடைய பாவத்துடன் அவனை எதிர்த்தான். தாவீது ராஜாவாயிருந்தான், ''அவன் தலையை வெட்டிப்போடுங்கள்'' என்று அவனால் சொல்லியிருக்க முடியும் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. அதற்கு மாறாக, தாழ்மையாகத் தன் பாவத்தை அறிக்கையிட்டான்... தேவன் அவனை மன்னித்தார் (13), ஆனால் தாவீது இன்னும் தன்னுடைய பாவத்தின் பயங்கர விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.

**விளைவுகள்**

நாத்தான் இந்த தேவனுடைய வார்த்தைகளை தாவீதுக்கு எடுத்துச் சொன்னார்: ''பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகா திருக்கும்... இதோ நான் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப் பண்ணி...'' (10,11). தாவீது குடும்ப உறவில் பாவம் செய்ததானால், தேவன் அதில் அவனைத் தண்டித்தார். 2 சாமுவேலின் பின்வரும் அதிகாரங்களில் நாத்தானின் தீர்க்கதரிசனம் நிறைவேறு வதை நாம் காண்கிறோம்.

முதலாவது, அவனுக்கும் பத்சேபாளுக்கும் உண்டான பிள்ளை மரித்துப் போகும் என்று நாத்தான் சொன்னான். கர்த்தருக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து தாவீது உபவாசமிருந்து ஜெபித்தான். எனினும் பிள்ளை இன்னும் அதிகமாக வியாதிப்பட்டு ஏழாவது நாள் மரித்தது. தாவீது அதைக் கேள்விப்பட்டதும் எழுந்து, ஸ்நானம் பண்ணி உடைகளை மாற்றி கர்த்தருடைய ஆலயத்தில் ஆராதித்து, உண வருந்தினான். அவனுடைய நடத்தை அவனுடைய ஊழியக்காரருக்குப் புதிராயிருந்தது, எனினும் தாவீது பிள்ளை உயிரோடிருந்தபோது, தேவன் அவனுக்கு இரக்கங்காட்டி, அவனை விடுவிக்க ஒரு சந்தர்ப்பமிருந்தது என்று விளக்கமளித்தான். ஆனால் அவன்



மரித்தபோது அவனைத் திரும்பக் கொண்டுவர அவனால் எதுவும் செய்ய முடியாது, ''நான் அதனிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்தில் திரும்பி வரப்போகிறது இல்லை'' (23) என்றான்.

தேவன் ஒரு பிள்ளையின் உயிரை எடுத்துக் கொண்டால், அவன் அல்லது அவளின் முன்னாலே தீர்மானிக்கப்பட்ட நித்தியத்தைப் பற்றி நமக்கு எந்த சந்தேகமும் இருக்க வேண்டியதில்லை என்று இந்தக் கதை நமக்குச் சொல்லுகிறது. தாவீது, ''நான் அதினிடத்தில் போவேனே அல்லாமல்'' என்று சொனன்னபொழுது அந்த நம்பிக்கையை வெளிப் படுத்தினான். இந்த நடத்தைக்கும், பின்னால் தாவீதை தூய்மைப் படுத்தும் கதையில் அவனுடைய மகன் அப்சலோம் மரித்தான் என்ற செய்தியைக் கேட்டபொழுது அவனுக்கிருந்த பெருந்துக்கத்துக்கு முள்ள முரண்பாட்டைப் பாருங்கள்.

13ஆம் அதிகாரத்தையும், அதற்கு மேலும் நாம் வாசிக்கும்போது தாவீதின் பாவத்தின் விளைவு தொடர்ந்தது என்று நாம் காண்கிறோம். தாவீதின் மகன் அம்னோன் அவனுடைய பாதி சகோதரி தாமாரை மானபங்கப்படுத்தினான். அப்போது தாமாரின் கூடப்பிறந்தவனும் தாவீதின் கண்ணின் மணியைப் போலவும் இருந்த தாவீதின் மகன் அப்சலோம், அம்னோனைக் கொன்று உயிருக்குப் பயந்தோடி அகதி யாக வாழ்ந்தான். யோவாபு ஒருவகையாக மத்தியஸ்தம் செய்ததால் அப்சலோம் எருசலேமுக்குத் திரும்பிவர அனுமதித்த போதிலும், தாவீது அவனைப் பார்க்க மறுத்தான்.

தாவீது அப்சலோமோடு ஐக்கியமாயிருப்பதை விரும்பினாலும், அவனை மன்னித்து, அவர்கள் உறவைத் திரும்பிக் கொண்டு வரத் தவறினான் (பார்க்க 14:24). விரோதிக்கப்பட்டாலும் கோபமாயிருந் தாலும், அப்சலோம் தன் தகப்பனுக்கு எதிராக ஒரு கலகமுண்டாக்கி, கடைசியாக தாவீதை எருசலேமிலிருந்து வெளியே விரட்டினான். இந்த சதித்திட்டத்தோடு தாவீதின் நம்பிக்கைக்குப் பாத்திரனான ஆலோ சனைக்காரன் அகித்தோப்பேல் அப்சலோமுக்கு உதவி செய்தான். அவன் அப்சலோமிடம், தாவீது போருக்குத் தயாராகுமுன் அவனைத் தூண்டி விட, எருசலேமில் அரண்மனையின் மேல் வீட்டிலிருந்த அவனுடைய தகப்பனின் பத்து மறுமனையாட்டிகளையும் இஸ்ரவேலர்

எல்லாரும் பார்க்கும்படி மானபங்கப்படுத்தும்படி ஆலோசனை கூறினான். இந்த துரோக ஆலோசனையை அப்சலோம் பின்பற்றியது துக்கமான ஒரு காரியம்.

இந்தக் கொடுமையைப் பற்றி தாவீது கேள்விப்பட்டபோது - தனது தகப்பனைப் போலிருந்த நெருங்கிய நண்பனாக இருந்த ஒருவன் தன் மகனை, தற்காப்பற்ற இந்தப் பெண்களைத் தாக்க ஆலோசனையளித்த, அந்த துக்க சம்பவத்தை சங்கீதம் 55-இல் எழுதினான். சங்கீதம் 55-ஐ வாசியுங்கள். தாவீதின் இருதயம் அதிக அச்சத்தால் நிறைந்திருந்தது என்று நீங்கள் காண்பீர்கள். தாவீதின் வாழ்க்கையில் நடந்த இந்தக் கோர சம்பவத்தை 2 சாமுவேல் 11-18 அதிகாரங்களில் காணலாம்.

அப்சலோம் செய்த எல்லாக் காரியங்களையும் பொருட்படுத் தாமல், தாவீதினுடைய பராக்கிரமான மனிதர்களுக்கும் அப்சலோம் தலைமையிலான இஸ்ரவேலின் படைகளுக்கும் பெரிய யுத்தம் துவங்கப் போகும்போது தன்னுடைய மகனுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது என்று தாவீது தன்னுடைய படைகளுக்கு எச்சரிக்கைக் கொடுத்தான். தேவன் தாவீதுக்குக் கொடுத்த பலத்த அடி அப்சலோம் கொல்லப்பட்டான் என்ற செய்தி. அவனுடைய பிள்ளை மரண மடைந்தபோதும், அவன் அவைகளை எதிர்கொண்டது எப்படி என்று மறுபடியும் கவனியுங்கள். அப்சலோம் கொல்லப்பட்டபோது, தாவீதின் துயரம் அவனை மேற்கொண்டது. மறுபடியும் அவன், ‘‘என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயி ருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே, என்று சொல்லி அழுதான்’’ (2 சாமுவேல் 18:33). அப்சலோம் தன் சொந்தத் தகப்ப னுக்கு எதிராக ஒரு கலகத்தைத் துவங்கினான், தாவீது ஏன் இவ்விதமாக நடந்து கொண்டான்’? தன்னுடையப் பிள்ளையின் மரணத்தின்போது சொன்னதுபோல, ‘‘நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல்’’ என்று அப்சலோமுக்காகச் சொல்ல முடியாது. அதனால் தான் அப்சலோமுக்காக அவனுடைய துக்கம் பெரியதாயிருந்தது என்று நான் நினைக்கிறேன். அப்சலோம் தனது (தாவீதின்) மரணத்துக்காக எடுத்துக் கொள்ளப்பட்டான் என்று தாவீது நம்பியதால், தன்னை தேவன் அவனுக்குப் பதிலாக எடுத்திருக்கலாமே என்று நினைத்திருப்பான்.



தாவீதின் பாவத்தின் விளைவுகளைப்பற்றி நீங்கள் வாசிக்கும் போது நம்மில் ஒருவரும் இப்படி வீழ்ச்சியடைவதற்கு அப்பாற் பட்டவர்கள் அல்ல (1 கொரிந்தியர் 10:12,13) என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆவிக்குரிய அல்லது நெறி தவறும்போது, எப்படி அதோடு போராடி சாளிப்பது என்பதைத் தாவீது நமக்குக் காட்டினான் என்பதை மறவாதீர்கள். அப்பொழுது, ‘‘நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே’’ (யோவான் 8:11) என்று ஆண்டவராகிய இயேசு சொன்ன வார்த்தைகளின் மதிப்பை நாம் சரியாக உணர்ந்து கொள்வோம்.

அத்தியாயம் - 10

# மன்னிப்பளிப்பதினால் ஆசீர்வாதமளிப்பது

வேதாகமத்தின் உண்மைகளை நாம் இப்படி எழுதுவதில், எனக்கிருக்கும் நோக்கங்களில் ஒன்று, சம்பந்தப்படுத்துதல் (Correlation) என்ற ஒரு வார்த்தை வேதாகமத்தின் புத்தகங்கள் ஒவ்வொன்றும் எப்படி ஒன்றோடொன்று தொடர்புடையவை களாயிருக்கின்றன என்பதை நான் காட்ட விரும்புகிறேன், அல்லது வேதாகமத்தின் ஒற்றுமை. எடுத்துக்காட்டாக, வரலாற்றுப் புத்தகங் களை வாசித்தபின் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களை அடையும்போது, இந்தப் பெரிய தீர்க்கதரிசிகள் வாழ்ந்து, பிரசங்கித்து பாடுபட்டு மரணமடைந்தது பற்றி வரலாற்று சந்தர்ப்பம் ஏற்கெனவே இருக் கின்றன என்று தெரிந்து கொள்ளுவீர்கள். வரலாற்று இலக்கியம் வேதாகமத்தின் மிகப்பெரிய புத்தகமான சங்கீதங்களை குறிப்பாகத் தாவீதின் சங்கீதங்களைத் தெரிந்துகொள்ள உங்களை ஆயத்தப் படுத்துகிறது.

**சங்கீதங்களில் தேவனுடைய இருதயம்**

தாவீதின் சங்கீதங்களும் 2 சாமுவேல் 11-18 அதிகாரங்களும், அழகான ஒன்றாக இணைகின்றன. அவனுடைய வாழ்க்கையின் இந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்ட சங்கீதங்களில், நாம் தாவீதின்

பெருந்தன்மையை, இது அவன் ஆவிக்குரியபடியும், நெறிமுறைகளின் படியும் தோல்வியடைந்தபோது, அவனுடைய வாழ்க்கையின் கால மாயிருந்தாலுங்கூட நாம் புரிந்து கொள்ளுகிறோம்.

**சங்கீதம் 3**

தாவீது அப்சலோமிடமிருந்து தப்புவதற்காக வனாந்தரத்துக்கு ஓடியபொழுது, சீமோயி என்ற பெயருடைய ஒரு மனிதன் அவனைச் சபித்தான் (2 சாமுவேல் 16:5-8). தாவீதின் அதிபதி, ''அந்தச் செத்த நாய் என் ஆண்டவனை தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப் போடட்டும்'' (9) என்றான். எனினும் தாவீது, ''அவன் தூஷிக்கட்டும்; அப்படிச் செய்ய கர்த்தர் அவனுக்குக் கட்டளை யிட்டிருக்கிறார்'' (11) என்றான்.

தாவீது எருசலேமிலிருந்து பின்வாங்கிய பொழுது, 3-ஆம் சங்கீதத்தை எழுதினார். அது இவ்விதமாய்த் துவங்குகிறது, ''கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்! எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர். தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று, என் ஆத்துமாவைக் குறித்துச் சொல்லு கிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்'' (1,2). சீமேயி தாவீதைச் சபித்து அவன் மேல் கற்களையெரிந்தபொழுது இதைத்தான் அவன் சொன் னான். எனினும் தாவீது, ''ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவரு மாயிருக்கிறீர். நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார்'' என்று எழுதினான் (இது எப்படிப்பட்ட தெய்வபக்தியுள்ள ஒரு மனிதனாய் அவன் இருந்தான் என்பதைக் காட்டுகிறது.

அவன் தன்னுடைய கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்த பொழுது, தாவீதினால் அற்புதங்களை - ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கப்பட்டதை - அவனுடைய பாதையில் காண முடிந்தது. இவைகள் அவனுக்கு இப்பொழுதும் இனிவருங்காலத்திலும் தேவனை நம்புவதற்கு வேண்டிய உறுதியையும் விசுவாசத்தையும் கொடுத்தது.



**சங்கீதம் 4**

சங்கீதம் நான்கும் தாவீதின் வாழ்க்கையில் இந்தக் காலத்துக்குப் பொருந்துவதாயிருக்கிறது. நம்முடைய உணர்ச்சி காலநிலை இக் கட்டும் அல்லது அழுத்தமும் நிறைந்ததாயிருந்தால் நம்மால் தூங்க முடியாது என்று அவர் சொல்லுகிறார், ஒருவேளை இது சரியான காரியங்களை செய்வதைப் பற்றி ஒரு பெரிய தீர்மானத்தை எடுக்க வேண்டியிருப்பதால் இருக்கலாம். நடு இரவில் அவனால் தூங்க முடியாமலிருந்த பொழுது அவன் தன்னுடைய இருதயத்தில், ''நீதியின் பலிகளைச் செலுத்தி கர்த்தர் மேல் நம்பிக்கை''யாயிருக்கும்படித் தீர்மானித்தான் (5). நீதியான காரிங்களைச் செய்வதற்கு அவனுக்குத் தூண்டுதலாயிருந்தது அவனைச் சுற்றியிருந்த மக்கள், ''எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார்?'' (6) என்று சொல்லுபவர்களாயிருந்தால். நீதியான காரியத்தைச் செய்யும் ஒருவரை, அப்படிச் செய்யும்படி துரிதப்படுத்தப்பட்ட ஒருவரை அல்ல, தேடும் மக்களால் நாம் சூழப்பட்டிருக்கிறோம். அதையும், நீதியான காரியத்தைச் செய்ய நாம் செலவிடும் கிரயத்தையும் அவர்கள் பார்க்கும்போது, அவர்கள் பெரும் அளவில் ஆசீர்வதிக்கப்பட்டு, அவர்கள் கண்டவைகளால் தேவனுக்கு நேராய்த் திரும்புகிறார்கள்.

**சங்கீதம் 23**

சங்கீதம் 23:3இல், தாவீது, ''அவர் என் ஆத்துமாவைத் தேற்''றுகிறார் என்று சொல்லுகிறான். கர்த்தர் நம்மைக் கீழே படுக்கும்படி செய்து, நாம் அவருடைய ஆடுகளாயிருக்கிறோம், அவர் நம்முடைய மேய்ப்பராகவும் இருக்கிறார் என்ற உண்மையை ஒத்துக் கொள்ளும்பொழுது நாம் திரும்ப எழுந்திருக்கிறோம். எனினும் நாம் எழுந்து புல்லுள்ள இடங்களில் மேயும்போது, பச்சைப் புல்வெளி காப்பி நிறமாகிறது, பாத்திரம் நிரம்பி வழிகிறது. நாம் மேய்ப்பன் யாரென்றும், ஆடுகள் எவையென்றும் மறந்து போகும்போது, மீட்கப்படுவது அவசியம்.

தேவன் எப்படி நம்மை மீட்கிறார்? எளிதில் நடைமுறையில் செயல்படுத்தக் கூடிய முறையில் அவர் நம்மை மீட்கிறார். தாவீது இதை

இப்படியாகச் சொன்னார், ''தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதையில் நடத்துகிறார்'' (3). எழுப்புதல் என்பது ஒரு அழைப்பை ஏற்று அதன்படி ஒரு சபை ஆராதனையில் கலந்து கொள்ளுவதற்கும் அதிகப்படியானது. ஒரு பலிபீடத்தின் ஜெப அனுபவத்துக்கும் மேலானது. தேவன், ''நான் உன்னை இப்படியாக மீட்க்ப் போகிறேன். ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு, நீ வந்து என்னுடைய நீதியின் பாதையிலே நட. நீதியின் பாதையில் நீ நடக்கும்போது, அந்தப் பாதைகள் உன் ஆத்துமாவை மீட்கும் என்றார்.''

இதுதான் 2 சாமுவேல் 11-18 வசனங்களில் தாவீதின் வாழ்க்கையில் நடைபெற்றது என்பதை நாம் காண்கிறோம். தாவீது தேவனுக்குத் தன்னை ஒப்படைத்து, ''உம்முடைய நாமத்தினிமித்தம் நான் நீதியின் பாதைகளில் நடக்கிறேன்'' என்று சொன்னான். தேவனுடைய சீர்திருத்தத்திற்கு தாவீது செவிகொடுத்து, அவனுடைய பாவத்தின் எல்லா இதர விளைவுகளுக்கும் நீதியின் பாதையில் நடப்பதன்மூலம், தேவன் தாவீதினுடைய ஆத்துமாவை மீட்டார்.

தாவீது நாற்பது ஆண்டுகளாக ராஜாவாக இருந்தார் - அவர் பாவஞ்செய்ததற்கு பதினாறு ஆண்டுகளுக்கு முன்பாகவும், தேவன் அவருடைய ஆத்துமாவையும் ராஜ்ஜியத்தையும் மீட்டுக் கொடுத்த பின் இருபத்து நான்கு ஆண்டுகளும் - ராஜாவாயிருந்தார். எனினும், தாவீது தம்முடைய பாவத்தை அறிக்கை செய்து, மனந்திரும்பி, தேவனுடைய வழியை பின் பற்ற தம்மை ஒப்படைத்தப்பின் மட்டுமே மீட்படைந்தார்.

தனிப்பட்ட முறையில் பாவ அறிக்கையிட்டு உண்மையாக மனந்திரும்பும் தேவையுள்ளவர்களாயிருக்கிறீர்களா? அதாவது வெற்றிகரமாகத் தோல்வியடைவது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமா? தாவீதினுடைய எடுத்துக்காட்டைப் பின்பற்றி, உங்கள் பாவத்தை அறிக்கை செய்யும் வரையில், மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுவதின் ஆசீர்வாதத்தை ஒருபொழுதும் உங்களால் தெரிந்து கொள்ள முடியாது என்று நான் அன்போடும், நன்றியறிதலுடனும் உங்களுக்குச் சொல்லுகிறேன். தேவன் உங்கள் பாவத்தைப் பற்றி என்ன சொல்லுகிறாரோ, அதுவே பாவ அறிக்கை என்பதின் எளிய அர்த்தம்



என்பதை ஞாபகம் வைத்திருங்கள். உங்கள் பாவ அறிக்கைக்கு தாவீதின் வார்த்தைகள் வழி காட்டும்படி, 32, 51, 55, 23 ஆகிய சங்கீதங்களை வாசிக்கும்படி உங்களுக்கு ஊக்கமளிக்கிறேன். அப்பொழுது அவனைப் போலவே தேவனுடைய கிருபையினால் பாவமன்னிப் பளிக்கப்பட்ட ஆசீர்வாதத்தின் அனுபவத்தை நீங்கள் பெறுவீர்கள்.

**பாவமன்னிப்பின் பாடல்களைப் பாடுதல்**

''என்னுடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டனவா?'' என்று எப்பொழுதாவது உங்களைக் கேட்டிருக்கிறீர்களா? சிலர், ''உங்களுக்குத் தெரியும் ஏனென்றால், வேதாகமம் அப்படிச் சொல்லுகிறது: நான் அதை விசுவாசிக்கிறேன், அவ்வளவு தான்'' என்கிறார்கள. எனினும் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று தெரிந்துகொள்ள வேறோரு வழியிருக்கிறது: தேவன் உங்கள் குற்றங்களை நீக்கும்போது.

இன்று அநேக மனோதத்துவ சிகிச்சையளிப்பவர்கள் பாவப் பிரச்சினையை வேறோரு வழியில் இடைபடுகின்றனர். அவர்கள், '' குற்றம் என்று ஒரு காரியம் இருக்கக் கூடாது, ஏனெனில் சரி என்றோ தவறு என்றோ எந்தக் காரியமுமில்லை. நீங்கள் செய்யக் கூடாத காரியம் எதுவுமில்லை, செய்ய வேண்டாத காரியமும் எதுவுமில்லை. நெறி முறைகளில் பூரணத்துவம் எதுவுமில்லை. குற்றம் பிள்ளைகளுக் கானது ஏனென்றால் எது சரி, எது தவறு என்று சொல்லப் பிள்ளைகளை மட்டுமே அனுமதிக்கின்றனர். நீங்கள் செய்வது தவறு என்று சொல்ல யாரையும் அனுமதிக்காதீர்கள்'' என்கின்றனர். தங்கள் குற்றப் பிரச்சனையை இந்த வழியில் தீர்வு காண முயற்சி செய்யும் மக்களின் எண்ணிக்கையைப் பார்த்து நான் வியப்படைகிறேன்.

இதற்கு மாறாக, தாவீது முக்கியமாக, ''எனக்கு ஒரு குற்றப் பிரச்சனை இருக்கிறது ஏனென்றால் நான் ஒரு குற்றவாளி எனக்கு ஒரு குற்றப் பிரச்சனையிருக்கிறது. ஏனென்றால் நான் பாவம் செய்தேன்,'' என்று சொன்னார். குற்றப்பிரச்சனைக்கான தேவனுடைய தீர்வு, நாம் குற்றவாளிகள், நாம் பாவஞ்செய்தோம் என்று அறிக்கையிடுவதாகும். நாம் மனந்திரும்பி விட்டோம் பாவ அறிக்கை செய்து விட்டோம் என்று வெளிப்படுத்தி நீதிமானாயிருப்பதற்கான காரியங்களை மேற் கொண்டு, கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்கும்போது நம்முடைய

குற்றத்திற்கான தேவனுடைய தீர்வை புரிந்துகொண்டு அதை விசுவாசிக்கிறோம் என்று நாம் காட்டுகிறோம். நம்முடைய குற்றம் அப்பொழுதுதான் நீக்கப்படும் என்பதால், அப்பொழுது, மட்டுமே மன்னிக்கப்படுவதின் ஆசீர்வாத அனுபவத்தை நாம் பெறுவோம்.

சங்கீதம் 51 தாவீதினுடைய பாவத்தை அவர் அறிக்கையிடுவதை மட்டுமல்ல, இந்த மனிதர் மிக உயர்ந்தவர் என்று நாம் கண்டு கொள்ள உதவும் ஒரு ஜன்னல் வழி பார்ப்பது போலும் இருக்கிறது. முதலாவது தாவீது தம்முடைய பாவத்தின் மூலாதாரத்தைப் பற்றி தேவனிடம் ஜெபித்தார்: ''இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்தக் கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்'' (6). இந்த விண்ணப்பத்துக்குப் பதிலாக, தேவன் தாவீதுக்கு ஒரு வெளிப்படுத்தல் அளித்தார், எனவே அவர்: ''என் பாவம் எப்போதும் எனக்கு முன்பாக நிற்கிறது... இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்'' (3,5) என்று சொன்னார்.

அடுத்து தாவீதின் மிகப்பெரிய விண்ணப்பத்தை பார்ப்போம்: ''தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்'' (10). இந்த வசனத்தில் சிருஷ்டியும் எந்த வார்த்தை எபிரெய மொழியில் ''பரா''(bara) என்பதாகும். இதன் அர்த்தம், ''ஒன்றும் இல்லாமையிலிருந்து ஒன்றை உருவாக்குவது'' என்பதாகும். இது ஆதியாகமம் 1-ல் மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது, இங்கே 51-ஆம் சங்கீதத்தில் அது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கே அதன் அர்த்தம், தாவீது முக்கியமாக, ''கிரியை செய்ய உம்மிடம் ஒன்றுமில்லை. ஒன்று மில்லாமையிலிருந்து ஒன்றை உருவாக்கும்படி நான் உம்மைக் கேட்கிறேன். நான் பிறந்தபொழுது இல்லாத ஒன்றை எனக்குள் உருவாக்கும். என்னுடைய உள்ளான மனிதனில் நீர் சிருஷ்டிப்பின் ஒரு அற்புதத்தை நடைபெறச் செய்ய வேண்டும். உம்மை மகிமைப் படுத்தும் ஒரு வாழ்க்கை வாழ எனக்கிருக்கும் ஒரே நம்பிக்கை அது தான்'' என்று விண்ணப்பம் செய்வதைப் போலிருக்கிறது.

இந்த விண்ணப்பத்திற்கானப் பதில் தான் புதிய ஏற்பாட்டில் ''புதிதாகப் பிறப்பது'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு,



''மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்'' (யோவான் 3:6,7) என்று சொன்னார்.

அப்போஸ்தலர்கள் இந்த புதிதாய் பிறப்பதை சிருஷ்டி என்றழைக் கின்றனர்: ''ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக் கிறான்'' (2 கொரிந்தியர் 5:17). மறுபடியும் பிறந்த ஒரு ஆண் அல்லது பெண்ணின் உள்ளாக தேவன் ஏதோ ஒன்றை சிருஷ்டித்திருக்கிறார். இயேசு, ''நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்'' என்று சொன்னதற்கு ஒரு ஆயிரம் ஆண்டுகள் முன்னதாகவே தாவீது இந்த விண்ணப்பம் செய்தபொழுது, அவனுக்கு ஒரு தீர்க்கதரிசன ஆழ்ந்த அறிவு இருந்தது.

இந்த மீட்பைப் பெற தாவீதுக்கு தூண்டுதலளித்தது எது என்று கவனியுங்கள்: ''உமது இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும் அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்'' (சங்கீதம் 51:12,13). தாவீது தேவனுடைய வசனங்களை நேசித்தார் - அதைப் பிரசங்கிக்க, போதிக்க, பாட மிகவும் விருப்பமுடையவராயிருந்தார். கடந்த காலத்தில் அநேகமுறை அவர் செய்ததுபோல, அந்த வசனங்களுக்குக் காரணரானவரிடம் மற்ற பாவிகளை வழிநடத்த விருப்பமுடையவராய் இருந்தார்.

கடைசியாக, இந்த சங்கீதத்தின் இறுதியில் தாவீது காட்டிய அசாதாரண ஆழ்ந்த அறிவைக் கவனியுங்கள்: ''பலியை நீர் விரும்பு கிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல'' (16). வனாந்தரத்தில் ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி நாம் கற்றுக் கொண்டது ஞாபகமிருக்கிறதா? மக்கள் ஆராதனை செய்வதற்காக கூடாரத்துக்கு ஒரு மிருகத்தை எடுத்துச் சென்று தங்கள் பாவங்களுக்காக அதை ஒரு பலியாக அளிப்பார்கள். எந்த மிருகம் அல்லது மிருகங்களின் எண்ணிக்கை அவனது பாவத்தின் மிகுதி யையும் அந்த மனிதனுடைய பொருளாதார வசதியையும் பொறுத்தது.

ஒரு பெரிய மந்தைக் கூட்டத்தை, ஆராதிப்பதற்காகக் கூடாரத்திற்குத் தாவீதினால் கொண்டுபோக முடியும் என்பது அவனுக்குத் தெரியும், எனினும் தேவன் அதை விரும்பவில்லை என்பதும் அவனுக்குத் தெரியும். அதாவது தாவீது இவ்வளவு வார்த்தைகளில், ''தேவனே நீர் விரும்புவது இவைகளல்ல. என் உள்ளான மனிதனில் திடீர் மாற்றத்தை நீர் விரும்புகிறீர். உமக்கு முன்பாக நருங்குண்ட இருதயத்தையும் நொறுங்குண்ட ஆவியையும் நீர் விரும்புகிறீர்''. நொறுங்குண்ட என்ற சொல்லின் அர்த்தம், ''பாவத்துக்காக மிகவும் அதிகமாய் வருத்தப்படுகிறது'' என்பதாகும். தாவீது, ''தேவனே நீர் விரும்புவது அதுவே'' என்றார். எனவே அவர், என் உள்ளானவைகளை நொறுக்கும் ''என் உள்ளானவைகளைக் குணப்படுத்தும். நான் சரீரப்பிரகாரமாகப் பிறந்தபொழுது என்னிடம் இல்லாத ஒன்றை எனக்குள் சிருஷ்டியும், அப்பொழுது நான் உமக்கு மகிமையுண்டாக்கும் ஒரு வாழ்க்கையை வாழ்வேன்,'' என்று சொன்னார்.

மறுபடியும் இதை நான் சொல்லுகிறேன், நீங்கள் பாவஞ்செய்து, உங்கள் பாவத்தை எப்படி அறிக்கையிடுவது என்று தெரியாவிட்டால், உங்கள் ஆத்துமா மீட்கப்படுவது உங்களுக்கு அவசியமானால், மீட்கப்படுவது எப்படி என்று உங்களுக்குத் தெரியாமலிருப்பதால் சங்கீதம் 51-ஐ வாசியுங்கள். அப்படிச் செய்தால், உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பும் அழகிய செயலை செய்வீர்கள்.

அத்தியாயம் - 11

# பாவத்தைப் பற்றிய மூன்று சத்தியங்களும் இரட்சிப்பைப் பற்றிய மூன்று சத்தியங்களும்

தாவீதின் பாவம் என்ற பொருள் பற்றி இன்னும் ஒரு அத்தியாயத்தை எழுத நான் விரும்புகிறேன். நான் இதற்கு அதிக அழுத்தம் கொடுக்க விரும்புகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம், எனினும் வேதவசனங்களே தாவீதின் பாவத்துக்கு அதிக அழுத்தம் கொடுக்கிறது என்பதினாலேயே நான் அப்படிக் கூற விரும்புகிறேன்.



2 சாமுவேல் புத்தகத்தில் தேவன் ஏன் தாவீதின் பாவத்துக்கு அதிக அழுத்தம் கொடுத்தார் என்று கண்டுகொள்ள நாம் முயற்சிக்க வேண்டும். இதனால் பாவத்தைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிற ஆவிக்குரிய பாடங்களைக் கற்று, நாம் பாவம் செய்யும்போது அந்தப் பாடங்களைச் செயல்படுத்தலாம்.

### பாவத்தைப் பற்றி இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியது

தாவீதினுடைய பாவத்தைப் பற்றிய கதையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் முக்கிய பாடங்களில் ஒன்று, அவன் எப்படிக் குற்றப் பிரச்சனையை எதிர்கொண்டான் என்பது. நான் ஒரு எடுத்துக் காட்டை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

மனிதனுடைய மனதுக்கு இரண்டு பரிமாணங்கள் இருக்கின்றன: உணர்வு, உள்ளுணர்வு. நாம் எல்லாரும் முரண்பாடுள்ள எண்ணங்களோடு போராடுகிறோம். நம்முடைய மனதில் உணர்வுகளிருக்கும் போது, நமக்கு, ''கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் கவலைப்படப் போவதில்லை; என் மேய்ப்பரில் எனக்கு மிகப்பெரிய நம்பிக்கை இருக்கிறது'' என்பது போன்ற நல்ல ஊக்கமளிக்கும் நினைவுகள் உண்டாகின்றன. எனினும் அடிக்கடி, அடுத்த முப்பது வினாடிகளில் நாம் கவலைப்பட ஆரம்பிக்கிறோம். இதன் விளைவாக நமக்கு பெருங்குடல் புண்(colitis), குடற்புண் போன்ற நோய்கள் உண்டாகின்றன. நாம் கவலைப்படுவர்களாக இருக்கக் கூடாது, ஏனென்றால் தேவன் நம் மேய்ப்பராயிருக்கிறார், எனினும் நாம் கவலைப்படுகிறோம்.

இப்படிப்பட்ட மாறுபாடான எண்ணங்களை நாம் எப்படிச் சந்திப்பது? மாறுபாடான இந்த இரண்டு எண்ணங்களுக்கிடையே நம்முடைய மனதுகளில் ஒரு தடுப்புச் சுவர் கட்டுகிறோம். ஒரு பிரிவில் விசுவாசத்தோடு, ''கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்'' என்று நாம் சொல்வோம். இதைச் சொல்லும்போது, நாம் கவலைப்படுவதால் நமக்கு குடற்புண் ஏற்படுகிறது என்பதை ஞாபகத்தில் வைக்க மறந்து விடுகிறோம். நம்முடைய மனதுகளில் அடுத்த பிரிவில், நாம் கவலைப்படுகிறோம். நம் விசுவாசம் இருக்கிறது என்பதை ஞாபகத்துக்

கொண்டுவருவதுமில்லை! இது நம்மை ஆவிக்குரிய மனச்சிதைவுக்கு வழிவகுக்கிறது.

ஆவிக்குரிய மனச் சிதைவு உணர்வுள்ள மனதின் ஒரு பெரிய பிரச்சனையல்ல. ஆனால், உள்ளுணர்வு மனதில் அது ஒரு ஆபத்தான பிரச்சனையாகி விடுகிறது, ஏனென்றால், ஒவ்வொரு உணர்வுள்ள எண்ணங்களும், நம்முடைய உள்ளுணர்வுள்ள மனதுக்குள் சென்று அங்கே நிரந்தரமாக தங்கி விடுகிறது. எனவே நம்முடைய மனப் போராட்டங்கள் உள்ளுணர்வு மனதில் சென்று, வெளியே கொண்டு வரப்படாத போராட்டமாக அங்கே தேங்கியிருக்கின்றன. இது ஒரு ஆபத்தான பிரச்சினையாக மாறிவிடக் கூடும். ஏனென்றால், உள்ளு ணர்வு மனது ஒரு கோப்பையைப் போலிருக்கிறது. அது மனப் போராட்டங்களால் நிறையும்போது, அது நம்முடைய சரீரங்களுக்கு செய்தியனுப்பி, நாம் சரீர சம்பந்தமான நோயின் அறிகுறிகளால் பாதிக்கப்படுகிறோம்.

வேதவசனங்கள் மனப் போராட்டங்களை நாம் சேமித்து வைக் காமல், அவைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்று சொல்லுகின்றன: கண்ணானது சரீரத்தின் விளக்காயிருப்பதால், தேவன் விரும்பியபடி நம்முடைய கண்ணோட்டம் அல்லது மன அமைப்பு இருந்து, நாம் காண்கிறபடி வாழ்வோமானால், நம்முடைய முழு சரீரமும் வெளிச்சத் தால் நிறைந்திருக்கும் (மத்தேயு 6:22). அதாவது, நாம் விசுவாசிக்கும் வழியில் நடக்துகொள்ளும்போது, நம்முடைய மனப் போராட்டங் களுக்கு நாம் தீர்வுகாண்கிறோம்.

எது சரி, எது தவறு என்று தேவனுடைய தரத்தை நாம் ஒத்துக் கொள்ளும்போது, அந்தத்தகுதி நிலை நாம் பாவிகள் என்றும், நம்முடைய பாவத்துக்காக நம்மைக் குற்றவாளி என்று தீர்ப்பளித் தாலுங்கூட, நம்முடைய குற்றப் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகாண முடியும் என்று தாவீது நம்மிடம் சொல்லுகிறார். நம்முடைய பாவத்தை நாம் அறிக்கையிடும்பொழுது, தேவன் நம்முடைய ஆத்துமாவை மீட்கிறார். தாவீதின் பாவம் பற்றிய கதையிலிருந்து, நாம் தெரிந்து கொள்ளும் செயல்முறைகளில் மிகவும் முக்கியமானவைகளில் இது ஒன்று.



**பாவத்தைப் பற்றிய மூன்று சத்தியங்கள்**

தாவீதின் வாழ்க்கையின் இந்த வெறுக்கத்தக்க அத்தியாயத்தின் மற்றொரு நோக்கம், பாவம் பயங்கர விளைவுகளையுடையது என்பதாகும். 2 சாமுவேல் 11-18 அதிகாரங்களில் தாவீது சகப்பான விளைவுகளை அனுபவிக்க வேண்டியிருந்தது என்று காண்கிறோம். அவனுடைய கதை பாவத்தைப் பற்றிய மூன்று சத்தியங்களையும், இரட்சிப்பைப்பற்றிய மூன்று சத்தியங்களையும் எடுத்துக் காட்டுகிறது.

**பாவத்திற்குத் தண்டனை இருக்கிறது**

முதலாவதாகப் பாவத்திற்குத் தண்டனை இருக்கிறது. பாவம் எப்பொழுதும் எதிர்காலத் தண்டனைக்கும், நிகழ்காலத் தண்டனை க்கும் வழி நடத்துகிறது. இதனாலேயே தேவன் பரலோகத்தை வெறுமையாக்கி, இயேசு கிறிஸ்துவை உலகத்தினுள் அனுப்பினார். எதிர்கால பாவத்தின் தண்டனையை (நரகம்) நம்முடைய வாழ்க்கை களிலிருந்து அகற்றும் ஒரே வழி இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் மீதான மரணத்தை விசுவாசிப்பதாகும் (பார்க்க யோவான் 3:16).

எனினும், வேத வசனங்கள் இரட்சிப்பு என்ற சொல்லைப் பயன்படுத்தும் போது ஐந்தில் மூன்று பகுதியில் அது பாவத்தின் எதிர்கால தண்டனையைப் பற்றியல்ல; நிகழ்கால பாவத்தின் தண்டனையை அகற்றுவதைப் பற்றியே கூறுகிறது. எடுத்துக்காட்டாக, பயனற்ற ஒரு வாழ்க்கையின் தண்டனையிலிருந்து நாம் இரட்சிக்கப் படுகிறோம். இயேசு நரகத்தைப் பற்றி பேசியபொழுது, அவர் ''ககென்னா''(Gehenna) என்ற கிரேக்கச் சொல்லை பயன்படுத்தினார். ககென்னா எருசலேமுக்கு வெளியே குப்பைகளைக் கொட்டும் ஒரு மிகப்பெரிய இடம்; ''அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்'' (மாற்கு 9:44). மக்கள் ககென்னாவைப் பற்றி நினைக்கும்போது, குப்பைகளைப் பற்றி நினைத்தனர். அந்தக் குப்பை, நரகத்தைப் பற்றிய பரிதாபமான உண்மை என்று இயேசு போதித்தார்.

பாவத்தின் நிகழ்காலத் தண்டனையில் மற்றொன்று அடிமைத் தனம். மக்கள் தாங்கள் செய்ய வேண்டும் என்று விரும்புவதைச் செய் வதில்லை; மக்கள் செய்ய வேண்டியதை, செய்ய வேண்டுமென்று

கட்டாயப்படுத்தப்பட்டவைகளைச் செய்கிறார்கள். மக்கள் வேதாகமம் பாவம் என்று பட்டியலிட்ட நிர்ப்பந்தங்களாலும் பழக்கங்களினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றனர். இரட்சிப்பு பாவத்தின் அடிமைத்தனத் திலிருந்து மக்களை விடுதலை செய்கிறது (பார்க்க யோவான் 8:30-35; மத்தேயு 1:21).

**பாவத்தின் சக்தி**

இரண்டாவதாக, பாவத்திற்கு மிகப்பெரிய சக்தியிருக்கிறது. பவுல் 1 கொரிந்தியர் 10:12ல் எழுதியவற்றை தாவீதின் முழுக்கதையும் நமக்குச் சொல்லுகிறது என்று நான் நம்புகிறேன்: ''இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கை யாயிருக்கக்கடவன்.'' அடுத்த வசனத்தில் தாவீதைப் போன்ற ஒரு மனிதன் கீழே கொண்டுவரப்பட முடியுமானால், நம்மால் அதை எதிர்க்க முடியும் என்று நினைப்பதற்கு நாம் எம்மாத்திரம்? பாவத்தின் சக்தியை ஒரு பொழுதும் தவறாக எடைபோடாதீர்கள்.

**பாவத்தின் விலை**

மூன்றாவதாக, பாவத்துக்கு மிக உயர்ந்த விலை இருக்கிறது. பவுல் ''பாவத்தின் சம்பளம் மரணம்'' (ரோமர் 6:23) என்று நமக்குச் சொல்லுகிறார். பவுல் சொற்படியான மரணத்தை மட்டுமல்லாமல், அதன் விளைவுகளையும் பற்றி சொல்லுகிறார் - இறுதியில் பாவி எப்பொழுதும் உட்கொள்ள வேண்டிய கசப்பான அந்த மூலிகைகளைப் பற்றி சொல்லுகிறார். பாவத்துக்கு அதன் தழும்புகளும் கறைகளும் உண்டு, இந்தப் பாவக்கறைகள், தழும்புகள் ஆகியவைகளில் சில முந்திய நிலைக்குக் கொண்டுவரமுடியாததும் மாற்றப்படக் கூடாதது மாகும்.

**இரட்சிப்பைப்பற்றிய மூன்று சத்தியங்கள்**

ஒரு நகை வியாபாரி தன்னுடைய வைரங்களை காட்டுவதற்குக் கறுப்பு நிற வெல்வெட் துணியைப் பின்னணியாக வைப்பது போல, பாவத்தின் இருண்ட தண்டனை, சக்தி, விலை ஆகியவை இரட்சிப்பின் மூன்று சத்தியங்களையும் இன்னும் அதிகமாகப் பிரகாசிக்கச் செய்கிறது.



**இயேசு பாவத்தின் தண்டனையை நீக்கினார்**

முதலாவது, இயேசு கிறிஸ்து பாவத்தின் தண்டனையை நீக்கிப் போட்டார். வேதவசனங்கள் இதை ''சுவிசேஷம்'' அல்லது ''நற்செய்தி'' என்று அழைக்கிறது. இயேசு நிக்கொதேமுவிடம் அநேக வார்த்தை களில் இப்படிச் சொன்னார், ''நான் தேவனுடைய ஒரே குமாரனும், தேவனுடைய ஒரே தீர்வாகவும், தேவனுடைய ஒரே இரட்சகருமாயிருக் கிறேன். பிதாவுக்கு வேறு ஒரு தீர்வோ, வேறு ஒரு இரட்சகரோ இல்லை'' (பார்க்க யோவான் 3:14-18). இயேசு சொன்னதை நீங்கள் உண்மை யாகக் கேட்கும்பொழுது, மற்ற எல்லா சமயங்களையும் அது பயனற்ற தாக்குகிறது என்று தெரிந்து கொள்ளுவீர்கள். நீங்கள் ஒன்றில் இயேசுவை விசுவாசிப்பீர்கள் அல்லது விசுவாசிக்கமாட்டீர்கள். இயேசு சொல்லியவைகளில் மிகவும் உறுதியான வாக்கியங்கள் இவை.

**பரிசுத்த ஆவியானவரால் பாவத்தின் சக்தியின் மேல் வெற்றி பெற முடியும்**

இரண்டாவதாக, உங்களுடைய வாழ்க்கையிலும் என்னுடைய வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியானவர் பாவத்தின் சக்தியைத் தடை செய்ய முடியும்.

1 யோவான் 4:4-ல் அப்போஸ்தலர் யோவான், ''உலகத்திலிருக் கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்'' என்று சொல்லுகிறார். தேவனுடைய வல்லமைக்கு அடுத்தபடியாக உலகத்தில் பெரிய வல்லமை எதுவுமில்லை. பாவம், தீமை, சாத்தான் இவைகளின் சக்தி இதற்கு இணையானதல்ல. எனினும் நற்செய்தி என்னவென்றால் சாத்தான், தீமை, பாவம் இவைகளின் சக்தியைவிட தேவனுடைய வல்லமை மிகப் பெரியது என்பது. அப்போஸ்தலர் பவுல், தேவனுடைய கிருபையை நாம் உரிமையுடன் எடுத்துக் கொள்ளும்பொழுது, நம்முடைய வாழ்க்கையில் பாவத்தின் சக்தியின்மீது நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாய் இருப்போம் (பார்க்க: ரோமர் 8:37-39) என்று சொல்லுகிறார்.

**நீதிமானாக்கப்படுதல் நம்முடைய பாவத்தை அவர் பார்வையிலிருந்து நீக்குகிறது**

இரட்சிப்பைப் பற்றிய மூன்றாவது சத்தியத்தில் கொஞ்சம் அதிகமான சிக்கலுள்ளது. ஏனென்றால் அது பாவத்தின் கறைகள், தழும்புகள், விலை அட்டவணை ஆகியவைகயோடு தொடர்புடையது. தேவனுடைய பார்வையில், பாவத்தின் கறைகளும் கூட மன்னிக்கப் படுதலால் கழுவப்படுகிறது. தாவீது இன்னொரு சங்கீதத்தில் எழுதியது போல, ''மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்'' (சங்கீதம் 103:12; மீகா 7:19). நீதிமானாக்கப்படுதல் என்ற சொல், வேதாகமத்திலுள்ள வார்த்தைகளில் மிகவும் அழகான வார்த்தைகளில் ஒன்று. இதன் அர்த்தம், நம்முடைய பாவத்தை நாம் அறிக்கையிட்டு மனந்திரும்பும்போது, தேவனைப் பொறுத்தவரையில், நம்முடைய பாவம் செய்யப்படவேயில்லை! நம்முடைய பாவம் வெறுமனே மன்னிக்கப்பட்டது என்பதல்ல; நம்முடைய பாவம் நீக்கப்பட்டது மட்டுமல்ல; அது போய் விட்டது. அது நான் பாவமே செய்யவில்லை என்பதைப் போன்றது.

எனினும், நீதிமானாக்கப்படுதல் இரண்டு பரிமாணங்களில் வருகிறது. சிலநேரங்களில் மனித அளவில் கறைகளும் தழும்புகளும் முன் நிலைமைக்கு வர முடியாதவை. ஒரு மனிதன் ஒரு கொலை செய்தபின் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், தேவனுடைய பார்வையில் அவன் அல்லது அவள் பாவம் செய்யவே இல்லை அல்லது அந்தக் கொலையை செய்யவில்லை என்பது போலாகிறது. கிறிஸ்துவில் அவர்களின் விசுவாசம் அவர்கள் தண்டனை பெறாமல் விடுவிக்கப் படலாம் என்ற அர்த்தமுடையதா? இல்லை. அவர்கள் இன்னும் கிரயம் செலுத்த வேண்டிய விளைவுகள் இருக்கின்றன.

ஒரு முறை எண்பத்து மூன்று வயதுடைய ஒருவருடைய வீட்டுக்கு நான் அழைக்கப்பட்டேன். அவர் எண்பத்து இரண்டாம் வயதில் மனமாற்றமடைந்தவர். இது மிகவும் அசாதாரணமானது. அவருடைய மனைவி என்னையழைத்து,'' நீங்கள் வந்து என் கணவரிடம் பேச வேண்டும். அவர் உட்கார்ந்து அழுகிறார். அதைப் பற்றி அவர் பேசுவதேயில்லை'' என்று சொன்னார்கள். தம்முடைய உணர்ச்சிகளை கடைசியாக அவரால் கட்டுப்படுத்த முடிந்ததும், அவர் ''என் பிள்ளைகள்! என் பிள்ளைகள்! என் பிள்ளைகள்!'' என்றார். நான், ''உங்கள் பிள்ளைகளைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்'' என்று கேட்டேன். அவர் தான் அவர்களை பயங்கரமாக நடத்தியதைப் பற்றி என்னிடம் சொன்னார். அவர்களில் இருவர் மனநல மருத்துவமனையில் இருந்தனர். அவருடைய கருத்துப்படி, அவர்களுடைய வாழ்க்கைகளை பாழாக்கியதற்கு அவரே பொறுப்பாயிருந்தார். இந்தத் தகப்பன் தன்னுடைய பார்வையில் உறுதியாக மனமாற்றமடைந்து விட்டதால், அவரில் கறைகள், தண்டனைகள் அல்லது தழும்புகள் எதுவுமில்லை. எனினும், அவருடைய பிள்ளைகளின் தழும்புகளும், கறைகளும் இன்னும் உண்மையாகவே இருக்கிறவை.

நாம் திரும்பப் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியாத சில காரியங்கள் இருக்கின்றன. (உடைத்துக் கலக்கிய முட்டையை நம்மால் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியாது). பாவத்தின் விலை அதிகமானது. அதன் தழும்புகள் மாறி பழைய நிலைக்கு வர முடியாது. இதனால் தான், அப்போஸ்தலர் பேதுரு தம்முடைய முதல் நிருபத்தில், ''நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுது கிறேன்'' (1 யோவான் 2:1) என்று கூறுகிறார்.

பாவத்தைப் பற்றி ஏதாவது நன்மை அல்லது விநோதமான காரியம் இருக்கிறது என்ற எண்ணத்தை இளைஞர்களுக்குக் கொடுப்பது ஒரு தவறான கருத்தாகும். பாவத்தை அல்லது அதன் விளைவுகளைப் பற்றி எந்த நல்ல காரியமுமில்லை! ஆம், தாவீது செய்தது போல், பாவத்தினுடைய விளைவுகளுக்கு நாம் பதிலளிக்கும் போது, தேவன் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் மேம்படுத்துவார். தேவனால் அநேக தழும்புகளைக் குணமாக்கவும் கூடும். எனினும் சில கறைகளும் தழும்புகளும் திரும்பவும் மாற்றக் கூடாதவை, திரும்பவும் பெற்றுக் கொள்ளக் கூடாதவை. இதனால் தான் வேத வசனங்கள் பாவம் செய்யாமலிருப்பது நல்லது என்று சொல்லுகின்றன. விபசாரத்தில் பிடிபட்டப் பெண்ணிடம், ''நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை,'' என்றும், ''நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே,'' என்று

சொன்னார் (யோவான் 8:11). ஏனெனில் அந்தப் பெண்ணின் மீது அவர் அன்புகூர்ந்தார். பாவத்தில் வாழ்வதினால் நன்மையான காரியம் இருக்கிறதென்றோ, அதன்பின் பாவ வாழ்க்கையிலிருந்து இரட்சிக்கப் பட முடியும் என்றோ உங்கள் பிள்ளைகளுக்கு அபிப்பிராயம் கொடுக் காதீர்கள்.

இன்று இயேசு கிறிஸ்துவுக்குச் சீஷர்கள் என்று உரிமை கொண்டாடும் மக்களுக்குள் பாவம் என்ற தொற்றுவியாதி இருக்கிறது. தாவீதினுடைய பாவத்தைப் பற்றிய கதை மூலமாக, இன்று இயேசு கிறிஸ்துவின், ‘‘போ, இனிப் பாவஞ்செய்யாதே’’ என்ற இந்த வார்த்தை களை நாம் எல்லாரும் கேட்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.